10 APR 1946

காரியத்தில் ஈடுபடுதல்

நேருக்கு நேராகவோ டெலிபோன் மூலமோ அலுவல்களை கவனிப்பதும் ஒரு காரியாலயத்தில் எழுத்து வேலையைப் போல் சகஜமாக நடப்பது தான்.

சோம்பல் காரணமாகச் சில வேலையில் ஈடுபட முடிவதில்லை. இதனாலேயேதான் வேலை மும்முரமாகவுள்ளவர்களின் மேசை மேல் ஒரு கோப்பை புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேனீரைக் காணலாம். சோம்பலைப் போக்கும் இதன் புத்தப் புதுமை ஒரு நிர்வாகி திட்டம் வகுக்கவும் மற்றவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்யவும் உதவுகிறது.

இந்தியா பூராவுமுள்ள நகரங்களிலுள்ள எங்கள் டெப்போக்களுக்கு தோட்டத்திலிருந்து நேராக வந்த தேயிலை அடிக்கடி அனுப்பப் படுகிறது.

இக் காரணத்தாலேயே எப்போதும் பறித்த போதுள்ள புதுமையோடு கூடிய ப்ரூக் பாண்ட் தேயிலையை உங்களுக்கு வழங்க முடிகிறது.

பறித்த போதுள்ள புதுமையோடு வந்து சேருகிறது.

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.

உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.

Vasantham, March 1946.

Thousands of Indians and British
Soldiers on occupational duties
are still longing for more
AMENITIES

His Excellency The Governor's Amenities and Relief Fund
Earnestly appeals for the

FURTHER SUBSCRIPTIONS NEEDED

to keep our men
as happy and comfortable as possible

Please earmark your subscriptions
"**Amenities and Relief Fund**" and

Send them to the Honorary Treasurer
Governor's Amenities & Relief Fund
C/o Imperial Bank of India, First line Beach, MADRAS

மிஸ்டர் ஜி. டி. பிர்லா

"இன்னுங் கொஞ்ச காலத்தில் தேசீய ஸர்க்கார் ஒன்று அதிகாரததுக்கு வருமென்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி அது வரும்போது, பணம் சேர்தது வைத்து அதை ஸர்க்காருக்குக் கடன் கொடுப்பதானது தேசீய திட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கப் போகிறது. இவ்விதமாக தேசத்துக்குச் சேமநிதி ஒன்று உண்டாகிறது. இதனால், பணத்தை வட்டிக்குப் போடடுவைப்பவருக்கு அப் பணம பத்திரமாயிருந்து லாபத்தோடு திரும்பி வருவதுமல்லாமல், பொதுஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பெரிய திட்டங்கள் போட தேசீய ஸர்க்காருக்குப் பணமும் கிடைக்கிறது. ஆகையால், பெரிய அளவிலோ சிறிய அளவிலோ பொருள்களைக் கிரயத்துக்கு வாங்கக்கூடிய சக்தியை உபரியாக உடையவர்கள் பணத்தைச் சேர்த்து அதை வட்டிக்குப் போட்டு வைக்கத்தாங்களாகவே எல்லாவிதமான முயற்சியும் செய்யவேண்டும்."

பிர்லா ப்ரதர்ஸ், லிமிடெட் என்னும் ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரெக்டரும், யுனைடெட் கமெர்ஷியல் பாங்க் லிமிடெட் என்னும் ஸ்தாபனத்தின் அக்கிராசனாதிபதியும் ஆகிய மிஸ்டர் ஜி. டி. பிர்லா.

நாஷனல் ஸேவிங்ஸ்

AC 2-A-TM

அனுப்பிய செய்தி

பார்த்ததும் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள்

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸேர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்களுக்கு வாங்கலாம்.

2 எந்த ஒரு நபரும் 5000 ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது. இவை மிகச் சிறந்தவைகளான படியால், எல்லாருக்கும் கிடைக்கும்பொருட்டு ஒருவருக்கு அவைகளை இன்ன மதிப்புவரையில்தான் கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டுபேர் கூட்டாக 10,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப்போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகி விடுகிறது

4. உரிய காலத்தில் இவைகளினால் கிடைக்கும் லாபம் $4\frac{1}{6}$ சதவீதம் தனிவட்டியாகும்.

5. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

6 இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக்கொள்ளலாம்; ஆனால், நீர் இவைகளை ஷெடி காலம் முழுவதும் வட்டிக்கு விட்டு வைத்திருந்தால், உமக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

7. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாமபுகள் வாங்கலாம், சேர்க்கப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக்கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக்கொள்ளலாம்.

8. இந்த ஸெர்டிபிகேட்டுகள் ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உமது பணத்திலிருந்து 50 சதவீதம் லாபம் கிடைக்கும்படிச் செய்துகொள்ளவும்

ஸெர்டிபிகேட்டுகள் வாங்கவும்

March, 1946

பட்டு

என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு   கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதருஸ்

வசந்தம்

மலர் 4	பார்த்திப ஹு பங்குனி மீ	இதழ் 12

பொருளடக்கம்

மலர் மணம்	...	... ...	1
வாடின தாமரை	...	சி. ஆர். ராமசாமி	3
குழந்தை	...	பாரதி ...	8
தெய்வ நியதி	...	கு. பா. சேது அம்மாள் ...	9
பிரிந்த பாதை	...	எஸ். ஏ. மருதையன் ...	16
பிரிவு	...	பாரதி ...	20
சாவித்திரி	...	ஆர். ஷண்முகசுந்தரம் ...	21
முத்து வியாபாரம்	...	வித்வான் அ. கிருஷ்ண மூர்த்தி ...	31
கஷ்டமான கூட்டுறவு	...	ரா. நா ...	40
மூக்கு	...	" சுகி " ...	42
தற்காப்புப் பயிற்சி	...	சு. கிருஷ்ணராவ் டி. எஸ். சங்கரன் ...	47
எதிர் வெள்ளம்	...	கோமதி சுப்பிரமணியம் ...	57
கலைக் கோயில்	...	சுவாமி சுத்தானந்த பாரதியார் ...	64
புத்தக ஆராய்ச்சி	...	... ...	72
கண்ணம்மா	...	கே. விஜயராகவன் ...	73
காக்கை உலகம்	...	டி. சி. ராமசாமி ...	78
தாமரை பூத்த தடாகம்	...	எஸ். ரங்கசாமி ...	80
அமர நினைவு	...	கோமதி சுவாமிநாதன் ...	81

'வசந்தத்'தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.



பிஸி. இரண்டாம் நூற்றுண்டில் ஸ்நானம் சாவகாசமாக செய்து இன்புற வேண்டிய ஓர் முக்கிய காரியமாயிருந்தது. கல்லில் செதுக்கின மஞ்சத்தின் மீது இராஜ வம்ச ரமணிகள் சொகுசாக சாய்ந்து கொண்டு வீற்றிருக்க, தாதிமார்கள் ஜலத்தில் ஊற வைத்து சுத்தமான நுரை வரும்படி செய்துள்ள ஸோப்புக் காய்கள் தேய்த்து அவர்களை ஸ்நானம் செய்வித்து வந்தனர்.

இன்றோ இன்னும் மேலானதும் அதிக சௌகரியமான வழி தான் எல்லோருக்குமிருக்கிறதே; அதாவது ஹமாம் ஸோப்பு! ஹமாமின் நறுமணங் கமழும் ஏராளமான நுரையானது மயிர்க்கண்களினுள் ஊடுருவிப் பாய்ந்து நன்கு சுத்தம் செய்வதோடு களைப்பை நீக்கி மட்டற்ற உற்சாகமும் சுகமும் அளிக்கவும் செய்கிறது.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா

பிக் பஜார், பாலக்காடு





நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

வசந்த காலம் இளநகை குலுங்க இளந்தென்றலுடன் ஆரம்பமாகிறது. தளிர்களும், மொக்குகளும் பூரிக்கின்றன. பூக்களும் புன்னகை புரிகின்றன. எங்கும் மகிழ்ச்சியையும், மனோகர மணத்தையும், வசந்தம் பரப்புகின்றது. இளவேனிலின் இன்பத்தை வாழ்க்கையில் நிரப்ப வேணும் என்பதே நமது விருப்பம்.

முகப்பு ஒரே அலங்கார மயமாகத் திகழ்வதைக் காணலாம்.

இந்த இதழில் அபூர்வமான கதைகளை, சிறுகதை ஆசிரியர்கள் அளித்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி. கு. ப. சேதுஅம்மாள் உணர்ச்சிகளை அற்புதமான உயிர்க் கனவுகளாகத் தீட்டுவதில் பெயர் பெற்றவர். போகபோக்கியங்களைத் துறந்து, அன்புக்காக வாழ்ந்த அண்ணல் புத்தரது வாழ்வின் ஒரு சாயலைப் படம்பிடித்திருக்கிறார்.

இன்றையப் பெண் எழுத்தாளர்களில் முன்னணிக்கு வந்து கொண்டிருப்பவர்களில் ஸ்ரீமதி கோமதி சுவாமிநாதன் முதன்மையானவர். அவர் தந்துள்ள கதையில் சிந்தனை ஓட்டத்தை சிறப்பாகக் காணலாம்.

பல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற கலா நிபுணர் சி. ஆர். ராமசாமி. 'வாடினதாமரை' என்று ஒரு வாடாத் தாமரையை அளித்திருக்கிருர்; நகைச் சுவையோடு அருமையான உண்மைகளை அழகு படச் சொல்லுவதில் தேர்ந்த பிரபல எழுத்தாளர் "சுகி" சுவாரஸ்யமான ஆராய்ச்சி ஒன்று செய்திருக்கிருர். சாதாரணமாக 'ஹாஸ்ய எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் மருந்துக்கும் கலை அம்சம் இன்றி 'இலக்கியம்' செய்வார்கள். ஆனல் "சுகி" எந்த விஷயத்தை எடுத்தாலும் கலை அழகு ததும்ப இயற்றும் வன்மை பெற்றவர். அதற்கு ஏற்ப வாய்ப்பான நடையும் அவருக்கு அமைந்திருக்கிறது. அவர் தொடர்ந்து எழுதிய 'யுத்தகால இலக்கியம்' போலவே—இம்மாதிரிதனிப்பட்ட அவருடைய கட்டுரைகளும் ரசிகர்களுக்கு களிப்பூட்டும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீமதி கோமதி சுப்ரமணியம், இவரைப் பற்றித் தனியாகச் சொல்லவேண்டியதில்லை. அன்ருட வாழ்க்கையைச் சித்திரிப்பதில் அவருக்கிணை அவரேதான்!

"தற்காப்புப் பயிற்சி" இந்த இதழில் குறிப்பிடத் தக்க ஒரு அம்சம். மற்ற தேசங்களில் எவ்வளவோ துறையில் முன்னேறியிருக்கின்றன. அடிமைநாட்டில் எதற்கெடுத்தாலும் பிற்போக்குத்தனம் 'கண்ணை' மறைக்கிறது. சுலபத்தில் சாதாரணமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய காரியங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதை விளக்குகிறது "தற்காப்புப் பயிற்சி".

சரித்திரம் நமது கலை, நாகரிகம் இவைகளைப் பிரதிபலிக்கும் கண்ணுடி. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம் நாடு இருந்த நிலை என்ன? வாணிபம் — கலை, எவ்வாறு விளங்கியது என்பதை எல்லாம் தெரிந்து கொள்வது வருங்கால வாழ்வுக்கும் பயன் உள்ளதென்பதில் சந்தேகமில்லை. தமிழகத்தின் சரித்திரத்தை ஊன்றிக் கவனித்து சில அரிய காட்சிகளை எடுத்துச் சொல்லுகிருர், அ. கிருஷ்ணமூர்த்தி. இந்திய சரித்திரத்திலே ஆழ்ந்தபயிற்சி உடையவர். தமிழகத்தின் முத்துவியாபாரத்தைப் பற்றிய அவரது முத்தான கட்டுரையை இங்கு பார்க்கலாம்.

எஸ். ரங்கசாமி, டி. சி. ராமசாமி, மருதையன்—இவர்களெல்லாம் சிறந்த கற்பனை உள்ள இளம் எழுத்தாளர்கள். மற்ற புது அம்சங்களும் 'வசந்தச்' சோலையில் மலர்ந்திருக்கின்றன.

—ஆசிரியர்

(19724)

வாடின தாமரை

சி. ஆர். ராமசாமி

வாசுதேவனும் பார்த்தசாரதியும் 'பிரஸிடென்ஸி' காலேஜுக்கெதிரிலுள்ள கடற்கரையில் அலை நீர் காலில் பட்டுச் செல்லும் தூரத்தில் உட்கார்ந்திருந்தனர். பார்த்தசாரதி அந்த அலை நுரையை வாசுதேவனுக்குக் காட்டி, "உலகத்தில் அழகாயிருப்பவையெல்லாம் கண நேரத்தில் தோன்றி மறைகின்றன" என்றான். வாசுதேவன், "ஆமாம். அதுதான் அழகின் ரகசியம். காளிதாசர் கூட அதை ஓர் சுலோகத்தில் சொல்லியிருப்பதாக நினைவுக்கு வருகிறது. அது இருக்கட்டும். நீ ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? பி. எல். பரீட்சையில் தேறி விட்டாய். இனி தகப்பனாரிடமே வேலை கற்றுக்கொள்ளப் போகிறாய். நான் பி. எஸ்ஸி ஆனர்ஸ் பரீட்சையில் தேறியிருக்கிறேன். ஆனால் எங்கேயாவது வேலை தேடப் போகலாமென்றால் "சூட்டு கோட்டு" போட்டுக் கொண்டு போனாலன்றோ மதிப்புக் கிடைக்கும். அதைத் தைத்துக் கொள்ளக்கூட பணமில்லையே. தகப்பனார் ரிடையர் ஆகப் போகிறார். குடும்ப பாரம் என் தலையில் விழக் காத்திருக்கிறது. ஆனாலும் உன்னைப் போல் நான் கவலையுற்றிருக்கவில்லையே" என்றான்.

வாசுதேவனின் தகப்பனார் தபாலாபீசில் மாதம் நூற்றிருபது ரூபாய் சம்பளம் வாங்கும் ஓர் குமாஸ்தா. பெரிய குடும்பஸ்தர். தபாலாபீசில் "கிம்பளம்" கிடையாது. ஆகையால் வாசுதேவன் உடனே ஏதாவது வேலை தேட நிர்ப்பந்தப்பட்டவன். பார்த்தசாரதி பிரபல வக்கீலின் ஏகபுத்திரன். வாசுதேவன் சொன்னபடி அவனுடைய அழகிய தாமரை போன்ற முகம் வாடியிருக்கக் காரணமில்லைதான். ஆனால் பெண்கள் பார்த்தவுடன் மோகமடையக் கூடிய அவனுடைய முகத்தில், உள்ளத்திலுள்ளதைச் சொல்லமாட்டாத ஓர் ஆழ்ந்த சோகத்தின் சாயை படிந்திருந்தது. வாசுதேவனை அழகுள்ளவனென்று யாருமே சொல்ல மாட்டார்கள். ஆனால் நல்ல தேகக்கட்டும் சிரித்த முகமும் கொண்டவன்.

பார்த்தசாரதி, "எனக்கு அப்பா கலியாணம் செய்து வைத்து விடப் பார்க்கிறார். அனசூயா அழகாய்த் தானிருக்கிறாள். ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கிடைக்கும். ஆனால் அவள் ஜாதகத்தில் ஏதோ தோஷமிருக்கிறதாம். அவளைக் கட்டிக் கொண்டவன் அல்பாயுசுடையவனாயிருப்பானாம். எனக்கு அழகிய படித்த பெண்ணை விதவையாக்கப் பிடிக்கவில்லை. பாசமெதற்கு? அது அறும்பொழுது வருத்தமெதற்கு? நான் பிரம்மச்சாரியாய் இருக்கப் போகிறேன். அல்லது ஒரு குரூபியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். நான் இறந்தால் அவள் அதிக வருத்தமடையாமலும் இருப்பவளாக

இருக்க வேண்டும்'' என்று ஓர் வெறுப்புக் கலந்த சிரிப்புடன் சொன்னான்.

வாசுதேவன், "ஏது மார்க்கண்டேய உபாக்கியான மாயிருக்கிறதே. உனக்கு ஜோசியத்தில் அவ்வளவு நம்பிக்கையா? எனக்கு ஓர் அழகுள்ள பெண்ணை அவ்வளவு வரதக்ஷிணையுடன் கொடுக்க யாராவது முன் வந்தால் நான் அவள் ஜாதகத்தைக் கண்டு பயப்பட மாட்டேன்'' என்றான். பார்த்தசாரதி, "அப்படியானால் எனக்கு அந்த பெண் வேண்டாம். நீயே அவளைச் செய்து கொள். நான் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லி விடுகிறேன். பெண்ணின் தகப்பனாருக்கு உன்னை "ரெகமெண்ட்'' செய்கிறேன்'' என்றான். பிறகு இருவரும் சிறிது நேரம் வேடிக்கையாய்ப்பேசிவிட்டுப் பிரிந்தனர்.

அனசூயாவின் தகப்பனார் கோபாலய்யங்கார் கவர்ன்மெண்ட் ஆடிட்டர். மாதம் ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்குபவர். எதையும் ரூபா, அணா, பைசா அளவையால் மதிப்பவர். அனசூயா முதல் மனைவிக்குப் பிறந்தவள். அவள் இரண்டு வயது குழந்தையாயிருக்கும் பொழுதே அவள் தாயார் 'நாட்டு' வைத்தியத்தின் பலனாக இறந்து விட்டாள். சமையல்காரனுக்கு ரிவின்யூ இன்ஸ்பெக்டர் சம்பளம் கொடுத்தும், அவன் பால், நெய், தயிரை தண்ணீரைப் போல கொட்டி நாசம் செய்வதை வேறு பார்த்துக் கொண்டிருப்பதாவென்று கோபாலய்யங்கார் தனக்கு சொந்தமான திக்கற்ற ஓர் ஏழைப் பெண்ணை அதிக செலவில்லாமல் கால தாமதம் செய்யாமல் மணந்து கொண்டார். அவள் நாலைந்து குழந்தைகளைப் பெற்றாள். வைதேகியம்மாள் - பெயர் நல்ல பெயர்தான். ஆனால் பாவம் கைகேயியுடையது! அனசூயா பதினாறு வயதடைந்ததுமே, "அவள் எப். ஏ. என் படிக்க வேண்டும், படித்து என்ன செய்யப் போகிறாள், படித்தவர்களைக் கண்டால் எல்லோரும் பயப்படுகிறார்களே, படிப்பை நிறுத்திக் கல்யாணம் செய்து விடுங்கள். என் மாமா பிள்ளை ரங்கசாமி இருக்கிறான். அவனுக்குக் கொடுத்து விடலாம்''என்று அடிக்கடி சொல்லி வற்புறுத்தினாள். ஆனால் அந்த மாமா பையனுக்கு க்ஷய ரோகம் பிடித்து அவன் தாம்பரத்துக்குக் கொண்டு போகப் பட்டதனால் அவள் ஏற்பாட்டிற்கு தடை யேற்பட்டு விட்டது. அனசூயா எப். ஏ. படித்து, பி. ஏவும் படித்து முடித்தாள்.

வாசுதேவனைப்பற்றி பார்த்தசாரதி சொன்னதை புருஷனிடமிருந்து கேட்டு வைதேகியம்மாள் "வக்கீல் வேலையில் பணம் சம்பாதிப்பது நிச்சயமில்லை; ஏன் இக்காலத்தில் நிச்சயமாக இல்லையென்றே சொல்லலாம். ஏழைப் பையன். கொஞ்சம் வரதக்ஷிணை கொடுத்தால் போதும். ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்தால் திருப்தியடைவார்கள். பையன் படித்தவன். அனசூயாவின் அதிர்ஷ்டப்படி நடக்கும். நாம் யோசித்து செய்வது போல் எது நடக்கிறது?'' என்று லௌகீகமும் வேதாந்தமும் கலந்து பேசி கணவனை ஒத்துக்கொள்ளச் செய்தாள். கல்யாணம் அதிக செலவில்லாமல் நடந்தது.

பரீக்ஷையில் முதலில் தேரியதால் வாசுதேவனுக்கு பிரெஸி

டென்ஸி காலேஜிலேயே 'டியூடர்' வேலை கிடைத்தது. அவன் கல்யாணமான வுடனே அனசூயாவைக் கூடவே அழைத்துக் கொண்டு போய் விட்டான். இருவரும் இரண்டு வருஷம் அன்னியோன்யமாய் இல்லறம் நடத்தினார்கள். ஓர் பெண் குழந்தை பிறந்தது. அதற்கு மாலினி யென்று பெயரிட்டார்கள். அனசூயா குழந்தை கறுப்பாய் இருக்கிறதென்று விசனப்பட்டாள். வாசுதேவன், "முகம் களையாயிருக்கிறது. கறுப்பாயிருந்தாலென்ன? கறுப்பாயிருப்பவர்களுக்கு கல்யாணமாவதில்லையா? திரௌபதி, சத்தியவதி இவர்களெல்லாம் கறுப்பாயிருந்ததாகத்தானே புராணத்தில் படித்திருக்கிறோம்" என்று தேற்றினான்.

அவர்கள் இப்படி சுகமாய் வாழ்வது கடவுளுக்குப் பிடிக்கவில்லையோ, அல்லது ஊழ்வினையோ, அனசூயாவின் கிரகதோஷமோ, அல்லது டாக்டர்கள் வற்புறுத்தும் சுகாதார விதிகளின் அசட்டை தானோ தெரியவில்லை. இளம் தம்பதிகளுக்கு சத்துருவான 'டைபாயிட் சுரம்' வாசுதேவனுக்கு யமனாய் வந்து அவனை அனசூயாவிடமிருந்து தூக்கிச் சென்று விட்டது. அனசூயா கண்ணீரும் கம்பலையுமாய் அப்பொழுதுதான் தளர்நடை கற்று வந்த மாலினியுடன் தகப்பன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

விதியின் கொடூரம் மட்டுமிருந்தால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் சுற்றத்தாரின், அதுவும் பெண்களின் கொடுமையை பெண் பொறுப்பது கஷ்டம். முன் அவளுக்கு அவள் கணவன் வாங்கித் தந்த நகைகளையும் ஆடைகளையும் பார்த்து சந்தோஷத்தைக் காண்பித்த அதே பெண்கள் இன்று அவற்றைப் பார்த்து அசூயைப் படுவது என்? பட்டுப் புடவைக்கு நூல் புடவைகள் வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள். நகைகளை விற்று பணமாக்கிக் கொண்டால் இப்பொழுது தங்கம் விற்கும் விலைக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று ஆலோசனை சொன்னார்கள். கணவன்தான் ஜாதக தோஷத்தால் சீக்கிரம் இறந்துவிட்டாலும் மனைவி கஷ்டப் படாமலிருக்கட்டுமென்று நினைத்து செய்திருந்த இன்ஷூரன்ஸ் மூலம் கிடைத்த தொகை இரண்டாயிரத்தையும் கடன்—திருப்பிக் கொடுக்கும் உத்தேசமில்லாமல் கேட்க ஆரம்பித்தார்கள். அவள் குழந்தை கூட தாய்க்கு கிடைத்த அலக்ஷியத்தில் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதன் மேல் வீண் குற்றச் சாட்டுகள் செய்யப்பட்டன. இளம் வயதில் குழந்தை தன் துரதிர்ஷ்டத்தால் அவமானமும் கொடுமையும் அடைவது அவளுக்கு ஏற்பட்டிருந்த விசனத்தைப் பன்மடங்காக்கிற்று. இது அவளுக்கு போதாதென்று வைதேகியம்மாள் இப்பொழுது ஆஸ்பத்திரியிலிருந்து சிறிது சௌஸ்தமடைந்து வெளிவந்திருந்த மாமாவின் பிள்ளைக்கு அனசூயாவைக் கொடுத்து மணம் செய்யத் தூண்டினாள். கோபாலய்யங்கார் அதையும் அங்கீகரிக்கத் தயாராயிருப்பதை அனசூயா உணர்ந்தாள்.

கணவனைத் தெய்வமாக நினைத்து அவன் படத்தை தினம் தவறாமல் பூஜித்து, உள்ளக் கோயிலிலும் அவனைத் தெய்வம் போல சதா பிரதிஷ்டை செய்திருந்த அப்பெண்ணிற்கு இது சகிக்க

முடியாத துக்கத்தை யுண்டாக்கிற்று. வாசுதேவன் அவளுக்கு வாங்கித் தந்திருந்த வெள்ளியால் செய்யப்பட்ட வேணு கோபாலனின் படத்தைப் பார்த்து "கிருஷ்ணா, திரௌபதிக்கு துகில் தந்த தூயனே! என் துக்கத்தை நீ பார்க்க வில்லையா?" என்று முறையிட்டாள்.

ஓர் நாள் வீட்டில் யாருமிருக்க வில்லை. அவளைக் குழந்தையுடன் வீட்டிற்கு காவலாக வைத்துவிட்டு எல்லோரும் சினிமா பார்க்கச் சென்றிருந்தார்கள். அவள் சாளரம் வழியாய் தோட்டத்தில் வசந்த ருதுவில் மலர்ந்திருந்த தளிர்களையும் புஷ்பங்களையும் மாலனிக்குக் காட்டி அவற்றின் பெயர்களை மாலனிக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் அந்த புஷ்பங்களையும், மேலே பறக்கும் பறவைகளையும் பார்த்து "இவற்றிற்கு நடந்ததைப்பற்றி விசனமும், நடக்கப் போவதைப் பற்றிய பயமுமில்லாததால் சந்தோஷமாயிருக்கின்றன. நானும் அப்படி என் இருக்கமுடியவில்லை" என்று சிந்தித்தாள். ஓர் பெண் அவள் மணந்த புருஷன் இறந்து போன பின்பும் அவனை மறந்து விடாமல் நினைத்து உருகுவது கவியின் கற்பனை மரபல்ல. அது ஓர் இயற்கை வேகம். முற்றும் கற்றறிந்த ஞானியும் சாகும் பொழுது கிருஷ்ணா, ராமா வென்று உச்சரித்துச் சாகிறார்கள். அவர்கள் சிறு வயதில் படித்த, கவிதை சிருஷ்டியை அவர்களால் மறக்க முடியவில்லை. இவள் இப்படி சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில் மாலினி, "அம்மா, வாசல்லே மோதார் கார்" என்று சொல்லி அவள் சிந்தனையைக் கலைத்தாள். வாசலில் நின்ற ஆகாய வர்ணம் படைத்த காரிலிருந்து ஓர் இருபத்தி நான்கு வயதுள்ளவளென்று மதிப்பிடக் கூடிய மாது இறங்கி வாசற்படிகள் ஏறினாள். அவள் வெள்ளைப் புடவை தரித்திருந்தாள். ரவிவர்மா தீட்டிய சரஸ்வதியே உயிர்த்து வந்தது போலிருந்தது. கையில் தங்க சங்கிலி போட்ட கை கடிகாரம் தவிர வேறு ஆபரணம் அவளிடம் காணவில்லை. அவள் முகத்தில் தவழ்ந்த புன்னகை அவளுக்கு மற்ற நகைகளை அவசியமற்றவையாய்ச் செய்துவிட்டன போலும். அவளைப் பார்த்த உடனே அனசூயா எழுந்து நின்றாள். வந்தவள், "இதுதானா ஆடிடர் கோபாலய்யங்கார் வீடு? நீங்கள் தானே அனசூயா?" என்று கேட்டாள். அனசூயா, "ஆமாம். நீங்கள் யாரோ?" என்று கேட்டாள். வந்தவள், "நான் பார்த்தசாரதியின் தங்கை சுசீலா: நானும் உன்னைப் போல் கணவனை யிழந்தவள். என் அண்ணன் உன் கணவனுக்கு உயிர்த் தோழனாயிருந்தான். உன்னைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன். வீட்டில் யாரும் இல்லை போலிருக்கிறதே?" என்றாள். சுசீலா மாலினியை தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டு அனசூயாவிடம் அன்னியோன்யமாய் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். இப்படி அவர்களிடையே உண்டான பரிசயம் விரைவில் அந்தரங்க நட்பாய் மாறிற்று. ஒன்றுபட்ட உள்ளங்களுக்குள் நட்பு அதிக பழக்கமில்லாமலே ஏற்படுமல்லவா. கூடப்பிறந்து கொல்லும் வியாதிக்கு மலையிலிருந்து மருந்து கிடைத்தது. வாடின தாமரை மலர்ந்தது.

சுசீலா அனசூயாவைப் பார்த்து, "தகப்பனார் உன்னை அன்புடன்

பாராட்டவில்லை யென்று நீ விசனப்பட வேண்டாம். மனிதர் அவரவர்க்குள்ள குணத்திற்கு தக்கபடிதான் நடந்து கொள்வார்கள். அது அவர்கள் குற்றமல்ல. அவர்களுடைய குணங்களின் இயற்கையை யனுசரித்து மனிதர்கள் நடக்கிறார்களென்று நீ பகவத் கீதையில் படித்திருப்பாயே'' என்று சொல்லி அவள் மனவருத்தத்தைப்போக்க முயன்ருள்.

ஒரு மாதம் கழித்து சுசீலா, வைதேகியம்மாளிடமும் கோபாலய்யங்காரிடமும் அனசூயாவை சைதாப்பேட்டை உபாத்தியாயினி காலேஜில் சேர்க்க அனுமதி கேட்டாள். வைதேகி அம்மாள், ''அவளுக்கு இங்கே சுகமேயில்லை. அது நல்லது'' என்று ஜாடையாய் கோபாலய்யங்காரிடம் சொன்னாள். அவரும் எளிதில் தன் சம்மதத்தைக் கொடுத்தார். அனசூயா, சுசீலா (அவள் அங்கே ஓர் உபாத்தியாயினி யென்று சொல்ல மறந்து விட்டேன்) கூடவேயிருந்து எல். டி. படித்து முடித்து சென்னையில் ஓர் பெண் உயர்தர பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாய் அமர்ந்தாள். அவள் எப்பொழுதாவது சித்தி வீட்டிற்குப் போனால் சித்தி அவளுக்கு மிகவும் மரியாதை செய்து, மாலினியை அவள் இதை விரும்பாமற் போனாலும், சீராட்ட முயல்வாள். அது பணத்தின் மகிமை. பிச்சையெடுக்கும் சந்நியாசிகளை விட மடத்து சந்நியாசிகளுக்கு மதிப்பு உண்டல்லவா?

ஓர் வருஷம் சென்றது. அனசூயாவிற்கு பின்வருமாறு ஒரு கடிதம் வந்தது.

அன்புள்ள அக்காவுக்கு,

அம்மாவும் என்னைத்தவிர மற்ற குழந்தைகளும் கிராமத்துக்குப் போயிருந்தார்கள். அங்கே பிளேக் வந்து எல்லோரும் இறந்து விட்டார்கள். அப்பா வேறு கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகத் தெரிகிறது. நீங்கள் அம்மாவிடம் பட்ட கஷ்டத்திற்கு பதிலாக பகவான் எனக்கும் ஓர் மாற்ருந்தாயை கொடுத்து கஷ்டப்படுத்த விரும்புகிருர் போலும்!

இப்படிக்கு
ஊர்மிளா

அப்பாவின் கல்யாணத்திற்கு அனசூயா போக முடியவில்லை. கல்யாணமாய் ஒரு மாதத்திற்குப் பின் அனசூயா பிதாவைப் பார்த்துவரப்போனாள். அவர் மூன்ருவது மனைவி வைதேகியின் குழந்தைகளை, தன் குழந்தைகளைப் போலவே அன்புடன் வளர்த்து வந்ததைப் பார்த்து அனசூயா சந்தோஷமடைந்தாள். தகப்பனரிடமும் சிறு மாறுதல்களைக் கண்டாள். அவருடைய லோபித்தனமும் நிர்தாக்ஷிண்யமும் குறைந்திருந்தது. விதியின் தண்டனையைக் கண்டு கூட திருந்தாதவர்கள் அன்பின் அதிசய சக்தியால் சீர்திருத்தப் படுகிறார்கள்.

★

இன்பக் கதைக ளெல்லாம் — உன்னைப் போல்
ஏடுகள் சொல்வதுண்டோ ?
அன்பு தருவதிலே — உனை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ ?

மார்பி லணிவதற்கே — உன்னைப் போல்
வைர மணிக ளுண்டோ ?
சீர் பெற்று வாழ்வதற்கே — உன்னைப் போல்
செல்வம் பிறிது முண்டோ ?

— பாரதி

சிறு கதை:

தெய்வ நியதி

[கு. ப. சேது அம்மாள்]

கிருஷ்ணபக்ஷ துவாதசி.

மூன்றாம் ஜாமம். கபிலவஸ்துவை அடுத்த வனப்பிரதேசத்தில் வந்ததும் தமது குதிரையை நிறுத்திக் கொண்டு கீழே இறங்கினர் சித்தார்த்தன்.

கடிவாளங்களை விட்டுவிட்டு கைகளை மார்பின்மீது கட்டிக் கொண்டு அங்குமிங்குமாக சற்று உலாவிக் கொண்டேயோசித்தார்.

எங்கும் ஒரே அமைதி. காற்றின் சலசலப்புக்கூட அடங்கி விட்டது. ஜாமத் தொடக்கத்தால் மரப் பொந்துகளில் பதுங்கி அயர்ந்திருக்கின்ற ஆந்தைகள் விழித்துக்கொண்டு அலறின.

அவற்றின் குரலும் அடங்கி விட்டது! பிரகிருதி மீது கவிந்திருந்த இருள் மெல்ல மெல்ல விலகலாயிற்று. சற்று நேரத்திலேயே சந்திரன் உதயமானன். பளிச்சென்று வையகத்தின்மீது நிலவு படர்ந்தது.

யோசனையிலிருந்து தெளிந்து கொண்டு, ஒருப்பட்ட மனதுடன் தமது குதிரையின் சமீபமாக வந்து நின்ருர்.

உடனே அது பிடரியை உலுப்பி விட்டுக் கனைத்தவாறு பிரயாணத்திற்கு சித்தம் என்பதாக தன் முகத்தருகில் நின்ற சித்தார்த்தனை ஒரு தடவை முகர்ந்து விட்டு தனது முதுகிடம் அவர் நிற்கும் படியாக இரண்டடி முன் சென்று நின்றது.

சித்தார்த்தனுடைய மனதில் அன்பு கொந்தளித்தது. அளவற்ற வாஞ்சையுடன் அதன் உடல் பூராவும் தடவிக்கொடுத்து பெருமூச்சு விட்டு, "என் உற்ற துணைவனை காந்தக, என் சிறந்த அசிவபதி, போதும்! இதுகாறும் என்னைச் சுமந்து சுமந்து நீ ஆற்றிய தொண்டுக்கு உனக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன் நான்? உன் மெய் வருத்தம் பாராமல், உன் மீது எவ்வளவு காலம் சுமையாக இருந்திருக்கிறேன்! காந்தக! என்னை மன்னித்துவிடு! இனி நீ உன் இஷ்டப்படி சஞ்சரி. சுயேச்சையாக மிகுதி காலத்தை யாவது கழி. உனக்கு விடுதலை அளித்து விட்டேன், செல்! காந்தக, என் உத்தம அசுவமே, விடை பெற்றுக்கொள்! சந்தோஷமாக இந்த வன பிரதேசங்களில் உலாவு உண், உறங்கு! எனக்கு விடை கொடு" என்று தழுதழுத்த குரலில் அதன் காதருகில் நின்று பேசி முடித்தார்.

ஜன்ம ஜன்மாந்தரமாக எத்தனையோ பிறவிகளிலும் சித்தார்த்தனையே எஜமானனுகக் கொண்டு, அவதார புருஷனுக்கே ஊழியம் செய்யப் பிறந்தது காந்தன்!

சித்தார்த்தனுடைய உத்தரவைக் கேட்டதும், ஞானவடிவாக அவதரித்த அந்த மஹா அசுவத்தின் இருகண்களிலிருந்தும் தாரை தாரையாக கண்ணீர் பெருகிற்று!

சித்தார்த்தனுடைய மனதில் கொந்தளிப்புக் கண்டது! பிரத்யக்ஷ தெய்வமான பிதாவையும், அருமை யசோதரையையும், பச்சிளம் பாலனையும்கூட அநியாயமாக உதறி விட்டு வந்த சித்தார்த்தனுடைய நிச்சயபுத்திகூட தடுமாற ஆரம்பித்தது.

கண்களில் நீர் வடிய காந்தகனுடைய முகத்தை அணைத்து "நண்ப, ஏனோ இந்த வருத்தம் உனக்கு? கடிவாளங்களைப் பற்றி இழுத்து இழுத்து உன் கடைவாய்களைக் கிழித்த என் மீது இத்தனை விசுவாசமா உனக்கு! உன் உணவுண்ணும் வாயில் கடிவாளங்களை இட்டு, மெல்லச் சொன்ன என்னைப் பிரியவா வருந்துகிறாய்? ஐயோ! காலமறிந்து உண்டாயா, உறங்கினாயா, நினைத்த சமயத்திலெல்லாம் உன்னை உபத்திரவம் செய்து உன் உதிரத்தை உறிஞ்சினேனே — அதற்கா இப்படி கலங்குகிறாய்! காந்தக, நீ பட்ட ஹிம்சைகளும், நிர்ப்பந்தங்களும் போதாதா? அலுக்க வில்லையா உனக்கு? என் கண்ணீர் வடிக்கிறாய்? செல்! என் அருமை நண்ப, இனி நான் அரசனன்று — உன் மீது ஆரோகணித்துச் செல்ல! போ — கலங்காதே — க்ஷேமமாக இரு! சந்தோஷமாக உனக்கு நான் விடை கொடுக்கிறேன்; நீயும் அவ்விதமே செய்!" அதன் முதுகின்மீது தட்டிக் கொடுத்து அதனுடைய அன்பை போற்றி விட்டு, அதனுடைய கடிவாளங்களையும், இதர சுமைகளையும் கழற்றி கீழே எறிந்தார்.

சுவர்ணமயமான அந்த அங்க வடிகளும், குதிரையின் அலங்கார அணிகளும் கழற்றி எறியப்பட்டதும், பிறந்த மேனியாக வெறிச்சென்று களையற்று நின்றது காந்தன்.

"அசுவராஜா! இன்னும் என் நிற்கிறாய்? போ அப்பா சுகமாகப் போய் வா!" என்று மறுபடி அதற்கு அறிவித்ததும் திசைகள் அதிரும்படியாக ஒரே கனைப்பு கனைத்தது. அது, நின்ற நிலையிலிருந்து தடாரென்று பூமியில் சாய்ந்தது காந்தகன். கால்கள் விலுக் விலுக்கென்று உதைத்துக் கொண்டன. முகம் ஒரு புறம் கோணிற்று, கண்கள் நிலை குத்தின!

கிடைத்தற்கரிய மாணிக்கமாகிய உச்சைஸ்வத்தைப்போன்ற காந்தகன் — உலகத்திலேயே மற்றெங்குமில்லாத சிரேஷ்டமான அசுவமான அந்த காந்தகன் — ஆஹா! கோரமாக விழித்துக் கொண்டு, திறந்த வாயுடன், கால்களைப் பரப்பியபடி அப்படியே பிரேதமாகி விட்டது!

அதையே பார்த்துக் கொண்டு மெய்மறந்து நின்ற சித்தார்த்தனுடைய நெஞ்சு விண்டு போவது போல வலித்தது. கண்களில் நீர் கொட்டிற்று! உடனேயே — அந்த க்ஷணத்திலேயே தமது தீர்க்கமான நிச்சய புத்தியை அடைத்து கண்களிலிருந்த நீரை வழித்தெறிந்து விட்டு, தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்! வாயினின்று அவரை அறியாது வார்த்தைகள் உதிர்ந்தன.

"ஆஹா! மரணம் கோரமானது! பிணியோ, அதைவிட பயங்கரமானது! மூப்போ? இது இரண்டையும்விட துன்பம் மிக்கது! என் அருமை காந்தகன், இதோ

மாண்டு கிடக்கிறது! அழகு மிக்க இந்த அசுவம், விகாரமாகி விட்டது! இதுவா வாழ்க்கை! சை! இவ்விடத்தில் நிற்கக்கூடாது இனி! சித்தம் கலேந்து மனது தடுமாறுகிறது! காந்தகன்? அதன் வழிக்கு அது போய் விட்டது. இனி என் வழிக்கு நான் செல்ல வேண்டியவன்'' என்று தன்னே உறுதிப் படுத்திக் கொண்டு ''மஹா அசுவமே — உனக்கு இனி பிறவிப்பிணி இல்லாது போகக் கடவது! இதுவே என் ஆசி உனக்கு!'' என்று உரைத்து விட்டு, தம்மிடமிருந்த கடைசி ஆயுதமான உடைவாளேக் கையிலெடுத்து அதை ஏந்திப் பிடித்துக் கொண்டு யோசித்தார். ''ஆம்! இதற்கும் கடைசியாக ஒரு காரியம் கொடுக்கிறேன்'' என்று அந்த உடைவாளால் தமது சிகையை அறுத்தெடுத்தார்.

ஒரு கையில் வாள், மற்ருெரு கையில் சிகை! இரண்டையும் ஒரு நிமிஷம் பார்த்தார் சித்தார்த்தன். பிறகு தன்னுடன் வந்த அந்தரங்க காவலனே அருகில் வருமாறு அழைத்தார்.

அங்கு வந்தது முதல் அந்த விஞடி வரையில் நடந்த அனேத்தையும் திக் பிரமையுடன் பார்த்துக் கொண்டே நின்ற அந்தக் காவலன் உடல் நடுங்க அவரருகில் வந்து நின்ருன்.

இரக்கம்மிக்க சித்தார்த்தன் அவனே அன்புடன் அருகில் அழைத்து தம் கையிலிருந்த உடைவாளேயும், சிகையையும் அவன் கையில் கொடுத்து விட்டு தம்முடல் முழுமையும் ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார்.

புறப்படும் நேரத்தில் யார் பார்த்து விடுவார்களோ, யார் நம்மை தடை செய்து நிறுத்தி விடுவார்களோ என்ற சங்கையில் அவசர அவசரமாக தம் உடம்பின் மீதிருந்த ஆபரணங்களேக் கழற்றி விட்டு புறப்பட்டு விட்டார். அவசர மிகுதியால் மறதியாக தம் மீதே தங்கிவிட்ட இரண்டொரு ஆபரணங்களேயும் கழற்றி அவற்றையும் தம் மேலங்கியையும் களேந்து அவனிடம் கொடுத்து, ''என் உயிர்க் காவலனே, உனக்கு இவற்றில் பிரியமிருக்குமாயில் நீயே இவற்றை எடுத்துக் கொள்ளலாம்......'' என்று சொல்லும் இளவரசனுடைய விரக்தியைக் கண்டு காவலாளனுடைய நெஞ்சு விம்மிற்று. கண்கள் நீரைக்கொட்டின. பரிதாபகரமான அவனுடைய முகபாவத்தைக் கண்டு சித்தார்த்தனுடைய உள்ளத்தில் சஞ்சலம் தோன்றிற்று. மிகவும் மெலிவான குரலில், ''நண்பா, வருந்தாதே; நல்லது! அவற்றை பத்திரமாக அரண்மனேக்குக் கொண்டு சேர்த்து விடு. இதோ கீழே கிடக்கும் காந்தகனுடைய அணிகளேயும்கூட எடுத்துச் செல், போ. சுகமாக இரு, மகாராஜாவுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து எனது அபசாரங்களே மன்னித்து விடுமாறு நான் வேண்டிக் கொண்டதாகச் சொல்லு! சென்றுவா'' என்று அவனுக்கு உத்தரவு கொடுத்து அவ்விடத்தை விட்டு புறப்பட்டார் — உடுத்திய உடையுடன்! நடந்து நடந்து அந்தக் கானகத்தை கடப்பதற்கும் பொழுது புலர்வதற்கும் சரியாக இருந்தது.

மகத நாட்டின் எல்லேயை அடைந்து, அங்கு தென்பட்ட ஒரு மண்டபத்தில் வந்து உட்கார்ந்து இளேப்பாறினர்.

விடிந்து ஒரு ஜாமமானதும் சாலேயின் வழியாக ஜனங்களின்

நடமாட்டம் ஆரம்பமாகி விட்டது. போவார் வருவார் அனைவரும் தம்மையே குறிப்பாகப் பார்த்துக் கொண்டு செல்வதைக் கவனித்த சித்தார்த்தனுக்கு வியப்புண்டாயிற்று!

பாதை வழியாகச் செல்பவர்கள் ஏனிப்படி என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு அதிசயித்துக் கொண்டு போகிறார்கள்? என்று சிந்திக்கலானார். காரணம் சட்டென்று அவருக்கு விளங்கி விட்டது.

''ஜரிகை மயமான பட்டாடையை உடுத்திக் கொண்டு பரதேசிகளின் நடுவில் தானும் ஒரு பரதேசி என்று நின்றால்; அது தான் ஜனங்களுக்கு அதிசயமாகத் தென்படுகிறது!'' என்று தோன்றியதுமே உடனேயே இடத்தை விட்டு எழுந்தார். தமது இடையிலிருந்த பீதாம்பரத்தை அவிழ்த்து ஒரு பரதேசியிடம் கொடுத்து விட்டு, அவனுடைய காவித் துணியை வாங்கி உடுத்துக் கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்டு மெதுவாக சாலை வழியே நடந்து சென்றார். மகதநாட்டரசனாகிய பிம்பசாரனுடைய நகரத்தின் எல்லையை அணுகி, அங்கு தென்பட்ட ஒரு பெரிய விருட்சத்தினடியில் உட்கார்ந்து கொண்டு மௌனமாக இனி தாம் செய்ய வேண்டியதேது என்ற சிந்தனையில் ஆழ்ந்தார் — தம்மை மறந்தவராக.

நகரத்தின் எல்லையில் பார்க்க ரமணீயமாக இருக்க வேண்டுமென்று ஆக்ஞாபித்த அரசனுடைய கட்டளையால் அந்த இடம் அரம பூமியைப் போல தூய்மையாக இருந்தது.

அந்த இடத்தில் சாந்தமே உருவாக, ஆஜானுபாஹுவான அந்த ஆக்ருதியில் பத்மாசனமிட்டு உட்கார்ந்து கண்களைமூடி மௌனத்தில் லயித்திருக்கும் கம்பீர மூர்த்தியைக் கண்டனர் பிம்பசார மன்னனுடைய குடிமக்கள்.

நகர எல்லையிலுள்ள மரத்தடியில் ஒரு தபசி நிஷ்டையிலிருக்கும் இந்த விஷயம் நிமிஷ நேரத்தில் நகரம் பூராவும் பரவி விட்டது! ஜனங்கள் காணிக்கைகள் சகிதமாக கும்பல் கும்பலாக வந்து அவ்விடத்தில் ஜனசமுத்திரமாகி விட்டது!

கிரமமாக மகத மன்னன் பிம்பசாரனுக்கும் செய்தி எட்டியது.

உடனே தூதுவர்களை அனுப்பி உண்மை தெரிந்து கொண்டு, பிறகு தம் அரண்மனை ராஜ தூதர்களை அனுப்பி தக்க உபசாரத்துடன் தன் நகருக்கு அழைத்து வரும்படி பல்லக்குடன்கூட அனுப்பினான்.

சிறிது நேரத்திற்குள்ளேயே ராஜ சேவகர்கள் வெற்று பல்லக்குடன் திரும்பி வந்து செய்தி அறிவித்து விட்டார்கள்.

பிம்பசாரன் துணுக்குற்றான் செய்தி கேட்டதும்! ''ஆஹா யாரோ, மஹான்போலும்! அப்படித்தானிருக்க வேண்டும். இதோ நானே நேரில் சென்று அழைக்கிறேன்'' என்று தனது சேவகர்களைக்கூப்பிட்டு பிரயாணத்திற்கான ஏற்பாடுகளை தயார் படுத்த உத்தரவு கொடுத்தான்.

இதற்குள் நடுப்பகலாகி விட்டது. காண வந்த நகரமக்களின் காணிக்கைகளாக, தம் எதிரிலிருந்த கனிவர்க்கங்களையும் ருசிகரமான சிற்றுண்டிகளையும் எடுத்து

குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் வினியோகம் செய்தார் சித்தார்த்தன்.

அவருடைய வயிறு, தான் இருப்பதை நினைவுறுத்திற்று அவருக்கு! தாகத்தால் நாக்கும் வறண்டு விட்டது. யோசித்தபடியே எழுந்து அவ்விடத்தைச் சூழ இருந்த இல்லங்களுக்குச் சென்று மடியேந்தி அன்ன பிக்ஷை கேட்டார்.

சீக்கிரத்திலேயே மடி நிரம்பி விட்டது! வியஞ்சனங்களும் அன்னமும் ஒருமிக்கக் கலந்திருந்தன. உணவு போதுமானது என்று தோன்றிய உடன் அங்கிருந்து தாமிருந்த மரத்தடிக்குத் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டு, எல்லாவற்றையும் சேர்த்துப் பிசைந்து உண்ண ஆரம்பித்தார்.

முதல் கவளம் வாயில் போட்டதுமே அதை ருசித்த நாக்கு விழித்தது! அது காறும் — நேற்று இரவு வரையிலும் அறுசுவைகளுடன் கூடிய திவ்வியான்னமும், பக்ஷணங்களும் ருசிருசியாக உண்ட நாவு அது! தம்மையும் அறியாமல் அவருடைய வாய் அந்த உணவைக் கீழே சிந்தி விட்டது!

மடியிலிருந்த உணவைப் பார்த்துக் கொண்டே யோசித்தார் சித்தார்த்தன். ஒரு வெற்றிச் சிரிப்புடன், "அடசீ வயறே! உனக்கு இவ்வளவு இருக்கிறதா அகம்பாவம்! இனி இதைத்தான் நீ உண்ண வேண்டும் — உன் உயிர் ஜீவித்திருக்க! உண், உமிழாமல்! இதுகூட அகப்படாமல் எத்தனை ஜீவன்கள் பசியால் வாடுகின்றனவோ பாவம்! கிடைத்தது அமிர்தம் என்றெண்ணிக்கொள். உயிர் வாழ உணவு வேண்டும், சுவை எதற்கு? சுவை கண்டு உண்ட காலத்தில் அஞ்ஞானம் செழித்தது! இனி இந்த கலவை அன்னத்தை உண்டு உன்னைப் போன்ற புலன்களை அடக்கி ஆண்டல்லவோ முக்திக்கு வழி தேட வேண்டும்? உண்! குண்டிவறண்டு விட்டது; உருட்டி உருட்டிப் போடுகிறேன் ருசியைப் பார்க்காமல் நீ உள்ளே அனுப்பிவிடு!" என்று தமக்குள் தாமே மொழிந்து கொண்டு மறுபடி உண்ண ஆரம்பித்தார்!

வைராக்ய சித்த விருத்திமேலிடவும் க்ஷணத்திலேயே அன்னமிருந்த மடி காலியாகி விட்டது!

யாரோ கொணர்ந்து கொடுத்த தண்ணீரையும் குடித்து தாக சாந்தியும் செய்து கொண்டு அந்த தினத்தின் பொழுது கழிந்தது என்று பெருமூச்சு விட்டு, இனி என்ன என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

உச்சி வானிலிருந்த சூரியன் மேற்கே சாய ஆரம்பித்து நாலு நாழிகையிருக்கும், நகரத்தின் உட்புறமிருந்து வாத்தியங்களின் சப்தமும், ஜனங்களின் ஆரவாரமும் அலைபோல மிதந்து வந்தன. வர வர புழுதிப் படலமும், ராஜ விருதுகளும் தோன்றி எல்லை வாயிலைத் தாண்டி, தாமிருக்குமிடத்தை நோக்கி வருவதைக் கண்டார் சித்தார்த்தன்.

சதுரங்கசேனைகளும் முன்னே செல்ல கட்டியக்காரர்கள் ஜய கோஷம் செய்ய மகதமன்னனாகிய பிம்பசார மன்னன், சற்றுதூரத்திலேயே பல்லக்கை விட்டிறங்கி, பூர்ணம் தாங்கிய வேதியர் முன்னே செல்ல, பாத காணிக்கையை கையில் கொண்டு வந்தான் அரசன்.

மரத்தடிக்கு வரு முன்பாகவே — பத்தடி இருக்க — மரத்தடியில் ஜோதி ரூபமாக பத்மாசனத்

தில் அமர்ந்திருக்கும் மூர்த்தியைக் கண்டதும் பிரமை கொண்டு விழித்தான் பிம்பசாரன்!

புளகாங்கிதனாக மெல்ல நடந்து வந்து மரத்தடியில் வீற்றிருக்கும் சித்தார்த்தனை வணங்கி நின்றான் அரசன்.

புன்னகையும், பரிவும் தவழும் முகத்துடன் சித்தார்த்தன் மன்னனுக்கு நல்வரவு கூறி அருகிலழைத்து அமரச் சொன்னார்.

சம்பிரதாயப்படி குசலப்ரசன்னம் செய்து கொண்டார்கள். அதன் பிறகு சாவதானமாக வினவினான் பிம்பசாரன்.

"சுவாமி, இவ்விள வயதிற்கு ஒவ்வாத தீரச் செயலிலன்றோ பிரவேசித்திருக்கிறீர்கள்!" என்று ஆரம்பித்தான் மன்னவன்.

சித்தார்த்தனுடைய முகத்தில் வேதனையின் சாயல் கண்டது. கண்ட க்ஷணத்திலேயே மறைந்து விட்டது. கம்பீரமான குரலில் "ராஜனே, இந்த இளமை இப்படியே இருக்கவும், மூப்பு, பிணி, மரணம் இம்மூன்றும் இளமையைப் பற்றாதிருக்கவும்தான் நான் துறவு கொண்டிருக்கிறேன்!" என்றார்.

"பிணியிருக்கட்டும்; மூப்பும் சாக்காடும், மானிட வகையைப் பற்றாதிருப்பதெப்படி? விசித்திர முயற்சியாகவன்றோ இருக்கிறது?' ஆச்சரியம் பொங்க சட்டென்று இவ்வாறு கேட்டு விட்டான் அரசன்.

"அரசனே, முயற்சி அனைத்தையும் சாத்தியமாக்குகிறது! மானிட வர்க்கம் இம்மூன்று கோர விபத்துகளினின்றும் தப்ப வழிதேடுவதே என் முயற்சி" என்று தீர்க்கமான தொனியில் சொன்னார் சித்தார்த்தன்.

"நான் ஒன்று கேட்கிறேன் — அதற்கு பதில் அளிப்பீர்களா தாங்கள்?"

"முடிந்த வரையில் சித்தமாக இருக்கிறேன்"

"சுவாமி, தங்களைப்பார்த்தால் ராஜலக்ஷணங்களுக்கும் மேலான சக்கரவர்த்திக்குரிய அங்க லக்ஷணங்களன்றோ காணப்படுகின்றன! தாங்கள் யார்? ஊர் எது தங்களுக்கு? முன்பாக அதையறிய விரும்புகிறேன்...—"

மன்னனே! துறவிகளுக்கு ஊரேது, பேரேது! பெற்றோர்களேது?"

"நான் சொல்வது அபசாரமாகில் பொறுத்தருளல் வேண்டும். என்ன காரணத்தால் — எந்த ராஜ்யத்தைத் துறந்து விட்டு இவ்விதமாகி விட்டீர்கள்?"

ஒரு நிமிஷம் மௌனத்தில் ஒன்றி சும்மா இருந்தார் சித்தார்த்தன்.

பிம்பசாரனுடைய அறிவு அதற்கு வேறு பொருள் கண்டது.

"நல்லது! இப்பொழுது அதனால் பாதகமில்லை! எந்த ராஜ்யத்திற்கு என்பது வேண்டுமாகில் எனக்குத் தெரியவில்லையே தவிர ஏதோ ஒரு ராஜ்யத்தின் அதிபதி என்பது மட்டில் நிச்சயமாகத் தெரிகிறது. எந்தக் காரணத்தால் தாங்கள் அரசுரிமையை நிராகரித்திருந்தாலும் பாதகமில்லை......"

"என்ன செய்ய வேண்டும்?" என்று இடை மறித்துக் கேட்டார் சித்தார்த்தன்.

பிம்பசாரனும் சட்டென்று "என் ராஜ்யத்திற்கு தாங்கள் அதிபதியாக வேண்டும்!"

சித்தார்த்தன் மறுபடி மௌன மாகவே, பிம்பசாரனுக்கு பேச தைரியம் வந்தது. உற்சாகமும் பிறந்தது!

"மஹா புருஷ! இப்படிப்பட்ட ராஜ கம்பீர யுவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் — என் ஒரே குமாரத்திக்கு......தெய்வ கிருபை யால், எனது முன்னோர்களின் பாக்கிய விசேஷத்தால் தற்செய லாக இங்கு விஜயம் செய்திருக்கி றீர்கள்! எனது கோரிக்கையை அங்கீகாரம் செய்தே ஆகவேண் டும்......"

"மன்னவ, சற்று நிதானியுங் கள்! ராஜ்யத்தையும், ராஜ போக த்தையும் வேண்டுமென்றேதான் துறந்து துறவியாகி இருக்கிறேன்! மகதத்தின் அதிபதி, நான் யா ரென்று அறிய வேண்டுமா? சுத் தோதன சக்கரவர்த்தியின் மகன் தான் நான்! யசோதரையின் புருஷன் — கபில வாஸ்துவின் தலைவன் நான்! ராகுலன் என்ற பாலகனுடைய தந்தை இன்னும் என்ன வேண்டும்?"

மறு விநாடி சித்தார்த்தனுடைய மலரடிகளைத் தொட்டுக் கொண்டு நின்ற அரசனுடைய கண்களிலி ருந்து தட தடவென்று பெருகிக் கொண்டிருந்ததை — அவனைப் பற்றி எழுப்பிய போதுதான் பார்த்தார் சித்தார்த்தன்.

நிமிர்ந்து பார்த்ததும் "ஏனிவ் வாறு ஆகி விட்டீர்கள்?" என்று கதறினன் பிம்பசாரன்.

அவனை அணைத்து ஆற்றினர் சித் தார்த்தன். "அரசனே, நல்ல முய ற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறேன். ஏனிப்படி வருந்துகிறீர்கள்? மக் களுக்கு நன்மை புரிவது ராஜ நீதி; மக்களுக்கு நன்மை செய் யவே நானும் விரதம் பூண்டு விட் டேன்! ராஜபோகத்தில் — அரண் மனையில் இருந்து கொண்டுதான் அதைச்செய்யவேண்டுமா என்ன? சொல்லப்போனல் ராஜ தர்மத் தின்படி பிரஜைகளை ஆதரிப்பதை விட, இவ்வித நோக்கத்தில் அவர் களுடைய பிறவிப் பிணியையே தவிர்க்கப் பாடுபடுவதுமேல் இல் லையா? அதனல்தான் இதில் இற ங்கி விட்டேன். இனி எவ்வித சிரமமாயினும் ஏற்று, போத மறிந்து, அதை மானிடர்களுக் குப் புகட்டுவதே என் ராஜ்ய பரி பாலன முறை! முற்றிலும் பந்த மகற்றும் பெருமை பெற்றது!" என்று அகமும், முகமும் மலரச் சொன்னர் சித்தார்த்தன்.

பிம்பசாரனுடைய தேகம் புல் லரித்தது! சித்தார்த்தனுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக பணிந்தெழுந்து, கைகளைக் குவித் துக் கொண்டு வினயத்துடன் கூடிய குரலில், "அவதார புருஷ னை மஹாத்மாவே! ஒரு பிரார்த் தனை" என்றான்.

"என்ன அது?"

"வேறு ஒன்றுமில்லை, ராஜ்யத் தைத் துறந்து முதன் முதலாக இந்த நாட்டில் அடி வைத்தீர்கள் இல்லையா?"

"ஆம்!"

"அதே போல, தாங்கள் தேடி அறியவிருக்கும் மகாபோத தத்து வத்தை முதன் முதலாக நானும் எனது நாட்டினருமே கேட்டுப் பயனுற வேண்டும். இதுவே என் வேண்டுகோள்" என்று வேண் டிய மன்னனுக்கு "அவ்விதமே!" என்று அருளினர் சித்தார்த்தன்.

பிரிந்த பாதை

[எஸ். ஏ. மருதையன்]

கலியாணத்திற்குச் சில தினங்களுக்கு முன் நீ அழமாட்டாமல் கண்ணீர் வடித்துக்கொண்டு, ''நான் அங்கே எத்தனைநாள் தங்குவேனே!'' என்று பிரலாபித்தாய். அத்தனை நாட்களும் கழித்து விட்டாய்; இரண்டு பிள்ளைகளுக்கும் தாயாகி விட்டாய். ஆசையும் ஒளியும் வீசிய கண்கள், அன்பு தோய்ந்த பார்வை, யௌவனம் ததும்பும் முகவசீகரம், செவ்வலரி போன்று முறுவலிக்கும் அதரங்கள், பேச்சுக்குப் பேச்சு, பிணக்குக்குப் பிணக்கு சோபையளித்த அந்த யௌவனத் துடிப்பு–இவைகள் எல்லாம் எங்கேயோ மறைந்துவிட்ட ஒட்டி யுலர்ந்த உடம்பு; குழி விழுந்த கண்கள்; ஒடிந்து விழுவது போன்ற நடை, ஆடம்பரமாக அணியும் உடையும்தான் உன்னை அலங்காரப் படுத்துகின்றன! நீ கவலைப் படுவதாகத் தெரியவில்லை; சிந்திப்பதாகத் தோன்றவில்லை. வாழ்க்கைக்கு அடிமையிலும் அடிமையாகி விட்டாய். ஒன்று கேட்கிறேன். இப்பொழுதெல்லாம் நீ என்னைப் பற்றி சிந்திப்பதே யில்லையா?

நீ எங்கேயோ பிறந்தாய். வளர்வதற்காக இங்கு வந்தாய். உன் சாதி மாசு பட்டதாக ஊரார் வம்பு பேசுகிறார்கள். ஆனால் உலகத்தையறியாத பிஞ்சு வயதில் பேதாபேதம் தெரியாத குழந்தையுள்ளங்களில் – எப்படியோ அன்பு வளர்ந்து விட்டது. அந்த நாட்களை நினைத்துப்பார் – நெஞ்சு வெடிக்கும் பெரு மூச்சுத்தான் பொங்கி வரும்.

தடியெடுத்து அடித்துப் படிப்புச்சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களைக் கண்டால், அவைகள் எனக்குப் பிசாசுக் கூடங்களாய்த் தோன்றின. எனவே வீட்டாருக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு, சந்துக்கு சந்து, வீட்டுக்கு வீடு மறைந்திருந்தேன். ஒருநாள் ஊரையடுத்த தென்புறப் பள்ளத்தில் ஒளிந்து கொண்டிருந்தேன். எப்படியோ நீ என்னுடைய இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு, எனக்காகத் தின்பண்டங்கள் கொண்டு வந்தாய். கனத்த புதர் மத்தியில் இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, நீ திடீரென்று, ''சார் சார், இதோ கண்ணன், கண்ணன்'' என்று கூச்சலிட்டாய். அந்தக் கணத்தில் நான் நடுங்கிப் போய், குப்புறப் படுத்துக்கொண்டு, ''சார் சார்! நாளைக்கு வர்ரேன் சார், நாளைக்கு வர்ரேன் சார்'' என்று உளறியடித்தேன். நீ விழுந்து விழுந்து சிரித்தாய் தூ...பயந்தாங்கொள்ளி என்று கேலி செய்தாய். எனக்கு அவமானமும் ஆத்திரமும் சகிக்க முடியாமல் உன் கன்னத்தில் 'பட்' என்று அடித்துவிட்டேன். அடி பட்ட தடிப்பு ஆறு

வதற்கு ஆறுமணி நேரம் பிடித்தது. அவ்வளவிற்கும் உனக்கு என்மீது வெறுப்பு ஏற்படவில்லை. விளையாட்டுக்காக கோபித்துக் கொண்டாய்; இது போன்று எத்தனை எத்தனை சம்பவங்கள் நமது அன்பை இறுக வளர்த்தி வைத்தன!

உன்னையும் என்னையும் பிணைத்து வைக்க உன் மாமா பெரிதும் விரும்பினர். உலகம் கதைக்கிறது என்று அவர் இன்று மறுத்துவிடலாம். அன்றையதினம் அவர் மனம் கபட மில்லாமல்தான் இருந்தது. ஆனல் சாதிப்பூசல் என் தந்தையின் உள்ளத்தைக் கல்லாய்ச் சமைத்து விட்டது. நமது சமூகத்திலே புனிதமான சட்டமா? சாதிச் சட்டம்; அதுயார் வாழச் சம்மதிக்கிறது? யாரை வாழவைத்திருக்கிறது? அது சமூக அமைதிக்குப் பெரிதும் தடையாக உயர்வையும் தாழ்வையும்தான் சிருஷ்டித்துக்கொண்டு போயிருக்கிறது. ஒரு சமயம் ஒரு சமூக சீர்திருத்தவாதி பாடிய பாட்டு ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது:

காதலுக்குத் தீயிடுவார்,
கழுத்தை யறுப்பதுபோல்,
சாகும்வரை இடித்துரைப்பார் - கிளியே
சாதி கெட்ட மானிடர்கள்.

சத்தியவானின் படத்தைப் பார்த்து சாவித்திரி காதல் கொண்டாள். காதலனுக்கு 'அற்பவயசு' என்று அறிந்த பிறகும் அவனையே மணந்து கொண்டாள். புருஷனை இழந்து, யமனேடு போராடி, மீண்டும் கணவனை அடைந்தாள். கதைக்குக் காலில்லை; ஆனல் கருத்துண்டு. தமயந்தியைப் பார். அவள் தேவர் தலைவன் இந்திரனைக் கூட புறக்கணித்தவள். தெய்வ பதவியைத் தியாகம்செய்து, காதலுக்காக நரனை நளனைக் கட்டிக் கொண்டாள். அன்பு, அறம், காதல், தியாகம், தெய்வீகக்காதல் என்று வானளாவப் பேசுகிறோம் படிக்கிறோம். நாடகத்தில்பார்த்து விட்டு விண்ணளாவ விமரிசனம் செய்கிறோம்! "பாரதியார் பாரதியார்" என்று நமது சீர்திருத்தவாதிகளும் பாடாமலிருப்பதில்லை. ஆனல் நடைமுறைக்கு வரும்போதுதான் எல்லாம் நாசமாகி விடுகின்றன. பழைய மூடப் பழக்க வழக்கங்களை உதறித்தள்ளும் 'மனத்தெம்பு' இல்லாமல் சமயவாதிகளாய் வாழ்ந்து விடுகிறோம். வாழ்க்கையின் ஜீவாதாரமான அந்த சம்பவங்களை என்னல் மறக்க முடியவில்லை. மாயாஜாலம் போல அவைகள், ஏதேதோ இந்திரஜால எண்ணங்களைக் கிளப்பி விடுகின்றன. அமைதியாக வாழ்ந்த என்னை சமூகம் வாழாமல் அடித்துவிட்டது.

நீ அவ்வப்போது எங்கள் வீட்டுக்கு வருவாய். என் தாயாருக்கு ஏனே உன்மீது அவ்வளவு பிரியம் "வாடி சிறுக்கி வா, யாரை மயக்கலாம் என்று வந்திருக்கிறாய்?" என்று கேலி செய்வாள். நீ கன்னம் குழி விழச் சிரிப்பாய். வெட்கத்தால் இரத்தம்போன்ற சிவந்த முகத்தில் இரத்தம் துளிர்ப்பது தெரியும். "போங்க அத்தே" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு ஓடி விடுவாய். இந்தக் கேள்வி உனக்குப் பிடித்திருந்தது. பெருமைப் படுவதுகூட முகத்தில் அரும்பும். அவ்வளவிற்கும் எனக்கு உச்சி குளிர்ந்துவிடும். உலக விவகாரங்களை அறியாத சின்னஞ் சிறுவயதில் உனக்கும் எனக்கும் ஏற்பட்ட எண்ணங்கள் விவரிக்க இயலாத சதிபதி மனேபாவங்கள் தான் உதித்தனவே என் தெரி

யாது. ஊரிலே உன்வயதுச் சிறுமிகளும், என்வயது சிறுவர்களும் 'டஜன்' கணக்கில் இருந்தார்கள். அவர்களிடையே இந்த அந்நியோன்யம் ஏனோ ஏற்படவில்லை. பூர்வ ஜன்மத்தொடுப்பு; விட்ட குறை, தொட்டகுறை என்பார்களே? அதுதான் நம்மிடையே வந்து மூண்டிருக்கவேண்டும்!

பள்ளிப் படிப்பு முடிந்து விட்டது. நீ ஊருக்குப் போய்விட்டாய். எனக்கு உலகம் இருண்டு விட்டதுபோல்தோன்றிற்று. அப்பொழுதே என்னையும் என் பெற்றோர்கள் சம்பாத்தியத்துக்காக அயலூருக்கு அனுப்பி விட்டார்கள். "நாலுகாசு சம்பாரிச்சு நாலுபேருக்கு மேலாய்ப் பிழைச்சால்தான் நாலுபேர் கைகட்டி நிற்பார்கள்" இதுதான் என் பெற்றோர்கள் உபதேசம். வியாபாரமுறையை அறிந்து பொருள் சம்பாதிக்க, உருளைக் கிழங்கு வியாபாரத்திற்குப் பெயர் பெற்ற மேட்டுப்பாளையத்திற்குப் போனேன். அங்கே விதி வேறுதிசையில் செலுத்தி விட்டது. அது தனிக்கதை. தான் வாழவும் பிறரை வாழவிடவும் மக்கள் எதுவும் செய்வதில்லை என்றால் உனக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால் சமயம் கிடைத்தால் சமூகத்திற்கு எடுத்துச் சொல்லக் கதையாக எழுதி விடலாம். அதைப்பற்றி உனக்குக் கவலை எதற்கு?

சினிமா பிரபலமடையாத காலம். 'கண்ணப்பா' என்றால் மேட்டுப்பாளையத்தில் அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள். போட்டா போட்டி நாடகங்கள் நடைபெறும். என் கட்சிக்காரர்கள் நாடகத்தைப் பார்க்க சனங்கள் அமோகமாய்க் கூடிவிடுவார்கள். நான் கண்ணகி, மாதவி, சாவித்திரி, வள்ளி போன்ற பிரதம பெண் வேடங்கள் தாங்குவதுண்டு. நடிப்புக்கு நடிப்பு, பேச்சுக்கு பேச்சு கரகோஷம் செவிடுபடும். காட்சி முடிவில் மேடையில் தோன்றி, "நாட்டுப் பருத்தியை வித்து நீக்கி நல்ல நாகரீகமான தொரு பஞ்சுண்டாக்கி" "நம்பிக்கை கொண்டெல்லோரும் கைராட்டை சுற்றுவோம்" "ஆங்கிலப் பேய்களெல்லாம் நிலை திரிந்தாடுது லண்டனிலே" "கர்வமிகுந்த நீலன் மகா கேவலக் கொடுங்கோலன், அந்தோ" "சிறைக்குள் புகுந்த தினமே—சுதந்திர சீலர்க்கில்லை விசனமே" போன்ற தேசியப் பாட்டுகளைப்பாட ஆரம்பித்து விட்டால் "ஒன்ஸ்மோர்" குரல்களுக்கும் கரகோஷங்களுக்கும் ஓய்வு கிடையாது. மக்களின் ஆனந்தங் கண்டு எனக்கு ஆனந்தம் பிறக்கும். சில சமயங்களில் "தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ"? என்ற பாட்டைப் பாடும்போது சுயநினைவிழந்து, கண்ணீர் வடித்தபடியே பாடுவதும் உண்டு. இவைகளைப் பற்றி ஏன் சொல்கிறேன் என்றால் அறிந்தோ அறியாமலோ என் உள்ளம் பரந்த எண்ணங்களுக்கு இலக்காகி விட்டது. உயரிய கலை நடத்தைகளில் பற்று கொண்டது.

வாழ்ந்தால் பொதுவாழ்வு; வீழ்ந்தால் மரணம் என்ற நிலைமைக்கு வந்து விட்டேன். இந்நிலையில் நான் பொருள் சம்பாதிக்கப் போய் 'தகுதியற்றவன்' என்ற அபவாதத்தோடு வெறுங் கையுடன் வீடு திரும்பினேன். தந்தை திட்டினார்; தாயார் கண்ணீர் வடித்தாள். ஊரார் 'ஊதாரி' என்றார்கள். என் குற்றங்களை மன்னித்து உத்தியோகத்தில் அமர்த்துவதற்காக மீண்டும்

'படிக்க' வைக்க லானார்கள். அன்று என்வாழ்வின் புதிய கட்டம் ஆரம்பமாயிற்று. நீயும் என்னைப் பிரிய மனமில்லாதவள் போல் வந்து சேர்ந்தாய். முன் மாதிரி நீ சிறுமியில்லை-பெண்ணாகி விட்டாய். சிறுவயதில் காணாத வனப்பு அப்பொழுது தென்பட்டது. புத்தம் புதிய அழகு பொலிந்து கொண்டிருந்தது. யௌவனத்தின் சோபை உனது அவயவங்கள் ஒவ்வொன்றிலும் பொங்கிக் கொண்டிருந்தது. உருண்டு நீண்ட சிவந்த முகம் நாக படம் போல நெற்றி யழகு நிறைந்த மல்லிகையுடன் கூடிய 'பிர்ம முடிச்சு'. காதளவு கரும் பொட்டு, கலகலக்கும் கைவளையல்கள், துருதுருத்த பயமற்ற கண்கள்.

"காதலொருவனைக் கைபிடித்தே, யவன்
காரியம் யாவினுங் கை கொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச் செய்து வாழ்வமடி"

என்ற பாரதியார் பாட்டைப் பாடிவிட்டு, நீ பயந்தாங்கொள்ளி நான் பாரதநாட்டின் வீரப்பெண்களின் மரபில் தோன்றியவள். சாவித்திரியும், தமயந்தியும் கதையில் என்றால் வாழ்க்கையில் ஒரு சாவித்திரியைப் பார்க்கப்போகிறாய்" என்று வீராப்புப் பேசினாய். நானும் சளைக்காமல், "நான் மட்டும் என்ன சோடையா? உனக்காகவே வாழ்ந்து உனக்காகவே மடியவில்லை யென்றால்நான் ஆண் பிள்ளை யல்ல" என்று சவால்கூறினேன். மனிதன் அறிவு இன்ப காலத்தில் ஸ்திரமாய் இருக்காது போலும்! ஆனால் நான் கட்டிய மனக்கோட்டைகளுக்குக் கணக்கில்லை. எண்ணிய இன்பக்கனவுகளுக்கு இணையில்லை. கடிதங்கள் என்றால் அவைகள் கடிதங்களா? இலக்கியம் என்று சொல்லுகிறார்களே? அவைகள் உன் கடிதங்களுக்கு உரைபோடக்காணாது. அறிந்தோ அறியாமலோ உயர்ந்ததும் பரந்ததுமான கொள்கைகளைக் கடைப் பிடிப்பதற்காக சமூகத்தாரிடமிருந்து விரட்டியடிக்கப் பட்டேன். உயர்ந்த அந்தஸ்து வகிப்பவர்களிடம் நான் அனுபவம் பெற்றதில்லை. இயற்கையாகவே சுதந்திர உணர்ச்சி என்னை 'ஒண்டி'யாக்கி விட்டது. சாதி வேற்றுமையில் உயிர் போன்ற உன்னைப் பிரிந்தேன். வறுமையும் தாறுமாறுமான எங்கள் குடும்ப வாழ்க்கை என்னை விரக்தனாக்கி விட்டது. அன்புக்கு தாசானு தாசன்; காலப் போக்கில் அதுதான் உண்மை யென்றும் நம்பத் தலைப்பட்டேன். இந்தநிலைமையில் உனக்குக் கலியாணம் நடந்தது. அது என் உள்ளத்தில் இருந்த சிறிதளவு 'தெம்'பையும் சுட்டுச் சாம்பலாக்கி விட்டது.

சாதியின் பெயரால், அடிமைத்தனத்தின் பெயரால் ஒருவனின் உரிமை பிடுங்கப்பட்டது. மலராத அழகான மொக்கு மனிதனின் பேராசையால் கசக்கி எறியப்பட்டது. குளித்து வளர்ந்து 'குளு குளு' என்று தளைத்த அழகான பூஞ்செடி, பூத்துப் பூரிக்கும் நாளில் வெட்டப் பட்டு விட்டது. கட்டுக்கடங்காமல் நாற்புறமும் 'ஹோ' என்ற இனிய ரீங்காரத்துடன் ஓடிக்கொண்டிருந்த நீரருவி குறுக்கே அணையிடப்பட்டு சிதறடிக்கப்பட்டது.

அப்புறம் சாந்தி? சாந்தியா? நிரந்தர சாந்தி இலக்கியம் ஒன்றின் மூலம்தான் பெறலாம். என்னை ஆட்கொண்டதும் இலக்கியமே!

கனவு கண்டதிலே — ஒரு நாள்
கண்ணுக்குத் தோன்றாமல்,
இனம் விளங்கவில்லை — எவனோ
என்னகந் தொட்டு விட்டான்
வினவக் கண் விழித்தேன் — சகியே
மேனி மறைந்து விட்டான்.
மனதில் மட்டிலுமே — புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடி.

— பாரதி

ஆசிரியர்:
சரத் சந்திர சட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்

பிஹாரி கோபத்துடன், "யாராயிருந்தால்தான் உங்களுக்கென்ன? இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் உங்களுக் கெதற்கு? சொல்வதைப் பேசாமல் கேட்டுக் கொண்டு கீழே போய்ச் சேருங்கள்" என்ருன்.

பிஹாரியின் பேச்சைக் கேட்டு அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். எல்லாரும் அங்கிருந்து போகத் தலைப்பட்டனர்.

பிஹாரி சமையலறைக்கு வந்தான். அங்கு சாவித்திரி பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். "அம்மா, இருட்டாய்விட்டது. இன்னும் நீங்கள் சாப்பிடக்கூட வில்லை. போய் குளித்து விட்டு வாருங்கள். அதற்குள் பாலும் காய்ந்துவிடும்" என்றுகூறி அவளை ஸ்நான அறைக்கு அழைத்துச் சென்ருன்.

அதற்கப்புறம் பிஹாரி, பாபுக்கு ஹுக்காவை எடுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான். சதீஷ் பேசாமல் படுத்துக் கொண்டிருந்தான். கண்ணைத் திறந்து பார்த்து "யார் பிஹாரியா...?" என்ருன்.

"ஆமாம்"

"அவள் எங்கே?"

"காலையிலிருந்து இதுவரையிலும் சாப்பிடவில்லை. ஆகையால் போய் குளிக்கச் சொல்லி வந்திருக்கிறேன்."

"சரி. உன்னைத் தேடிக் கொண்டிருந்தேன், பிஹாரி"

"என் பாபுஜி? உடம்பிற்கு எப்படி இருக்கிறது?"

"நன்ருயில்லை பிஹாரி! அதனுல்தான் உன்னைத் தேடிக் கொண்டிருந்தேன். கொஞ்சம் என் அருகில் வந்து உட்கார்."

பிஹாரி கதவை மூடிவிட்டு சங்கோசத்துடன் எஜமான் காலருகில் கீழே உட்கார்ந்தான்.

"பிஹாரி, நீ சோதிடத்தை நம்புகிருயா?"

"நம்பாமல் என்ன? சாஸ்திரத்தில் கூறி இருப்பது பொய்யாகுமா?"

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "இப்போது என் கிரகம் கெட்டதாயிருக்கிறது" என்ருன்.

பிஹாரி நடுங்கினன். "அப்படிச் சொல்லாதீர்கள் பாபு!" என்ருன்.

சதீஷ் தலையை அசைத்துக் கொண்டு, "இல்லை பிஹாரி, எனக்குத் தெரியும் இதுதான் எனது கடைசிநோய். இந்தத் தடவை நான் பிழைக்க மாட்டேன்" என்ருன்.

பிஹாரி எஜமானனது இருகாலையும் பிடித்துக்கொண்டு, "இம்மாதிரி பேசாதீர்கள் பாபுஜி! உங்கள் நோயை வாங்கிக்கொண்டு நான் இறந்துவிடுகிறேன். என் ஆயுளை வாங்கிக்கொண்டு நீங்கள் பிழைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் பாபு, நாம் எல்லோரும் இறந்துவிடலாம். ஒருவர்கூடத் தப்பிக்க வேண்டாம்" என்று கூறிவிட்டு அழத்தொடங்கினன்.

"இறப்பதும் பிழைப்பதும் நம் கையிலா இருக்கிறது, பிஹாரி! அதுயார் கண்டார்கள்? நான் உன்னிடம் ஒரு விஷயம் கேட்கிறேன், ஒளிக்காமல் சொல்கிருயா?"

பிஹாரி அழுதுகொண்டு, "சத்தியம் செய்கிறேன் பாபு! உண்மையை ஒளிக்க மாட்டேன்" என்ருன்.

"ஒன்றும் ஒளிக்க மாட்டாயே!"

"இல்லை பாபுஜி! ஒன்றும் ஒளிக்க மாட்டேன்."

"சரி, உட்கார்!"

பிஹாரி கண்ணைத் துடைத்துக் கொண்டு பழைய இடத்தில் உட்கார்ந்தான்.

உடனே சதீஷ், "சரி, சாவித்திரியை எங்கு கண்டு பிடித்தாய்?" என்ருன்.

"நான் முதலிலேயே சொன்னேனே, காசியில் என்று"

"அங்கே விபின் பாபுவைச் சந்தித்தாயா?"

பிஹாரி பல்லைக் கடித்துக் கொண்டு, "ராம், ராம்! அந்தப் படவாவை எதற்குச் சந்திக்கிறேன்?" என்ருன்.

"உன் கண்ணாலேயே சாவித்திரியின் படுக்கையில்......"

பிஹாரி இரு காதுகளையும் பொத்திக்கொண்டு, "அதற்குத் தண்டனைதான் இது! ஒன்றும் அறியாமல் பேசியதற்கு நாக்கு அறுந்து விழுந்திருக்க வேண்டும்" என்ருன்.

சதீஷ் ஆச்சரியத்துடன் எழுந்து உட்கார்ந்து கொண்டு, "என்ன உளறுகிருய்?" என்ருன்.

பிஹாரி மிகுந்த வெட்கமடைந்தான். ஒவ்வொன்ருக அனைத்தையும் கூறினன். ஒன்றையும் கூட்டிக் குறைக்காமல் சொன்னன். அவனுக்குத்தெரிந்தது,மோக்ஷதா, சக்ரவர்த்தியிடமிருந்து தெரிந்தது முதலிய அனைத்தையும் சொன்னன்.

சதீஷ் சிலைபோல உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

வெகுநேரத்திற்குப் பிறகு சதீஷ் பெருமூச்சு விட்டுக்கொண்டு, "இத்தனை நாளும் அவைகளை எல்லாம் என்னிடம் ஏன் சொல்லவில்லை, பிஹாரி?" என்றான்.

"சொல்வதற்கு துடித்துக் கொண்டுதானிருந்தேன் பாபுஜி! ஆனால் சொல்வதற்கு ஏனோ வரவில்லை"

"ஏன்?"

"அவர் சொல்லக்கூடாது என்று சத்தியம் வாங்கிக்கொண்டார்"

"சரி, போகட்டும் பிஹாரி, அன்று இரவு விபின் பாபுவைத் தவிர வேறுயாரையும் விரும்புவதில்லை யென்று சொன்னாளே! அவனோடுதான் போய்க்கொண்டிருந்தாள். இதற்கு என்ன அர்த்தம் பிஹாரி?"

"இதற்கு எனக்கு அர்த்தம் தெரியவில்லைப் பாபுஜி! ஆனால் இது சுத்த முழுப்பொய் என்பது எனக்குத் தெரியும். இது பொய் யில்லாவிட்டால் என் ஒரு குழந்தையும் தக்காது போகட்டும் பாபுஜி! அம்மா போகும் போது 'இந்த அபவாதத்தை ஏன் சுமக்கிறீர்கள்?' என்று கேட்டேன். இருந்தாலும் இதை வெளிப்படுத்த வேண்டாமென்று தடுத்து விட்டார்கள். அழுதுகொண்டே, "பிஹாரி, சத்தியமாக இதை பாபுவிடம் சொல்லக்கூடாது. அவர் என்னை வெறுத்தாலும்சரி, இகழ்ந்தாலும் சரி, நீ மட்டும் பாபுவிடம் உண்மையைச் சொல்லிவிடாதே" என்று என்னைத் தடுத்துவிட்டார்" என்றான். இதைக் கூறும் பொழுது அவனுக்குப் பழைய நினைவுகள் வரவே மிகுந்த வேதனைப் பட்டான். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

ஆனால், எஜமானனுடைய கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்ததை அவன் பார்க்கவில்லை.

சதீஷ் வெகுநேரத்திற்குப்பிறகு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அவள் தன் விரலைக் கொண்டு தன் கண்ணை ஏன் குத்திக் கொண்டாள் என்பது எனக்குத் தெரியும். எப்போதும் பொய் வெல்லாது பிஹாரி..."

கதவு ஆடியது. "இதென்ன? கதவை மூடிக்கொண்டு தூங்குகிறீர்களா? கொஞ்சம் கதவைத் திறவுங்கள்"

பிஹாரி எஜமானனுடைய முகத்தைப் பார்த்தான். ஆனால் சதீஷ் பேசாமல் கண்ணைமூடிப் படுத்துக் கொண்டான்.

வெளியிலிருந்து மறுபடியும் குரல் வந்தது. "கதவைத்திற. கை சுடுகிறது."

பிஹாரி மௌனமாக எழுந்து கதவைத் திறந்துவிட்டு வெளியில் சென்று விட்டான்.

அத்தியாயம் நாற்பத் தொன்று

சாவித்திரி சூடான பாலைக் கொண்டு வந்து அறைக்குள்ளிருந்த மேஜைமீது வைத்தாள். வெண்பட்டுப் புடவையை அணிந்து கொண்டிருந்தாள். ஈரக் கூந்தல் பின்புறம் தொங்கிக் கொண்டிருந்தது. கன்னத் தோரம் சில கூந்தல்கள் சுருண்டு கிடந்தன. சதீஷ் கடைக்கண்ணால் பார்த்தான். இன்றுதான் சாவித்

திரியை முதல் தடவையாகப் பார்ப்பது போலப்பார்த்தான்.

சாவித்திரி அவன் பார்ப்பதைக் கவனிக்கவில்லை. அருகில் வந்து புன்முறுவலுடன், "கதவைச் சாத்திக்கொண்டு எஜமானரும் வேலைக்காரனும் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்? இந்தப் பொல்லாதவன் எப்படி வெளியே போனான்?" என்றாள்.

சதீஷால் ஒன்றும் பேச முடியவில்லை. பேசினால் மனோபாவம் வெளிப்பட்டுவிடும் என்று கருதி பேசாமல் இருந்து கொண்டான்.

"சிறுவயதில், 'பூனைக்கு யார் மணி கட்டுவது' என்ற கதையைப் படித்திருப்பீர்கள். இங்கு யார் மணி கட்டுவது? நீங்களா? அல்லது உங்கள் பாபுஜியா?" என்றாள்

இதற்கும் சதீஷ் ஒன்றும் பேசாமல் படுத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு சாவித்திரி அருகில் உட்கார்ந்து கொண்டாள். சரி, வேடிக்கை இருக்கட்டும். எனக்கு அவைகளைச் சொல்லியாகவேண்டும். உபேந்திர அண்ணாவிடம் சண்டை இட்டுக் கொண்டீர்கள்; சரோஜினியிடம் கூட சண்டை இட்டுக்கொண்டீர்கள். சண்டை ஒருநாளைக்கு சமாதானம் ஆகலாம். ஆனால் இவைகள் எல்லாம் என்ன? சாராயம் குடிப்பதில்லை என்று என்னிடம் சத்தியம் செய்தீர்கள். ஆனால் கஞ்சா வரையிலும் குடிக்க ஆரம்பித்து விட்டீர்கள். இது சாதாரண நிலையில் அல்ல; பக்தி பூர்வமாக குரு சமேதராக ஆரம்பித்திருக்கிறீர்களே"? என்றாள்.

சாவித்திரி, 'சரோஜினியைப் பற்றிக் குறிப்பிட்டதைக் கண்டு வருத்த மடைந்தான், பிஹாரி அனைத்தையும் கூறியிருக்கிறான் என்று நினைத்துக் கொண்டான். 'உன்னால் தான் நான் அழிந்தேன் நீதான் எனக்கு சனியன்' என்று சொல்லலாமென சதீஷ் நினைத்தான். ஆனால் அப்படிக் கூற முடியவில்லை. "சாராயம், கஞ்சா குடிப்பதில் என்ன தப்பு"? என்றான்.

"என்ன தப்பு என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியாது."

"தெரியா விட்டால் போகிறது. இனி குடிப்பதில்லை என்று சத்தியம் செய்த தாவது நினைவிருக்கிறதா இல்லையா?"

"நீ யார் அதைக் கேட்பதற்கு? பலவந்தமாக சத்தியம் வாங்கியதால் அதுஒரு தடையாகிவிடுமா?"

சாவித்திரி சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நான் யாரா? உண்மையாகச் சொல்லுகிறாயா? நான் யாருமல்லவா?" என்றாள்.

சதீஷ் தலையை ஆட்டிக் கொண்டு, "யாருமல்ல" என்றான்

"பின் எதற்காக சாராயப் புட்டியை வீசி எறிந்து விட்டு, வாயைச் சுத்தம் செய்துக் கொண்டு வந்தாய்?"

"நீ வீண் தொந்தரவு செய்வாய் என்ற பயத்தால்."

சாவித்திரி சிரித்துக்கொண்டு, "இன்னும் சாவித்திரி அந்நியளா? சரி. இந்தப் பாலைக் குடித்து விட்டுத் தூங்கு" என்று கூறி பாலைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து அவன் எதிரில் நின்றாள்.

சதீஷ் ஒன்றும் பேசாமல் பாலை வாங்கிக் குடித்துவிட்டுப் படுத்துக் கொண்டான்.

சாவித்திரி அறையை விட்டு வெளிவரத் தொடங்கினள். அப்போது சதீஷ் அவளைக் கூப்பிட்டு, "நீ குளித்துவிட்டாயா?" என்றான்

சாவித்திரி, "ஆமாம்" என்றாள்.

"என்ன சாப்பிட்டாய்?"

"இன்னும் சாப்பிட வில்லை. போய்த்தான் ஏதாவது சாப்பிட வேண்டும்"

"எங்கே படுத்துக் கொள்கிறாய்?"

"கதவுக்கு வெளியே இடம் இருக்கிறதா என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் மரத்தடியில் படுத்துத் தூங்குகிறேன்" என்று கூறித் தனக்குள் சிரித்துக் கொண்டே, "இதைக்கூறுவதற்கு நீ கஷ்டப்படவில்லையா?" என்று கூறிவிட்டு சதீஷின் நெற்றிமீது விழுந்து கிடந்த ரோமத்தை ஒதுக்கினள். அப்போது அவன் நெற்றி சுடுவதைக் கண்டு திடுக்கிட்டாள். பிஹாரி அறைக்குள் அடி எடுத்து வைத்துக்கொண்டு, "அம்மா, உங்கள் படுக்கை......" என்றான்.

சாவித்திரி அடுத்த அறையைக் காட்டி, "அந்த அறையில் போடு பாபுக்கு ஜுரம் கொஞ்சம் அதிகமாகத் தெரிகிறது. நான் பக்கத்தறையிலேயே படுத்துக் கொள்கிறேன். இடையிலுள்ள கதவு திறந்தே யிருக்கட்டும். நீயும் இன்று இங்கேயே படுத்துக் கொள்" என்றாள்.

பிறகு சதீஷிடம், "அதிகநேரம் விழித்துக் கொண்டிருக்காதே" என்று கூறிவிட்டு மெதுவாகக் கீழே போய் விட்டாள்.

சாவித்திரி சிறிது நேரத்தில் சாப்பிட்டுவிட்டு மேலே வந்து பக்கத்து அறையில் படுத்துக் கொண்டாள்.

அதிகாலையில் எழுந்திருந்ததும் சதீஷ் படுக்கை அறைக்குச் சென்று அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். ஜுரம் அதிகமாக அடிப்பது தெரிந்தது. அவளுடைய குளிர்ந்த கரம் பட்டதால் சதீஷ் கண்விழித்தான். இரு கண்களும் செக்கச் செவேலெனச் சிவந்திருந்தது. அவனது உடல் நிலையைக்கண்டு சாவித்திரி பயந்து போய் படுக்கை மீது உட்கார்ந்தாள். வாய் திறந்து ஒன்றும் அவளால் கேட்க முடியவில்லை.

சதீஷ் அவளது கரத்தை எடுத்து தனது சூடான நெற்றியின் மீது வைத்துக்கொண்டு, "நேற்றே நான் பிஹாரியிடம் சொல்லியிருக்கிறேன். இதுதான் எனது கடைசி ஜுரம். இந்தத்தடவை நான் பிழைக்க மாட்டேன்" என்றான்.

ஜுரவேகத்தால் நடுங்கிக் கொண்டே உளறினன். துக்கத்தால் அவள் தொண்டை அடைத்துக்கொண்டது. அவனுக்குத் தைரியம் கூறக்கூட அவளால் முடியவில்லை. அங்கேயே மண்டையை உடைத்துக் கொண்டு இறந்து விட்டால் தேவலாம் என எண்ணினள்.

"ஆனல், நீ என் அருகில் இருக்கிறாய். இது ஒன்றுதான் எனக்கு ஆறுதல் அளிப்பது" என்று கூறிவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

நேற்று இரவு யாரை 'நீயாரோ' என்று கூறினனோ அவரே இன்று அதி முக்கியமானவராகி விட்டார்.

பிஹாரியை அழைத்து டாக்டரைக் கூட்டிவரச் சொல்லக்கூட

சாவித்திரியால் முடியவில்லை. சதீஷின் மார்பின்மேல் கையை வைத்துக்கொண்டு கற்சிலைபோல் உட்கார்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு சதீஷ் இந்தப்புறம் திரும்பினன். மறுபடியும் சாவித்திரியின் கையை எடுத்துத் தனது நெற்றியின் மேல் வைத்துக் கொண்டு, "நானும் டாக்டர்தான். சாயங்காலம் வரையிலும் எனக்கு நினைவு இருக்காது. ஆனல் இப்போது எனக்குச் சுய நினைவு இருக்கிறது. எனக்கு மறுபடி நினைவு வராவிட்டால் இந்தப் பெட்டியில் நான் எழுதியிருக்கும் உயில் இருக்கிறதென உபேந்திர அண்ணவிடம் சொல்லு. என் முகத்தில் கூட விழிக்கமாட்டார் என்பது எனக்குத்தெரியும். ஆனலும் நான் இறந்தபிறகு எனதுவிருப்பத்தைப் பூர்த்திசெய்யாமல் விடமாட்டார். சாவித்திரி, உன்னைவிட்டால் இந்த உலகத்திலே அவரைத் தவிர எனக்கு வேறு யாருமே கிடையாது" என்றான்.

உயிலைப் பற்றிக் கேள்விப் பட்டதும் அவளால் பொறுக்க முடியவில்லை. சாவித்திரி அவன் மார்பின் மீது தலையை வைத்துக் கொண்டு குழந்தையைப்போலத் தேம்பித் தேம்பி அழுதாள்.

இரவு முழுதும் விழித்திருந்துவிட்டு விடியற்காலைதான் பிஹாரி கண்ணயர்ந்தான். இந்தச் சத்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டெழுந்து ஒன்றும் புரியாமல் உற்று நோக்கினன்.

சதீஷ் தனது கரத்தால் சாவித்திரியின் முகத்தை உயரத் தூக்கினன். பிறகு கண்ணீரால் நனைந்திருந்த கன்னத்தை முத்தமிட்டுவிட்டுப் பேசாமல் படுத்துக் கொண்டான். அவனது முகம் முழுவதும் சாவித்திரியின் கண்ணீரால் நனைந்து விட்டது.

சரத்கால சூரியன் ஆகாயத்தில் பவனி வந்து கொண்டிருந்தான். சாவித்திரி எழுந்து உட்கார்ந்து புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சன்னலைத் திறந்தாள். அறைக்குள் சூரிய வெளிச்சம் நன்கு பட்டது.

பிஹாரியின் கண்களிலும் நீர் துளித்தன. சாவித்திரி தனது குரலை மாற்றிக்கொண்டு சாந்தமாக, "பயப்படுவதற்கு ஒன்றுமில்லை, பிஹாரி! நான் இருக்கும் போது பாபுக்கு ஒன்றும் வந்து விடாது. பாபு குணமடைந்து விடுவார். நான் பாபுவின் படுக்கையை மாற்றிப் போடுகிறேன். நீ அதற்குள் போய் டாக்டரைக் கூட்டிவா" என்று கூறிவிட்டு சதீஷின் படுக்கையில் வந்து உட்கார்ந்தாள்.

டிஸ்பன்சரி டாக்டர் வந்து பார்த்து விட்டு, "நிமோனியா அறிகுறிகள் தெரிகின்றன. பயப்பட வேண்டியதில்லை" என்றார்.

மருந்து தயாரிப்பதற்காக டாக்டர் கீழே சென்று விட்டார். சதீஷ் சிரிக்க முயற்சித்துக் கொண்டு சாவித்திரியைப்பார்த்து "நான் மரணத்தைக் கண்டு பயப்படவில்லை" என்று கூறிவிட்டுத் தலையணைக் கடியிலிருந்த சாவிக்கொத்தை எடுத்துக்காட்டி, "இது நினைவிருக்கிறதா? ஒருநாள் இதை நீயே உன் முந்தாணையில் முடிந்து கொண்டாய். இன்று இதை நான் மறுபடியும் உன் முந்தாணையில் முடிந்து விடுகிறேன்" என்று கூறிக்கொண்டு கண்ணீரால் நனைந்திருந்த சாவித்திரியின் புடவைத் தலைப்பில் சாவிக்கொத்தை முடிந்

துவிட்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

சாவித்திரியிடம், பிஹாரி எல்லையற்ற விசுவாசம் கொண்டிருந்தான். சதீஷின் செய்கையால் அவன் மிகுந்த சந்தோஷமடைந்தான். ஆனால் சில நாளைக்குப் பிறகு சாவித்திரி முகத்தில் துக்கம் குடிகொண்டிருப்பதைக் கண்டு திகைப்படைந்தான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, சாவித்திரியைத் தனிமையில் கண்டு, "அம்மா, ஏன் இப்படி வருத்தமாகக் காணப்படுகிறீர்கள்? தாங்கள் சகித்துக் கொள்வதை இந்த ஏழைக் கிழவன் சகித்துக் கொள்ளமாட்டானா? நீங்கள் எல்லா விஷயத்தையும் என்னிடம் வெளிப்படையாகச் சொல்லுங்கள். நான் அதற்கு ஒருவழி செய்கிறேனா இல்லையா பாருங்கள்?" என்றான்.

சாவித்திரி, "உன்னிடம் இதுவரையிலும் சொல்லவில்லை பிஹாரி. ஆனால் நீ எழுதிய மாதிரி உபேந்திர பாபுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். இரண்டு நாளைக்குள் வராவிட்டால், நீ போய் வரவேண்டும்" என்றாள்.

பிஹாரி வருத்தத்துடன், "என்னைக் கேட்காமல் எதற்கு இப்படிச் செய்தீர்கள்?" என்றான்.

"ஏன் பிஹாரி? அவர் வரமாட்டாரா?"

"வந்தாலும் வரலாம். இருந்தாலும் என்னை ஒரு பேச்சு கேட்டிருக்கவேண்டும்."

"எதற்கு?"

பிஹாரி கூறுவதற்கு வெட்கமடைந்தான். ஆனால் அவசியம் சொல்லியாக வேண்டும். ஆனாலும் வாயிலிருந்து உடனே வரவில்லை.

"இந்தச் சமயத்தில் அவர் வர வேண்டியது மிகவும் அவசியம் பிஹாரி?"

பிஹாரி மிகுந்த சிரமத்துடன், "நீ அருகில் இல்லாமல் இந்த உலகத்திலுள்ளவர்கள் அத்தனை பேரும் பாபுவின் படுக்கையைச் சூழ்ந்து கொண்டிருந்தாலும் அவர் பிழைக்க மாட்டார். இது உனக்கே நன்கு தெரியும். பின் எதற்காக யோசிக்க வேண்டும்?" என்றான்.

"இவைகளை எல்லாம் நான் யோசித்துப் பார்த்தேன், பிஹாரி! நான் வீட்டிற்குள் எங்காவது ஒளிந்து கொண்டு என்வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன். உபேந்திர பாபு வராமல் ஒரு காரியமும் ஆகாது. நானோ பெண், ஆபத்துக் காலத்தில் எனக்கு என்ன தெரியும்? வேண்டாம் பிஹாரி, அவர் வருவதுதான் நல்லது" என்றாள்.

"எனக்கு உபேந்திர பாபுவைத் தெரியாது. ஆனால் பாபுவை நன்கு தெரியும். நான் முட்டாளாயிருந்தாலும், இந்த எழுபது வருஷமாக உலகத்தில் நன்கு அடிபட்டிருக்கிறேன். ஆண்கள் உன்னைவிடப் புத்திசாலிகளா? இவைகளை எல்லாம் விட்டுவிடு. நீ அப்பால் போய் விட்டால் பாபு பிழைக்க மாட்டார். இதை நான் சத்தியம் செய்கிறேன். என் பாபுவை விட்டு எங்காவது போய் விடாதே."

பிஹாரியைவிடச் சாவித்திரிக்கு இவைகளெல்லாம் நன்குதெரியும். ஆனாலும் அவள் பேசாமலிருந்து கொண்டாள். சதீஷருகில் இல்லா

விட்டால் அவன் எவ்வளவு வருத்த மடைவான் என்பதும் அவளுக் குத் தெரியும். இருந்தாலும் இம் மாதிரி நிலைமையில் அவள் தனி யாக என்ன செய்ய முடியும்? தன்னையும் சதீஷையும், உபேந்தி ரன் வெறுப்பது அவளுக்கு நன்கு தெரியும். அவன் வந்து விட்டால் இவள் தன்னை மறைத்துக் கொள் ளத்தான் வேண்டும். இவைகளை எல்லாம் நன்கு சிந்தித்துப் பார் திருக்கிருள். இவ்வளவு நாளும் எத்தனையோ துக்கத்தைப் பொ றுத்தவள் இந்தத் துக்கத்தையும் பொறுத்தாக வேண்டும். கடைசி யாக நோயைப்பற்றி உபேந்திர னுக்குவிபரமாக எழுதியிருந்தாள். வரும்படி மிகவும் வேண்டிக் கொண்டிருந்தாள். சாவித்திரி உறுதியாக, "முடியாது பிஹாரி! அப்படி நடக்க விடமாட்டேன். அவர் நாளை வரையிலும் வராவிட் டால் நீ போய்த்தான் அழைத்து வரவேண்டும்" என்றுள்.

பிஹாரி விசனத்துடன், "அம்மா, அப்படியெல்லாம் பேசாதே! நான் உனது வேலைக் காரன், நீ சொல்லும் வேலையைச் செய்பவன்தான். ஆனாலும் நானும் மனிதன்தான். நீ ஒளிந்து கொண்டிருப்பது வெளிப்பட்டு விட்டால் என்னைத் திட்டக் கூடாது" என்று கூறிப் போய் விட்டான்.

சாவித்திரியின் அந்தக் கடிதம் உபேந்திரனுக்குக் கிடைக்கவே யில்லை. தந்தையும், மகேஸ்வரியும் வற்புறுத்தியதின் மேல் தேக ஆரோக்கியத்திற்காக பூரி சென்று ஒருமாதம் ஆகிறது. அங்கு யாரும் அறிமுகமில்லாததால் முதல் நாள் இரவு ஒரு ஓட்டலில் தங்கினுன். அடுத்த நாள் ஏதாவது நல்லஇடம் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணினுன். ஆனல் ஓட்டல் சொந்தக்காரரான புவன் முகோ பாத்தியாய] அவனை நன்கு உப சரித்தான். அவனுக்கு ஒருவித அசௌகரியமுமின்றிப் பார்த்துக் கொண்டான்.

காலையில் ஒரு ஸ்திரி வீடு சுத்தம் செய்பவள் உபேந்திரனை மேலும் கீழும் பார்த்தாள். பிறகு துடைப் பத்தை கீழே எறிந்துவிட்டு உபேந்திரன் காலில் விழுந்து வணங்கினுள். பிறகு, "உங்க ளுக்கு உடம்பிற்கு என்ன? ரொம்ப பலவீனமாகக் காணுகி றீர்களே! உங்களுடைய பழய முகத்தையேகாணுமே" என்றுள் உபேந்திரன் ஆச்சரியத்துடன், "என்னை அடையாளம் கண்டு கொண்டாயா?" என்றுன்.

இவள் பெயர் மோக்ஷதா என் பதும் ரொம்ப நாளைக்கு முன் சதீஷ் வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள் என்பதும் உபேந்திர னுக்கு ஞாபகம் வந்தது. "நீ இங்கு வேலைக் கமர்ந்திருக்கி ருயா?" என்றுன்.

மோக்ஷதா சிறிது வெட்கத் துடன், "இல்லை; ஆமாம். ஒரு விதத்தில் வேலைக்காரிதான் முகோபாத்யாய, "கல்கத்தாவில் என் விழுந்து கிடக்கிருய்? எங்கா வது புண்ணிய ஸ்தலத்தில் வந்து இருக்கலாம்வா. ஒன்றும் முடி யாவிட்டால் ஒரு ஓட்டல் கீட் டல் வைத்து......"

உபேந்திரன் இடை மறித்து, "ஓட்டல் நன்கு நடைபெறுகிற தல்லவா?" என்றுன். அவள் கூறுவதை உபேந்திரன் கேட்க இஷ்டப்பட வில்லை என்பதை அவன் முகத்தைப் பார்த்ததும் மோக்ஷதா கண்டுகொ ்டாள்.

''எப்படியோ நடக்கிறது, பாபு. இந்தவயதில் என்னால் இனி வேலையும் செய்ய முடியாது. மகோபாத்யாய ஆதரவையும் விடமுடியாது. பெண்ணை நான்தான் வளர்த்தினேன். அவள் என்னைச் சின்னம்மாள் என்று அழைப்பாள். என் சொந்தப் பெண் போல நான் அவ்வளவு பிரியமாக வளர்த்தினேன். அவள் யார் என்றும் தெரியாது. பெயர் சாவித்திரி என்று சொன்னாள். நான் ஒரு விடுதியில் கொண்டு போய் விட்டேன். பாபுக்கள் அவளை வேலைக்காரி யென்றே கருதவில்லை. எஜமானி போலே நடத்தினார்கள். அவள் போகாதிருந்தால் இன்று நான் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை. என் தான் ஒளித்து வைக்க வேண்டும். சின்ன பாபுவால்தான் இன்று நான் இவ்வளவு கஷ்டப் படுகிறேன்'' என்றாள்.

உபேந்திரன் உற்சாகத்துடன், ''சின்னபாபு யார்? சதீஷா?'' என்றான். மோக்ஷதா, ''ஆமாம், அந்த சிரிக்கி எந்தக்கண்ணால் சின்ன பாபுவை பார்த்தாளோ தெரியவில்லை. அதிலிருந்து அவளுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டார். ஆனால் இத்தனை செய்தும்கூட அவள் தன்னை தொடக்கூட விடவில்லை. விபின் பாபுவைப்போன்ற ஜமீன்தார்கள் கூட என் காலடியில் விழுந்து தங்க நகைகளுக்காக பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூடச் சொன்னார்கள். ஆனால் சிரிக்கி அவர்களை எல்லாம் கண்ணெடுத்துக் கூடப்பார்க்கவில்லை, பத்தாயிரம் ரூபாயை துச்சமாக மதித்து வீடு வாசலை விட்டு விட்டு கட்டின சேலையுடன் எங்கோ போய் விட்டாள். வேலைசெய்து செய்து அவள் உடம்பே தேய்ந்து போயிருக்கும். எங்கு போனாளோ?'' என்று சொல்லச் சொல்ல அவள் கண்களில் நீர் நிறைந்தது.

உபேந்திரன் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மோக்ஷதா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ''பாபு, சின்னபாபு இப்போது எங்கே இருக்கிறார்? எப்பவாவது பார்த்தால் அவளைப் பற்றி ஏதாவது தகவல் தெரியுமா என்று கேட்டுப்பார்க்க வேண்டும்'' என்றாள்.

''சதீஷ் இப்போது எங்கிருக்கிறான் என்பது எனக்கும் சரியாகத்தெரியாது. சொந்த ஊருக்குப் போய் விட்டான் என்று கேள்விப்பட்டேன். சரி, அந்த சாவித்திரி யார்?''

மோக்ஷதா கோபத்துடன், யாரா? அவள் ஒரு பிராமணப் பெண். ஒன்பதாவது வயதில் விதவையாகி வீட்டில் வந்து இருந்தாள். அவளுக்கு ஆசை காட்டி அழைத்து வந்து வைத்திருந்தேன்'' என்றாள்.

உபேந்திரன் நன்கு புரிந்து கொள்ளாமல், ''நீ என்ன சொல்லுகிறாய்'' என்றான்.

''இந்த புவன மகோபாத்யாய தான்! இவர்தான் அவளுடைய பெரிய அக்காளின் கணவர்.''

உபேந்திரன் ஆச்சரியத்துடன், ''இது அவருடைய ஓட்டலா?'' என்றான்.

''ஆம் பாபு, ஆம் நீங்கள் அவளை என்ன செய்ய முடியும்? மோக்ஷதா அல்ல ஏமாறுவதற்கு, அவள் சாவித்திரியாக்கும்! பத்தாயிரம் ரூபாயை துச்சமாக மதித்தவள்.''

உபேந்திரன் சிறிதுநேரம் பேசாமல் இருந்து விட்டு, ''மோக்ஷாத்தியாவைக் கூப்பிடுகிறாயா? அவரிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும்'' என்றான்.

''இப்போதுதான் அவர் கடைக்குப் போனார். இதற்கு மத்தியில் ஒருநாள் சக்கிரவர்த்தியைச்சந்தித்தேன். அவர் அழுதுகொண்டே அவளுடைய குணத்தையும் அழகையும் பற்றிச் சொன்னார்''

''சக்கிரவர்த்தி யார்?''

அவர் அந்த விடுதியில் சமையல்காரராய் இருந்தார். அவருக்கு எல்லா விஷயங்களும் தெரியும். ஏதோ ஒரு பிராமணன் வீட்டில் வேலை செய்யும் பொழுது நோய் வாய்ப் பட்டு லீவு கேட்டாளாம். ஆனால் அந்தப் பிராமணன் கொஞ்சம்கூட இரக்கமின்றி இதுவரையிலும் மருந்துக்காகக் கொடுத்த ஏழு ரூபாயையும் கொடுத்துவிட்டுப் போ என்றானாம். பிராமணனால்தான் இவ்விதம் இரக்கமின்றி நடந்துகொள்ள முடியும். எப்படியோ கடனைத் தீர்ப்பதற்காகச் சதீஷ் பாபு வீட்டிற்குக்கூட வந்தாளாம். பாபுவிடம் பணம் எத்தனை கேட்டாலும் இல்லை என்று சொல்லமாட்டார்! ஆனால் அவளுடைய துர்ப்பாக்கியம் அன்று இரவு பாபுவின் ஒருநண்பர் குடும்பத்துடன் வந்தாராம். அப்போதுதான் அவள் குளித்துவிட்டு வீட்டிற்குள் வந்தாளாம். அதே சமயத்தில் அவர்களும் வந்து விட்டார்களாம். நண்பர் இரவு அங்கு தங்கவில்லை. அவளைக்கண்டவுடன் கோபித்துக் கொண்டு மனைவியையும் அழைத்துக் கொண்டு போய் விட்டாராம். சின்னபாபு திடுக்கிட்டு விட்டாராம். ஆனால் சாவித்திரி மானமுள்ளவள். அவள் இதைப் பொறுப்பாளா? அவள் தண்ணீர் கூடக்குடியாமல் அங்கிருந்து வந்துவிட்டாள். அதிலிருந்து அவளைப்பற்றி தகவலே தெரியாது'' என்றாள்.

உபேந்திரன் திடுக்கிட்டுப் போனான். அன்று இரவு நடந்த சம்பவங்கள் எதிரில் நடப்பதுபோலிருந்தது. மோக்ஷதா கூறுவதில் பாதியாவது உண்மையிருந்தால் அன்று வெறுத்தஅவள் எத்தகைய விசித்திரமான பெண்! மோக்ஷதா தன் வேலையாகப் போய் விட்டாள். ஆனால் உபேந்திரன் அந்த இடத்தை விட்டு அசையாமல் யோசித்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆறு மாதத்திற்கு முன் இந்த விஷயத்தைப் பற்றி அவன் கேள்விப்பட்டதே இல்லை. உண்மையற்றதை, அசத்தியத்தை எப்போதும் விஷம் போலக் கருதுபவன். சதீஷைப் போன்ற பால்ய நண்பனைக் கூட இந்தக் காரணத்தால் தான் இழந்தான். அவன் இதயம் பளிங்கு போலச் சுத்தமானது. ஆனால் எஃகு போல் கடினமானது. இருந்தாலும் இன்று முன்பின் அறியாத ஒரு பெண்ணின் துயரக் கதையைக் கேட்டு மனம் ஏன் சஞ்சலமடைய வேண்டும்? இந்தத் துர்ப்பலம் அவன் இதயத்தில் இத்தனை நாளும் ஒளிந்திருந்திருக்க வேண்டும்; சுரபாலா அவனது சக்தியில் சரிபாதியை அபகரித்துக் கொண்டு போய் விட்டதால் இப்போது ஒளிந்திருந்த அந்த துர்ப்பலம் தலை எடுத்து விட்டது. சுரபாலா தன்னை எவ்வளவு அசக்தனாக்கிப் போய்விட்டாள் என்பதை உணர்ந்து திடுக்கிட்டான்.

(தொடரும்)

முத்து வியாபாரம்

அ. கிருஷ்ணமூர்த்தி
பி. ஏ. எல்.

தேசத்தின் பொருளாதாரத்தில் உண்மையாகவே ஒரு சீர்திருத்தம் வேண்டுந்தானா? வேண்டினால், அச்சீர்திருத்தம் எவ்விடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்? அழகுக்கும், ஆடம்பரத்திற்கும், ஆபரணத்திற்கும் தேசத்தின் செல்வத்தை நமது பெண்கள் அள்ளி அள்ளி வீசுகிறார்கள். போட்டா போட்டியாக இவர்கள் வீசியெறியும் வெள்ளியும் தங்கமும் அந்நிய நாட்டில் மட்டுமல்ல, எதிரி நாட்டிலும் போய்க் குவிகின்றன. இதைத் தடுத்துச் சமாளிப்பது எந்த விதத்தில்? — என்று ரோமானிய செனேட் சபைக்கு ஒரு கடிதம் எழுதினான் சக்கரவர்த்தி டிபேரியஸ்.

கிறிஸ்து பிறந்து 22வது வருஷம். ரோம தேசத்து அரசியல் வாதிகளிடம் ஒரு பெருத்த கவலை ஏற்பட்டது. தேசத்தை விட்டு ஏராளமான வெள்ளியும் தங்கமும் வெளியேறிக் கொண்டிருந்தன. ரோம சாம்ராஜ்யத்தின் பொருளாதார சக்தியே வறண்டுவிடும் போலிருந்தது. இதைத் தடுப்பதற்காக மன்னன் டிபேரியஸ் எடுத்த முயற்சிதான் மேற்படிக் கடிதம்.

இப்படிக் கவலைப் படும்படி வெள்ளியும் தங்கமும் வெளியேறிய காரணமென்ன? ரோம தேசத்துச் செல்வந்தர்களும், பெண்களும் ஏராளமான செல்வத்தைச் செலவிட்டு வெளி நாட்டிலிருந்து ஆடம்பரமான ஆடைகளை – அணிகலங்களை–பரிமளமான வாசனைத் திரவியங்களை வருவித்து டாம்பீக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தது தான். இப்பொழுது இந்தியாவின் சொத்து அந்நிய நாட்டுக்குப் போவதைப் பற்றி நாம் முறையிடுவது போல், அன்று ரோமானிய தேசாபிமானிகள், இத்தாலியின் செல்வம் இந்தியாவுக்கு வருவதைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தார்கள்.

இந்தியாவுக்கும் ரோம தேசத்துக்கும் நடந்த வியாபாரத்தில் தமிழ்நாடு முதல்தரமான இடத்தைப் பெற்றிருந்ததோடு, இதன் விளைபொருளில் ரோம தேசம் மயங்கி நிற்கும்படியும் ஆயிற்று. இரண்டு தேசத்திற்கும் நடந்த வியாபாரத்தில் முத்து, மிளகு, துணி மூன்றும் முக்கியமானவை. அன்றாட வாழ்வுக்கு மிளகும், துணியும் வேண்டுமென்றாலும் முத்து ஆடம்பரமானது, அதை வாங்குவதோ டாம்பீகவாழ்க்கை. முத்துக்களின் மேல் ரோம தேசம் கொண்டிருந்த மோகமோ கொஞ்ச நஞ்சமல்ல. ரோமர்களுக்கு முத்து ஒரு மயக்கம்!

நண்பரிடம் பேசிக் கொண்டிருந்த போது, இதைச் சொல்லிவிட்டு, "அவ்வளவு முத்துக்களும் தமிழ் நாட்டிலிருந்து போயின" என்றேன்.

"அப்படியா, ஒரு முத்து கூட நம்மால் இப்பொழுது பார்க்க முடியவில்லையே" என்ருர்.

"சில முத்துக்கள் 80,000 பவுன் என்று படித்திருக்கிறேன்" என்றேன்.

"டே, யப்பா, அப்படி விலையுள்ளது நம்ம கண்ணில் எப்படியகப்படும்?" என்ருர்.

"எப்படியா? அது போகட்டும்; எகிப்து நாட்டு ராணி அதைச் சாராயத்தில் சேர்த்துக் கரைத்துக் குடித்து விட்டாள்" என்றேன்.

அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. உடனே கேட்டார், "அவள் எப்பேர்ப்பட்ட பேர்வழி பாரையா? அவள் சாகவில்லையா?"

"என் சாகிருள்?"

"வைரம் சாப்பிட்டால்தான் சாவார்கள் போலும்......"

"ஆம், வைரம் சாப்பிட்டால் தான் சாவு; தங்கமும் வெள்ளியும் முத்தும் பவளமும் பஸ்பம் பண்ணிச் சாப்பிடுவதைப் பார்த்ததில்லையா?"

"ஆம்; நமது மடாதிபதிகள் கூட......" என்று இழுத்தார்.

"சரி, சரி, அங்கெல்லாம் போக வேண்டாம்; இதைக் கேளுங்கள், ரோம தேசத்துப் பெண்கள் தங்கள் உடம்பு முழுக்கச் சரஞ்சரமாக முத்துக்களைக் கோத்து அலங்கரித்தார்கள் தெரியுமா?"

"இப்படி அலங்கரித்தால், இன்னும் எத்தனைவகை ஆடம்பரமோ? என் தேசத்திள் செல்வம் சிதருது?-என்று சொல்லிவிட்டு, இவ்வளவு முத்துக்களும் தமிழ் நாட்டிலிருந்து போனவைதானு?" என்ருர்.

"ஆம்" என்றேன்.

"அதன் சரித்திரம் என்ன?" என்ருர்.

"சுவையுள்ளது" என்றேன்.

"சொல்லுங்கள்" என்ருர்.

சொல்லத் தொடங்கினேன்:

"என்ன பேசா மடந்தையா? வாயைத் திறந்தால் முத்தா சிந்திவிடும்" என்று கேட்கும் பழக்கம் தமிழ் நாட்டில்தான் உண்டு. முத்து விலை மதிக்க முடியாத ஒரு செல்வம். சோழ நட்டுக்குச் சோறு உண்டு. சேர நாட்டுக்கு மலைகள் உண்டு. தொண்டை நாட்டில் சான்ருேர் உண்டு. ஆனல் பாண்டிநாடு.........? முத்துடைத்து என்று பழைய பாட்டிலும் படித்திருக்கிருேம்.

பாண்டிய நாடு செல்வத்திலும் வியாபாரத்திலும் செழித்து விளங்கியற்கு இதுவே முதற் காரணம். பழங் காலத்தில் இந்தியாவில் நடந்த உள்நாட்டு வியாபாரத்தில் தமிழ் நாட்டிலிருந்து தங்கம், வைரம், முத்து, கிளிஞ்சல் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் வட நாட்டிற்கு ஏற்றுமதியாயின. வட நாட்டிலிருந்து குதிரையும், தோலும், கம்பளியுமே இறக்குமதி செய்யப்பட்டன. இதனல், வடமொழியில் அரசியற் பொருளாதாரத்தை – அதாவது அர்த்த சாஸ்திரம் என்ற நூலை – எழுதிய கௌடில்யர் தென்னுட்டோடு வடதேசம் நடத்தும் வியாபாரத்

தைவிட வட நாட்டுக்குத்தான் தென்னாட்டு வியாபாரம் மிகவும் முக்கியமானது என்று குறிப்பித்திருக்கிறார்.

இப்படி முத்துக்கள் வட நாட்டுக்கு ஏற்றுமதியான போது முத்து என்ற சொல்லும் ஏற்றுமதியாயிற்று. தமிழில் 'முத்து' என்பது வடமொழியில் 'முக்த' என்று வழங்கப்படும். வட நாட்டின் கடற்கரையைவிடத் தமிழ் நாட்டுக் கடற்கரை மூன்று திசையிலும் பல நூறு மைல்களுக்கு வளைந்து கிடக்கிறது, ஒரே நீளமாக! பண்டைக் காலத்தில் உலகத்தில் முத்துக் குளிக்கப்பட்ட இரண்டொரு கடல்களில் தென்னிந்தியக் கடல்கள் முதன்மையானவை என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

சந்திர குப்தன் அவைக் களத்திலிருந்த கிரேக்க தூதனை மெகாஸ்தனீஸ், தென்னிந்தியாவைப் பற்றி எழுதும் போது, பாண்டிய நாட்டைப் பற்றி வேடிக்கையான ஒரு கதையைக் குறிப்பிடுகிறான். அதாவது பாண்டி நாட்டு முத்துக்களைப் பற்றி.

"தரையிலும் கடலிலும் வாழும் அரக்கர்களை அழித்து உலகத்தைக் காப்பாற்றுவதற்காகக் கிருஷ்ணன் உலக முழுவதையும் சுற்றி வந்தபோது, கடலில் விளைந்த இந்த அழகிய முத்துக்களைக் கண்டான். கண்டவன், இவை தன் பெண்ணின் அலங்காரத்துக்கு ஆகுமே என்று நினைத்தான். உடனே தென்னிந்தியாவில் ஒரு பெரிய நாட்டை யாளும் தனது மகளுக்குப் பயன் படுமாறு கடல்களில் உள்ள எல்லா முத்துக்களும் இந்துமகா சமுத்திரத்தில் வந்து திரளும்படிச் செய்தான். அதனால்தான் பாண்டியன் கடல்களில் முத்துக்கள் குவியல் குவியலாக அகப்படுகின்றன."

இந்தக் கதை எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது பாருங்கள்! அதாவது உலகத்தில் உயர்ந்த முத்துக்கள் ஏராளமாக விளைந்த தேசம் பாண்டிய தேசந்தான் என்பது கருத்து. பாண்டியனைப் பற்றிச் சொல்லும் போது சங்கும் கிளிஞ்சலும் முழங்கும் ஆரவாரமுடைய கடல் சூழ்ந்த பாண்டியன் என்று இலக்கியங்கள் அவனைப் பாராட்டும்.

சிறு பெண்கள் கடலோரத்தில் மணல் வீடு கட்டி, வண்டல் மண்ணால் பாவை பண்ணி, அரிசிக்குப் பதிலாக முத்துக்களை உலையிலிட்டு விளையாடும் காட்சிகளை இலக்கியத்தில் படித்திருக்கிறோம். "முத்தின் அழகைத் தோற்கடிக்கும் பற்கள்" என்றும் "பவளக் கிண்ணத்தில் வைத்த முத்துமாலை போலச் சிவந்த இதழுக்குள் அமைந்த வரிசையான பற்கள்" என்றும் தமிழ் இலக்கியங்களில் எடுத்த இடத்திலெல்லாம் படிக்கலாமே! முத்துக்களைப் பார்த்துவிட்டு, இவை சந்திரன் என்று மயங்கி ஆம்பல் பூத்துவிடுவதைப் பரிகசிக்கும் பெண்களை இலக்கியத்தில் பார்த்திருக்கிறோம்.

சங்குகள் கடலில் கூட்டங் கூட்டமாக இருக்கும். ஆயிரம் சங்குகள் சுற்றிக் கொண்டுள்ள ஒரு சங்கு வலம்புரிச் சங்கம். ஆயிரம் வலம்புரிச் சங்கு சுற்றிய ஒரு சங்கு "சலஞ்சலம்" எனப்படும், இந்த வலம்புரிச் சங்கு, முத்தை ஈனுவதற்குப் படும் வருத்தத்தால் வரும் சத்தம் இலக்கியத்தில் எங்கும் முழங்குகிறது. அப்படி ஈன்ற முத்துக்கு "வலம்புரி முத்து" என்று பெயர். அருமையாக ஒருவரை ஆசை

யோடு பாராட்டும் போது, "கண்ணே, மணியே" என்பது போல, "வலம்புரி முத்தே" என்று சொல்வதுண்டு. இந்த இடத்தில்

"மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே" —

என்று கண்ணகியை அவள் காதலன் பாராட்டுகிற சுகம் நினைவுக்கு வருகிறது.

கண்ணிலிருந்து புலம்பி வழிகிற நீரை முத்து முத்தாகக் கண்ணீர் விட்டாள் என்று சொல்லுகிறோம். எழுதுகிற எழுத்துத் தெளிவாக இருந்தால் முத்து முத்தாக எழுதினான் என்கிறோம்.

இப்படி முக்கியமான இடங்களிலெல்லாம் முத்துக்களைப் பெருவாரியாக உதாரணத்துக்கு எடுத்தாளும் பழக்கம் தமிழ் நாட்டில்தான் அதிகம்; அது தமிழ் நாட்டுக்கே உரிமையான மாபு-பரம்பரை வழக்கம்!! ஏன்? முத்து ஆதியில் அதிகம் விளைந்தது தமிழ்க் கடலில்தான்! அதுவும் பாண்டியன் கடலில்: பாண்டி நன்னாடு முத்துடைத்து என்றோம்.

பாண்டி நாட்டின் துறைமுகங்களில் கொற்கை என்பது ஒரு பெரிய வியாபாரப் பட்டினம். அங்கிருந்து கிழக்கே மலேயா, ஜாவா, சுமத்திரா, கம்போடியா, சையாம், சைனா வரையில் வியாபாரம் பரவியிருந்தது. மேற்கே எகிப்து, ஆசியா மைனர், கிரீஸ், ரோம தேசங்கள் வரையில் தமிழ் நாட்டுக் கப்பல்கள் போய் வந்தன. மேற்கிலும் கிழக்கிலுமிருந்து வரும் கப்பல்களுக்குப் பாண்டி நாண்டின் துறைமுகம் ஒரு தங்குமிடமாகவும் பயன் பட்டது.

இந்தக் கொற்கைத் துறைமுகம் பாண்டி நாட்டின் பழைய துறைமுகங்கூட. மதுரை, பாண்டியர்களுக்குத் தலைநகரமாவதற்கு முன்பு, இந்தக் கொற்கைதான், பழைய தலைநகரமாக விளங்கிற்று. இங்கு முத்துக்களின் உற்பத்தியும், வியாபாரமும் ஏராளமாக நடந்தன. இதனால் தமிழ் இலக்கியங்களில் கூடக் கொற்கையைப் பற்றிச் சொன்னால், அதன் முத்துக்களையும் சேர்த்துச் சொல்லுவது வழக்கமாகிவிட்டது. "கொற்கையம் பெருந்துறை முத்தின்" "முத்தின் கொற்கை" என்று முத்தும் கொற்கையும் ஒன்றாகச் சேர்த்துச் சொல்லப் பட்ட இடங்கள் பல. ஐரோப்பிய தேசங்களிலிருந்து அக்காலத்தில் இங்கு வந்த யாத்திரிகர்கள் எல்லாரும் கொற்கையில் நடந்த முத்து வியாபரத்தைப் புகழ்ச்சியாகப் பேசியிருக்கிறார்கள்.

கௌடில்யர் முத்துக்களை மூன்று வகையாகச் சொல்லுகிறார். தாம்ரபர்ணிக, பாண்ட்ய கவாடக, சூர்ணேய என்பவை அந்த மூன்றுவகை முத்துக்கள். தாம்ரபர்ணிக என்பது, தாம்ரபரணியாறு கடலோடு கலக்குமிடத்தில் உண்டாகும் முத்து வகையைக் குறிப்பது. பாண்டிய கவாடக என்பது பாண்டியர்களது கபாடபுரம் என்ற நகரம் இருந்த இடத்தில் விளையும் முத்தைப் பற்றியது. இந்த நகரம் 2500 ஆண்டுகளுக்கு முன்பே கடலில் முழுகிப் போயிற்று. (சூர்ணேய என்பது இலங்கையில் உண்டான முத்துப் போலும்) இதனால் பாண்டிய நாட்டில் ஏராளமான முத்துக்கள் உற்பத்தியாயின என்பது விளங்கும். இந்த முத்துக்கள் இந்தியாவின் பல பாகத்துக்கும் ஏற்றுமதி

செய்யப்பட்டன என்பதும் தெளிவாகும்.

காளிதாசர் பாண்டிய தேசத்தில் உண்டான முத்துக்களைப் பற்றி இரகு வம்சம் என்ற புத்தகத்தில் அழகிய ஒரு உபமானத்தோடு சொல்லுகிறார். "தாமிரபரணி யாறு கடலோடு கலக்குமிடத்தில் உண்டான அழகிய முத்துக்களை அந்தப் பாண்டிய மன்னர்கள், தாங்கள் அவ்வளவு காலமாகச் சேர்த்து வைத்த புகழை அள்ளிக் கொடுப்பது போலக் கொடுத்தார்கள்" என்றார். பாண்டியர்களின் கோட்டைக் கதவு முத்தாலும், மணியாலும், பொன்னாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது என்று வால்மீகி ராமாயணம் கூறும்.

இப்படித் தென் பாண்டி நாடு முத்து விளையுந் தேசமாக விளங்கியதோடு, இந்தியா முழுவதும் இம்முத்துக்கள் பரவி புகழ் படைத்திருந்தன. இனி, இவை வெளி தேசங்களுக்கு வியாபாரப் பொருளாக ஏற்றுமதியான விவரங்களைப் பார்ப்போம்.

ஐரோப்பிய தேசங்களைவிட ஆதிகாலந் தொட்டுத் தென்னிந்தியாவோடு ஆசியாமைனரும், பாபிலோனும் எகிப்தும், அரேபியாவும் வியாபாரம் செய்து வந்தன. ஆசியாமைனரில் கிறிஸ்து பிறப்பதற்கு 1400 வருஷங்களுக்கு முன்பு, அஸ்ஸீரியச் சாம்ராஜ்யம் ஏற்பட்ட போதே தென்னிந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் வியாபாரம் வளரத் தொடங்கிற்று. அஸ்ஸீரிய நாட்டுக்கு இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்கள் தங்கம், பட்டு, வாசனைத் திரவியம், முத்து என்பன. உயர்ந்த முத்துக்கள் ஏராளமாக உற்பத்தியானதுதான் தென்னிந்தியாவைப் பற்றிக் கிரேக்கர்கள் அறிவதற்குக் காரணமாயிருக்க வேண்டும் என்று கேம்பிரிட்ஜ் இந்திய சரித்திரம் கூறுகிறது.

அடுத்தபடித் தென்னிந்தியாவோடு பழங்காலந்தொட்டு வியாபாரம் நடத்தியது எகிப்து தேசம். தாலிமி என்ற அரச குடும்பத்தினர் எகிப்தை யாண்ட போது, வருஷந்தோறும் 120 கப்பல்கள் தமிழ் நாட்டின் சரக்குகளை ஏற்றிக் கொண்டு போகும் என்று சரித்திரக் குறிப்புகள் சொல்லுகின்றன. இந்தச் சரக்குகளில் முத்துக்கள் ஒரு முக்கியமான பாகம் என்பது பின்வரும் செய்திகளால் தெரியவரும். இப்படிக் கொண்டு போகப்பட்ட பண்டங்கள், எகிப்தை யடுத்த அலெக்சாண்டிரியாத் துறைமுகத்தின் வழியாக ஐரோப்பியதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அராபியரும், எகிப்தியரும் செங்கடலில் அக்காலத்தில் மிகவும் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். அதனால்தான், ஐரோப்பா தமிழ் நாட்டோடு நேரடியாக வியாபாரம் செய்ய முடியாமல், எகிப்து மூலமாகத் தமிழ்நாட்டுச் சரக்குகளைப் பெற்றுக் கொள்ள நேரிட்டது.

எகிப்து தேசத்தை யாண்ட தாலிமி குடும்பத்தாரில் கடைசிவாரிசாக வந்தவள் கிளியோபாட்ரா என்ற புகழ் படைத்த ராணி. கிளியோபாட்ரா ஜூலியஸ் சீசருடன் கூடியிருந்ததும், பிறகு அவனுடைய அரசியல் கூட்டாளியான அந்தோணியுடன் விளையாண்டதும், கடைசியில் தற்கொலை செய்து கொண்டதும் சரித்திரம் படித்தவர்களுக்குத் தெரியும். கிழக்கத்திய மன்னர்

களிடமிருந்து பெற்ற விலையுயர்ந்த இரண்டு பெரிய முத்துக்களைத் தன் காதில் அணிந்திருந்தாள் கிளியோபாட்ரா. ஒரு முத்தை எடுத்துக் கடுஞ் சாராயத்தில் கரைத்துக் குடித்து விட்டாள்; அதன் விலையோ 80,000 பவுன்.

இன்னொன்றையும் கரைப்பதற்கு முன், அவள் காதலன் அந்தோணி, தடுத்து, "வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டதின் பேரில் அந்த முத்து பாதுகாக்கப் பட்டது. விலையுயர்ந்த முத்துக்களை இப்படிக் குடித்தால், சாதாரண முத்துக்களை எத்தனை குடித்திருப்பாள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படியானல் குடும்பத்திலும் தேசத்திலும் இருந்த முத்துக்கள் எவ்வளவோ! இவள் இறந்த போது வயது 39க்குங் குறைவுதான். உடல் அழகை வளர்ப்பதற்கு இவ்வளவு விலையுயர்ந்த முத்துக்கள் அவளுக்கு வேண்டியிருந்ததென்ருல், அவள் வாழ்க்கையின் ஆடம்பரம் எவ்வளவு ஆர்பாட்டமானது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இக்காலத்தில் ரோமானியர்களுக்கு அதிக முத்துக்கள் கிடைக்கவில்லை. ஜூலியஸ்... ஜூகூர்த்தியப் போரின் போதுதான், முதன் முதல் முத்துக்கள் ரோம தேசத்துக்குள் போயின. கிளியோபாட்ராவின் முதல் காதலன் ஜூலியஸ் சீசர்; சீசருக்குப் பெண் கொடுத்த மாமன் பாம்பி. பாம்பி, தான் கிழக்கத்திய தேசங்களில் செய்த சண்டைகளில் எதிரியிடமிருந்து ஏராளமான செல்வத்தை வாரிக்கொண்டு வந்தான். அதனல் பெரிய கௌரவமும் செருக்கும் ஆடம்பரமும் அவனிடம் அதிகப்பட்டன. அந்தச் செல்வத்தில் முத்துக்களும் ஏராளமாக இருந்ததால், ரோம தேசத்தில் முத்தின் நடமாட்டம் அதிகரித்தது.

இப்படிப் பழக்கமாவதற்கு முன்பு, அதாவது முத்துக்கள் கிடைப்பது அருமையாக இருந்த காலத்தில் ரோமானியன் ஒருவன், ஒருத்தியின் காதில் அணிந்திருந்த முத்தை எடுத்து அப்படியே விழுங்கி விட்டான். ஏன்? ஒரே தடவையில் பெரிய விலை மதிப்புள்ள ஒரு சரக்கைச் சாப்பிடுகிருேம் என்று திருப்தி யடைவற்காக. அந்த முத்தின் விலை 8,000 பவுன் என்று இக்காலம் மதிப்பிடப்படுகிறது.

முத்தின் நடமாட்டம் அதிகரித்ததும், அரச குடும்பங்களும், செல்வந்தரும் அதைத் தலைகால் தெரியாமல் வாங்கி, மாலை மாலையாகப் பூட்டிக் கொள்ளுவதில் ஆசைப் பட்டார்கள். அதே காலத்தில் ரோம தேசத்து நாகரிகம் பெருகி, வியாபாரம் செழித்து, அரசியல் ஓங்கி, ரோம சாம்ராஜ்யம் நான்கு திசையிலும் விரிய ஆரம்பித்தது.

சீசருக்கு வாரிசாக வந்த ஆக்டேவியஸ் என்பவன் அகஸ்டஸ் என்ற பட்டம் பெற்றுக்கொண்டு ஆட்சிக்கு வந்தான். எகிப்திய ராணி கிளியோபாட்ராவின் நடவடிக்கைகள் அவனுக்குப் பிடிக்கவில்லை. கிளியோபாட்ரா, அவனல் துரத்தப்பட்டுக் கடைசியில் தற்கொலை செய்து கொண்டாள். எகிப்தியத் தாலமி குடும்பத்து ஆட்சி அவளோடு முடிவடைந்தது. எகிப்து, ரோமப் பேரரசில் ஒரு மாகாணமாக மாற்றப் பட்டது. அரசன் அகஸ்டஸ், தாலமி குடும்பத்தார், சொத்துக்களையும், எகிப்தியச் செல்வங்களையும் ரோம தேசத்துக்குள் கொண்டு வந்து குவித்த போது,

முத்துக்களின் புழக்கம் ரோம தேசத்தில் சர்வ சாதாரணமாகி விட்டது.

அகஸ்டசின் ஆட்சிக் காலம் கி. மு. 39 முதல் கி. பி. 14 வரையில். இப்பொழுது, ஆசியா மைனர், எகிப்து, சிறியா ஆகிய நாடுகள் ரோம சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன. அராபியரை இந்திய வியாபாரத்திலிருந்து விரட்டிவிட்டு, அகஸ்டஸ் நேரடியாகத் தென்னிந்தியாவுடன் வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தினன். அப்பொழுதுதான் பருவக் காற்றைக் கொண்டு ரோமர்கள் வியாபாரம் செய்யத் தெரிந்து கொண்டனர்.

அகஸ்டஸ் மன்னனிடம் பாண்டியர் முதலிய தமிழ் வேந்தர்கள் தூதுகள் விடுத்து வியாபாரத்தையும், உறவையும் பலப்படுத்திக் கொண்டனர். இவன் காலத்தில் ரோமாபுரி, கல்வி, செல்வம், நாகரிகம் எல்லாவற்றிலும் உச்சம் பெற்றிருந்தது. பிராணிகளைக் கொன்று அதிலிருந்து எடுக்கப் படும் பொருள்களில் விலையுயர்ந்த சரக்கான முத்துக்களை ரோம சாம்ராஜ்யம் ஏராளமாகத் தருவித்தது. இந்த முத்துக்கள் மன்னார் வளைகுடாவில் உற்பத்தியானவை. மதுரை, கொற்கை, உறையூர், காவிரிப்பூம் பட்டினம் ஆகிய நகரங்களில் அந்நிய தேசத்து வியாபாரிகள் வந்து முத்துக்களைக் கொள்முதல் செய்தார்கள். வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்தது.

அறியன் என்பவர் இந்த முத்துக்களைப் பற்றிச் சொல்லும் போது, ஒரு முத்து, அதைப் போல் மூன்று மடங்கு எடையுள்ள சுத்தத் தங்கத்திற்குச் (1:3) சமம் என்று மதிப்பிடுகிறார். ரோமானியப் பெண்கள் இந்த முத்துக்களைப் பெரிதும் காதலித்தார்கள். உச்சி முதல் உள்ளங்கால் மிதியடிவரையில் ஒவ்வோர் அங்கத்தையும் முத்துக்களைப் பலவிதமாகக் கோத்து அலங்காரம் செய்தார்கள். அந்த முத்துமாலைகள் ஒன்ருேடு ஒன்று உரைசி உண்டாகும் சலசல என்ற சத்தத்தால் தங்கள் வருகையை மற்றவர்க்குத் தெரிவித்தார்கள். அந்தச் சல சலப்பு ஓசை கேட்கும்படி நடப்பதில், அவர்கள் மிகவும் ஆசைப்பட்டார்கள்.

அகஸ்டசுக்கு அடுத்து வந்த மன்னன் கிளாடியஸ். இவன் அரேபியர்களை மேலும் அடக்கிச் செங்கடல் வழியை நன்கு திறந்து விட்டான். இதனல் இவன் காலத்திலும், இவனுக்குப் பின் வந்த நீரோ மன்னன் காலத்திலும் முத்துக்களும் மணிகளும் குவியல் குவியலாக ரோமாபுரியில் போய் இறங்கின. இதற்குக் காரணம் ரோம தேசத்துக்கும், தமிழகத்துக்கும் தங்கு தடையில்லாமல் நடந்த நேரடியான கடல் வியாபாரம்.

மன்னன் கிளாடியசின் மனைவி லோலா என்பவள். அடிக்கடித் தன்னை முத்து வடங்களால் அலங்கரித்துக் கொண்டுப் பலருங் காணும்படி வருவதில் அவளுக்கு அதிகப் பிரியம். அப்படி அவள் அணிந்து கொள்ளும் முத்துக்களின் மதிப்போ, 300 ஆயிரம் ஸ்டர்லிங்.

கிளாடியசுக்குப் பின் வந்தவன் நீரோ. வேடிக்கை விநோதங்களில் பொழுது போக்குவதில் மயக்கமுள்ளவன். ரோம் தீப்பற்றி எரியும் போது, பிடில் வாசித்தான் நீரோ என்பது பலருக்கும் தெரியும். இவன் தன் தலைமுடியிலும்

தாடியிலும் முத்துக்களைக் கோத்துத் தொங்க விட்டுக் கொண்டான்.

இப்படி அரசர்களும், செல்வந்தர்களும்; ஆண்களும் பெண்களும்; இளையவரும் முதியவரும் முத்துக்களை இவ்வளவு தூரம் தலைகால் தெரியாமல் தருவிப்பதில் ஏராளமான செல்வத்தை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். தமிழகத்தில் முத்துக்குளிக்கும் துறைமுகங்களில், ரோம தேசத்துத் தங்க நாணயங்கள் குவியல் குவியலாக வந்து இறங்கின. இந்தியாவுக்கு வருஷந்தோறும் பத்து லட்சம் பவுன்களை ரோம தேசம் அனுப்புகிறதே என்று பிஸினி என்பவன் மனம் வருந்திக் கி. பி. 70 — இல் சொல்லியிருக்கிறான். தனது சொந்தச் சரக்குகளை அதன் உற்பத்தியான அடக்க விலையை விட நூறு மடங்கு விலைக்கு இந்தியா நமது தேசத்தில் சரக்குகளை இறக்குகிறது என்று அவன் குறை கூறியிருக்கிறான். இந்தச் சரக்குகளில் முத்து ஒரு முக்கியமான பாகம்.

இப்படி அவன் குறை கூறியது நியாயந்தான். தங்கமும் வெள்ளியும் முதலான விலையுயர்ந்த உலோகங்கள் நாகரிகமடைந்த பலதேசத்தில் நெடு நாளாக நடத்திய சண்டைகளில் வாரிக் கொண்டு வந்த செல்வம். இதைத் தவிர, அந்த உலோகங்களை உற்பத்தி செய்யும் தொழில் முயற்சி ரோமானியர்களுக்கு இல்லை. டாரென்டம், கார்தேஜ், காரிந்த் முதலான பழைய நாகரிக நகரத்தில் அடித்துக் கொண்டு வந்த செல்வத்தில் ரோமர்களின் கை ஓங்கிற்று. அந்தச் செல்வமெல்லாம், இந்தியாவில் நடத்திய வியாபாரத்தில், வாசனைத் திரவியத்திற்கும், முத்துக்கும், மணிகளுக்கும், மெல்லிய ஆடைகளுக்குமாகச் செலவழிந்தன. அரசர்கள் குடிப்பதும், விளையாடுவதுமாகக் காலங்கழித்தனர். ஒரு முத்தின் விலை எவ்வளவோ ஆயிரம் பவுன் என்றால் இவ்வளவு முத்துக்கும் எவ்வளவு பவுன் செலவாகியிருக்கும்!

தமிழ் நாட்டில் மதுரை, பொள்ளாச்சி, கருவூர், வெள்ளலூர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, முதலான இடங்களில் ரோம நாணயங்கள் ஏராளமாக அகப்பட்டுள்ளன. இப்படி இடைவிடாது தங்கமும் வெள்ளியும் வந்து இறங்கியதால், ரோம தேசத்தின் பொருளாதார சக்தி சிதைந்து விட்டது. செலவான தங்கம், வெள்ளிக்கு இடாக உற்பத்தி கிடையாது. ஒருமுறை பொன்முலாம் பூசிய தங்க நாணயம் தமிழகத்துக்கு வந்ததைத் தமிழர்கள் ஒப்புக் கொள்ள வில்லை. பிறகு மறுபடியும் பொற்காசுகள் பெருவாரியாக வரத்தொடங்கின. தங்கத்திலும் வெள்ளியிலும் உயர்ந்த நாணயங்கள் செய்வது குறைந்து, கலப்பு நாணயங்கள் பிறகு உற்பத்தி செய்யப்பட்டன. கி. பி. 218-ல் இந்தத் தங்க நாணயமெல்லாம் போய்ச் செப்பு நாணயங்கள் வழங்கத் தொடங்கின. உலோக வசதி கெட்டு, நாணய மதிப்பும், நாணயச் செலாவணியும் நிலையில்லாமல் போய், இத்தாலி தேசம் தன் தலைநகரத்தைக் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் கடைசியில் ரோமிலிருந்து நிகோமீடியாவுக்கும், அங்கிருந்து பைசாந்தியத்திற்கும் மாற்றிக்கொள்ள வேண்டி வந்தது.

இப்படிப்பட்ட விளைவுகளை எண்ணிப் பயந்துதான், இந்த டாம்பீகச் செலவுகளைப் பற்றிப்

பிளினி என்பவன் குறை கூறி ஞன். இதற்குப் பல காலம் முன்பு டிபேரியஸ் செனேட் சபைக்குக் கடிதம் எழுதியதும் தேசத்தின் சொத்து வெளியேறு வதைக் கண்டு அஞ்சியதால் தான். பட்டுக்கும் பருத்திக் துணிக்கும் வேறுபாடு தெரியாத படி அவ்வளவு மெல்லிய துணி களைத் தமது உடம்பு அழகெல்லாம் வெளியில் தெரியும்படி ரோமானி யப் பெண்கள் உடுத்திக் கொண்டு வருவது பிளினிக்குப் பிடிக்க வில்லை. இதோடு முத்துக்களையும் வடம் வடமாக அணிவதென்ருல், எவ்வளவு செல்வம் பாழாகிறது! அப்படி ஆடையுடுத்துவதால், ரோமானியப் பெண்கள் நாண மில்லாதவர் ஆகிவிட்டார்கள் என்று கூறுகிருன் பிளினி.

இப்படி முந்நூறுண்டுகள் நடந்த வியாபாரத்தில் தென்னிந் திய முத்துக்கள் ரோம தேசத்துச் செல்வத்தின் பெரும் பகுதியைப் பாழாக்கின. ரோம தேசத்து நாகரிகம் உச்சத்திற்கு ஏறியதும் அங்கிருந்து இறங்கியதும் ஒரு வேடிக்கை போல் முடிந்து விட் டது கடைசியில்!



கஷ்டமான கூட்டுறவு

ரா. நா.

உலகத்தில் உள்ள கூட்டுறவுகளில் நிர்வகிப்பதில் மிகவும் கஷ்டமானது தாம்பத்திய வாழ்க்கைதான் என்று மார்க்கரெட் கலின்ஸ் அம்மையார் கூறியுள்ளார். பெண்கள் உரிமைக்காக வெற்றிகரமாகப் போராடியவர் மார்க்கரெட் கலின்ஸ். கவிதை போன்ற கலைகளுக்காக சிறப்பாக உழைத்து வருபவர் அன்னாருடைய கணவர் டாக்டர் ஜெம்ஸ் கலின்ஸ். இருவரும் ஈருடலும் ஒருயிருமாய் வாழ்ந்து வந்திருக்கின்றனர். தாம்பத்திய வாழ்கையில் இப்படி வெற்றி கண்டவர் அதைக் கஷ்டமான கூட்டுறவு என்றால் அதில் கட்டாயம் உண்மை இருக்க வேண்டும்.

இல்லற வாழ்வில் இன்பம் காண்பது மெத்தக் கடினமாயிருக்கும். நம் நாட்டில் மார்க்கரெட் கலின்ஸ் அம்மையார் கூறியது உண்மையிலும் உண்மை என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

மேல் நாட்டில் காதலித்துக் கலியாணம் செய்து கொள்கிறார்கள். கணவன் மனைவி இருவரும் ஏதாவது ஒரு லட்சியத்திற்குப் போராடுபவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் கூடிய மட்டில் முரண்பாடில்லாமல் சதிபதிகள் வாழ்வது அங்கு சாத்யமாயிருக்கிறது.

ஒன்றுபட்ட மனம் படைத்த தம்பதிகளைக் காண்பது நம் நாட்டில் கடினமாகவே இருக்கிறது. இதற்குக் காரணமென்ன?

பெண்ணுக்கு வயது வந்து விட்டால் அதற்கு எப்படியாவது விவாகத்தை முடித்துவிட வேண்டும் என்று தாய் தந்தையர் அவதிப் படுகின்றார்கள். கலியாணம் என்றால் என்ன? இல்லற வாழ்க்கை என்பது யாது என்பதை அறிய முடியாத வயதில் பெண்ணுக்கு விவாகம் முடிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அதற்கு உலகத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலும் இருக்காது. வாழ்க்கை என்றால் என்ன என்பது புலப்படும் மனோ நிலையும் ஏற்பட்டிருக்காது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட நிலையில் நம் நாட்டுப் பெண்கள் இல்லற வாழ்க்கையில் புகுத்தப் படுகிறார்கள்.

ஆண்கள் நிலை சற்று மேம்பட்டதாயிருந்தாலும் பெண்

ணின் நிலையைவிட விசேச வித்தியாசம் கிடையாது. ஆண் பிள்ளைக்கு கலியாணம் நிச்சயம் செய்யப்படும் சமயத்தில் கலாசாலைப் படிப்பு முடிந்திருக்கும். உத்தியோகம் தேடும் தருவாயிலிருப்பான். அல்லது கலாசாலையில் பிரவேசிக்கும் தருணத்திலிருப்பான். அந்த நிலையில் கலியாணத்தினால் ஏற்படக்கூடிய ஆத்மார்த்திக மாறுதலைப்பற்றி அவன் சிந்திப்பதில்லை. மாணவனாயிருந்தால் மேல் படிப்புக்கும், பட்டதாரியாயிருந்தால் உத்தியோகம் பெருவதற்கும் பெண்ணின் பெற்றோர்கள் உதவி புரிவார்களா என்பதையே கவலையுடன் சிந்திக்கிறான் மணமகன். இந்த வகையில் யார் உதவி புரிகின்றனரோ அவர்கள் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாகக் கொள்கிறான். தான் எதிர்பார்த்த அளவு உதவி கிடைக்காவிடில் பெண்ணின் மீது அருவெறுப்பு கொள்கிறான்.

மனிதப் பிறவி எடுத்ததற்கு சமூகத்திற்கு ஏதாவது சேவை செய்ய வேண்டும் என்ற ஆற்றலுள்ள ஆண் பெண்கள் கலியாணம் செய்து கொண்டால் தாம்பத்ய வாழ்க்கை வெற்றிகரமாகத் திகழும்.

இந்தியா மந்திரி பெதிக்லாரன்ஸ் அவர் மனைவியைச் சந்தித்த சமயம் அந்த அம்மணி சமூக சேவையில் ஈடுபட்டிருந்தாராம். சந்தித்து சில காலம் பழகிய பிறகு ஸ்ரீ லாரென்ஸ் விவாகத்தைப்பற்றி பிரஸ்தாபித்தார். அவருடைய மனைவியாகப் போகிறவர் இந்த மண வாழ்க்கையில் தங்கள் லட்சியங்கள் பூர்த்தியடையுமா என்று யோசித்துப் பார்த்தாராம். இல்லற வாழ்க்கை, தம்பதிகளின் தனிப்பட்ட லட்சியங்கள் பூர்த்தியாவதற்குத் தடையாயிருக்கலாகாது என்று இருவரும் முடிவு செய்தனராம். அன்றிலிருந்து இன்றுவரை முரண்பாடின்றி இருவரும் கணவன் மனைவியாகவும் உற்ற தோழர்களாகவும் வாழ்ந்து வருகிறார்களாம். இம்மாதிரி லட்சிய தம்பதிகள் நம் நாட்டில் தோன்றவேண்டுமானால் விவாகம் நிதானமாகச் செய்யப்பட வேண்டும். அதில் பொருளாதார சிக்கல்கள் குறுக்கிடலாகாது. தம்பதிகள் பரஸ்பரம் அறிந்துகொண்டு அதன் பின்னர் ஒன்றுபட வேண்டும்.

"தன் தனிமையைப் போக்கிக் கொள்ளவே ஆண் மகன் இல்லறத்தை நாடுகிறான்.

"இல்லறத்தில் என்ன இருக்கிறது என்று அறிந்துகொள்ளும் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள பெண் மணி வாழ்க்கையை விரும்புகிறாள்.

"ஆனால் இருவரும் ஏமாற்றமடைகின்றனர்" என்று கூறுகிறார் ஆஸ்கார் ஒயில்ட் எனும் ஆங்கில ஆசிரியர். இதைவிட்டு ஆழ்ந்த லட்சியங்களுக்காக ஆண் பெண் கூடினால் லாரன்ஸ் தம்பதிகள் மாதிரி நம் நாட்டிலும் தம்பதிகள் தூய இன்பம் காணலாம்.

மூக்கு

'சுகி'

முகத்திற்கு முன்னுரையாக இருப்பது மூக்கு; ஆனால் அதைத்தான் யாரும் கவனிப்பதில்லை. 'மணப் பெண் மூக்கும் முழியுமாக இருந்தால் போதும்' என்கிறார்கள். புல்லாக்கு, பேஸரி, மூக்குகுத்தி இவைகூட மூக்கை மறந்து விட்டன. எப்படியிருக்கிறது முன்னேற்றம்? இன்னும் கொஞ்சநாள் போனால், மூக்கே வேண்டாம் என்பார்கள் இந்தப் பெண்கள்.

ஆண்களோ, மூக்கு என்றால் இது ஜலதோஷம், இருதயவியாதி, சுவாஸக் கோளாறு இவற்றின் முகத் துவாரம் என்று கண்டனம் செய்வதோடு சரி. நமது மூக்கையும் சளியையும் வைத்து வயிறு வளர்க்கும் பிரகிருதிகள் பலர் இருக்கிறார்கள்; இந்த டாக்டர்கள் மூக்குக்குச் செய்துள்ள, பெருமை என்ன? வலியே இல்லாமல் வேண்டுமானால் அறுத்து கையில் தருவார்கள். நான் எதிர்பார்க்கிறது, மூக்கு முகத்திலும் இருக்க வேண்டும். அதை இடம் மாற்றாமல், வேண்டும் சௌகரியங்களும் செய்துதர வேண்டும் என்கிறேன்.

யார் கவனித்தார்கள்?

பத்திரிகையும் சினிமாவும் கண்ணைப் பிடுங்கிக் கொண்டன; ரேடியோ நிலையத்தார் காதைத் திருகிக் கொண்டார்கள்; ஹோட்டல்களும் மிட்டாய்க் கடைகளும் நாக்கை அறுத்துக் கொண்டன; துணிமணிக் கடைக்காரர்கள் மெய்யைப் பிடுங்கிக் கொண்டார்கள். பஞ்ச பூதங்களில் மூக்கு மட்டும் செய்த பாவம், என்ன ஐயா?

கண்ணிற்கும் காதிற்கும் காட்சியென்றும், கவிதையென்றும் எவ்வளவோ எழுதிக் குவிக்கும் கவிஞர்கள் மூக்கிற்கு என்ன தொண்டு செய்தனர்? 'எள்ளுப் பூ' என்ற உவமையைக் கவிகள் சொல்லப் போக 'எட் பூ' தான் சரியென்றனர் இலக்கணப் புலவர்கள். எள்ளுப் பூவிற்கு அப்பால் கவிகள் மூக்கைத் 'தொடும்படியாக' ஒன்றும் சொல்லவில்லை.

ஓகோ! கம்பன் ஒருவன்தான் மூக்கைக் கையாண்டிருக்கிறான். சூர்ப்பணகா தேவி, பேரழகி. அதாவது மூக்கு ஒன்றுதான் அவள் அழகியென்று சொல்லிற்றும். அந்த மூக்கை யறுத்து விட்டதால், "என்னை மூக்கு அறுக்கவில்லை.: உங்கள் குலத்தையே வேர் அறுத்து விட்டீர்கள்?" என்ற அந்தக் கவி:

ஆக்கரிய மூக்கு உங்கை
அரியுண்டார் என்றுரை
நாக்கரியும் தயமுகனார்
நாகரிகர் அல்லாமை
மூக்கரிந்து நுங்குலத்தை
முதல் அறிந்தீர் இனி உமக்குப்
போக்கரி (து) இவ்வழகையெல்
லாம்
புல்லிடையே உகுத்தீரே."

'இலக்கிய மூக்குகள்' என்று சொல்ல கம்பனுக்குப் பின்னல் எந்தக் கவியாவது மூக்கு சம்பந்தமாக [சிந்தனை செய்திருக்கிறுஞ? சூர்பணகையின் மூக்கை அறுத்தல் மானிட குலத்தின் சிந்தனைக்கே வேரறுத்த கதையாக இருக்கிறது. மனிதன் மறந்து விட்டாலும் கிளியும், கருடனும் தத்தம் மூக்கைத் தானம் செய்தன. தஞ்சாவூர் குடை மிளகாய், பிள்ளையார் கொழுக்கட்டை, இவை போதாக் குறைக்கு உதவி செய்கின்றன.

பொருள்களை விண்டு விண்டு காட்டி, கவியின் சுகத்தைத் தொலைக்கும் இந்த விஞ்ஞானிகள் எவ்வளவோ அற்புதங்கள் நாற் புலனுக்கும் உதவி வருகிறுர்கள்.

மூக்கிற்கு எந்த விஞ்ஞானி பாடுபட்டான்? வாசனைகளைக் கொண்டே, ஒரு பத்திரிகை, ஒரு நாடகம் நடத்தினல் எவ்வளவு நலமாக இருக்கும்! 'ஸ்மெல்லி' என்ற வாசனைச் சினிமா வந்து விட்டால், இந்தக் குறை தீர்ந்து விடும். வாசனைத் திரவியங்கள் நாம் காசு கொடுத்து தனித் தனியே வாங்க வேண்டாம். இதற்காக, ரேடியோ நிலையம் சங்கீதம் தருகிறமாதிரி, கொட்டகைகள் காட்சிகள் காட்டுகிற மாதிரி, வாசனை விற்பனைகள் சுலபமாக நமக்குக் கிட்டலாம்.

நான் மூக்கிற்காக எதுவும் செலவு செய்கிறது கிடையாது. எனக்காக எத்தனையோ சங்கீத வித்வான்கள் குஷால் பேர்வழிகள், மைனர்கள் அத்தர், புனுகு, ஜவ்வாது என்று வகை வகையாகப் பேர்ட்டுக்கொண்டு வருகிறுர்கள். நான் தம்படி செலவு செய்கிறேனு? இல்லை. அப்படிச் செலவழிக்க வேண்டுமென்பது என் கட்சி. காசைக் கொடுத்து கண்ணையும், பணத்தைக் கொடுத்து நாக்கையும் திருப்திப் படுத்துவது போன்று, வாசனைகளை நாம் வாங்க வேண்டும்; ஆங்காங்கே வாசனைச் சாலைகள்! சுகந்த மன்றங்கள் ஓங்க வேண்டும். மண நிலையங்கள் மணக்க வேண்டும்.

அன்ருடம் சுகந்த அயிட்டங்கள் விளம்பரம் செய்யப்படுவதை நான் என்று காணப் போகிறேன்? விசேஷ தினங்களில், விசேஷ வாசனுதிகள் நுகர அனுமதி அளிக்க வேண்டும். நடுத்தெருவில் மூக்கைத் தீய்க்கும் வாசனையைத் தடவிப் போகிற பழக்கம் ஒழிந்து, பிரியப்பட்டவர்கள், தனிப்படவோ, கூட்டம் கூட்டமாகவோ இருந்து அனுபவிக்க இடங்கள் வரவேண்டும்.

சாப்பாடு ஹோட்டல் போல, வாசனை ஹோட்டல்கள் வர வேண்டும் என்கிறேன்.

காப்பிப் பொடி தயார் செய்கிறவர்கள், அதன் வாசனையை நுகர வரும் ரஸிகர்களுக்கு ஆசனமிட்டு மூக்கைத் திருப்தி செய்யலாம். பிரபல ஹோட்டல்களில சாப்பாட்டைத் தவிர, உளுத்தம் பருப்பு வறுக்கிறபோது உண்டாகிற மணம், தாளிக்கும் போது எழுகின்ற மணம் இவை யெல்லாம் நுகருவதற்கு தனிப்பட பில் வசூலிக்கலாம்.

இன்னல் கூட்டி, இன்ப மூட்டி இந்திர ஜால வித்தை காட்டும் நாசிகா சூரணம் இந்த விதிக்குள் சேராது. இலக்கியத்தில் துன்ப இயல், இன்ப இயல் என்ற இரு பகுதிகளையும் ஒன்பது ரஸமாகவும் நாவின் உணவை அறுசுவை யென்று வகுத்த முன்னேர் மூக்கை எப்படிப் பிரித்தார்கள்?

மூக்கை எட்டிப் பிடிக்காமல் இருந்து விட்டார்கள். ஒருவேளை திக்கு முக்காடிப் போகலாம் என்ற எண்ணத்தினால் அவர்கள் வாசனைக்குப் பண்புப் பெயர்கள் அமைக்கவில்லை. நிறங்களுக்கும் ஒலிகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் கொடுத்த இலக்கணப் புலிகள் மூக்கு சம்பந்தமாக 'மல்லிகை மணம்' 'நெய் வாசனை' 'தாரெண்ணெய் நாற்றம்' என்று அந்தந்தப் பெயரோடுதான் வாசனையையும் சேர்த்திருக்கிறார்கள். சிவப்பு, கருப்பு என நிறத்தை யொட்டிய பண்புப் பெயர்கள், சுருதி, ஹுங்காரம், இடிமேளம் என்ற ஒலி பற்றிய பண்புப் பெயர்களும் இருப்பது போல மணத்திற்கு இல்லை.

மணம் எண்ணுக்கு அடங்காது; எண்ணவும் முடியாது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப் பண்பு வாய்ந்தவை; ஒன்றைப் போல் ஒன்று இல்லை. இந்தக் காரணங்களால் வாசனை சம்பந்தமான பண்புப் பெயர்கள் வரவில்லை போலும்.

கிராமங்களிலும் காடுகளிலும் போனால் விதவிதமான மணம் நமக்குத் தெரியும். பட்டணத்தில் துர்நாற்றம் அதிகம்; சுகந்தம் குறைவு. களத்து வயலில் அறுவடையானதும் ஒரு மணம் அடிக்குமே, கருவேல், உடை முதலான மரங்கள் பூத்துக் கம்மென்று நம்மை விண்ணுக்குத் தூக்குமே. அந்த மணங்கள்! அடடா, இந்த இலுப்பை, செம்பரத்தை. கேவலம் பவள மல்லி, பால் பிடிக்கும் பருவத்திலுள்ள, சோளம், ராகி, நெல் இவற்றின் மணம் சொல்லுக்கு அடங்குமா? கிராமம் என்றாலே, வாசனையால் ஆன அற்புத பூமி; நறுமணம் வாய்ந்த சதுரங்க பூமி.

நகர்ப்புறத்தில், காப்பிக் கொட்டை வறுக்கும் வாசம், பூக்கடை, இத்தோடு நறுமணத்திற்கு முற்றுப்புள்ளி. ஆனால் ஆதியில் மனிதன் காட்டில் வாழ்ந்த காலத்தில் வாசனையை வைத்தே வயிற்றைக் கழுவ வேண்டியதாய் இருந்தது. இது ஆகாரம், இவன் விரோதி, என்று மோப்ப சக்தி மூலம் அறிந்த அதே மனித குலம், அதை வரவர இழந்து இன்றைக்குக் காண்டா மிருகத்திற்கும், வெள்ளைக்காரனுக்குப் வித்தியாசம் சொல்லமுடியாத நிலையில் வந்து விட்டது. மூக்கை அறவே மறந்து மற்றப் புலன்களால் வாழ ஆரம்பித்ததின் பயன் இது. கரிபல்ஸுக்கும், கத்தரிக்காய்க்கும் மோப்பத்தின் மூலம் என்றால் வித்தியாசம் கண்டு கொள்ள முடியாது. அறிவு வளர வளர மூக்கு மழுங்கி விட்டது.

மோப்ப சக்தியால் வாழ்ந்தே தீர வேண்டும் என்ற நியதி நிலவினால், சி. ஐ. டி. இலாகா அரோகரா! எந்த வேகத்தில் வந்தாலும் கண்டு கொள்ளலாமே!

ஆனால் மூக்கை மட்டும் வாழ்க்கையின் ஆதர்சமாகக் கொண்டு வாழும் ஜென்மங்கள் பல. நாய்க்குள்ள சிறப்பெல்லாம் மூக்கினால் வந்தது. நாம் மூக்கை மறந்தாலும் நாய் மறக்காது. நம்முடைய மூக்கினால் கண்டு கொள்ளவே முடியாத நுண்ணிய வாசனைகளை மிருகங்கள் சுலபத்தில் உணருகின்றன. நாய் இதற்குச் சான்று. கண் பார்வையைவிட, வாசனைதான் அதன் ஜீவ நாடி. நாயைப் போலவே இன்னும் சில பிராணிகளுக்கு கண் இரண்டாம் பட்சம். ஆனால் பட்சிகளுக்கோ கண்தான் குறி. பருந்துக்குக்

கண்ணும், நாய்க்கு மூக்கும் வாழ்க்கைப் பலகணிகள்!

மூக்கே வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. பிராணிகளுக்கும் பூச்சி பொட்டுகளுக்கும், இரை எங்கிருக்கிறது என்பதைச் சொல்லும் மூக்கு, எதிரி எங்கே பதுங்கி யிருக்கிறான் என்றும் சொல்லி விடுகிறது! "ஆட்டுக்குட்டி உனது இரை" என்று புலியின் மூக்குச் சொன்னால், "புலி உனது எதிரி" என்று ஆட்டுக் குட்டியின் மூக்குச் சொல்லி விடும்! தன் எதிரி பதுங்கியிருக்குமிடமும், தன் இரை இருக்கும் இடமும் சொல்லுகிற மூக்கு, ஜீவ ஜந்துக்களுக்கு இருக்கிற மாதிரி மனித குலத்துக்கு இருந்தால்!

நமது விரோதிகளை நம்பி வாழ்க்கை நடத்தாமல், சுகமாக வாழலாம். ஹோட்டல்களில் ஆகாரதிகளைப் பதுக்கு வைத்துக் கொண்டு பொய் சொல்ல முடியாது. கடவுள் அழகுக்காகக் கொடுத்தவர், கொஞ்ச மோப்ப சக்தியையும் அதிகமாகக் கொடுக்கக் கூடாதா? பிராணி வர்க்கந்தான், இதில் யோகம் செய்தவை.

காட்டில் கூட்டம் கூட்டமாக வாழும் யானைகளும் மான்களும் வாசனை ஒன்றினால் மட்டுமே கூடி வாழ முடிகிறதாம். மேய்ந்து செல்வது புல்லோ, தழையோ இதில் வாசனை ஒட்டிக்கொள்ளும். அதைக் கொண்டுதான் தன் இனத்தோடு போய்ச் சேரவும் தெறி கெட்டு அலைய முடியாமலும் இருக்கின்றன. தெறிகெட்டு அப்படித் தவறிவிட்டால், தன் இனத்தின் கால் குளம்புத் தடத்திலும், தழை செடி கொடிகளிலும் இருக்கும் வாசனையை அறிகின்றன. அப்படி அறிவதால், வாசனை அவைகளுக்குள் ஒரு பேச்சாகவும் இருக்கிறது!

ஒருவேளை மனிதன் நெல்லிக்காய் மூட்டையாக வாழ நினைப்பதின் தத்துவம் இந்த மோப்ப சக்தியை இழந்ததாக இருக்கலாமோ?

நாற்கால் பிராணிகள் மட்டும், மூக்கின் உதவியால் வாழ்பவையன்று. நெளியும் புழுக்களின் உலகமும் ஒரே வாசனைப் பிரபந்தம்தான். மூக்கு, கண் இவை இல்லாத புழுக்கள், தன் இனத்தின் வாசனையை உடம்பில் உணர்ந்து காதல் விவகாரம் தொடங்குகிறது. கதாசிரியர்கள் மல்லிகைப் பூவையும், தாழம் பூவையும் மன்மதன் அம்புகளாக கையாளுவார்கள். ஒரு புழுவின் மணம், மற்றொரு புழுவிற்கு மன்மதன் இணை. வாசனைதான் அங்கு குல தர்மத்திற்கும் விருத்திக்கும் கை கொடுக்கும், கடவுள்.

மலரையும் மணத்தையும் நம்பி வாழும் தேனீக்கள் முதன் முதலாக நிறத்திற்கு அடிமையாகிறதா? இல்லை வாசனைக்கு அடிமையாகிறதா? தேனீக்களின் கண், திருஷ்டி தீர்க்கம் வாய்ந்தவை; நிறத்தைக் கண்டு முதலில் மயங்கி, பின்புதான் வாசனைக்கு இறங்குகிறது என்று பிராணி நூல் வல்லார் சொல்லுகிறார்கள்.

மூக்கின் தயவினால் வாழ்பவைகள் பூச்சிகள், பிறக்கும் பூச்சிகளுக்கு உலகமே வாசனையால் நிறைந்த களஞ்சியம் என்று தோன்றும். உலகமே வாசனை ஒன்றினால் மட்டுமே பாகுபாடு, (ஒரு ரூபாய் நோட்டுக்கும் 100 ரூபாய் நோட்டிற்கும் வித்யாசம்) காண்பது என்று வந்து விட்டால்

அதைவிட ரஸமான விஷயம் வேறு என்ன? பூச்சிகளோடும், நாயோடும் வாசனை பிடிப்பதில் மனிதனை ஒப்பிட்டால், மனிதன் "பூ, எம்மாத்திரம்?" என்று தான் சொல்ல வேண்டும். வான மறிந்த தனைத்தும் அளந்திட்ட மனிதன் வாசனையின் நுண்ணிய பேதங்களை அறிய வகையில்லையே!

இயற்கை வாசனையை, வண்டு கள் தேனீக்கள் அனுபவிக்கின் றன. நாம் அந்த அளவில் இல்லை. நமக்குச் செயற்கை வாசனையில் மோகம். ரோஜா, மல்லிகை முதலான செண்டுகள் அடிக்கிற அடி, அடேயப்பா மூக்கைத் துளைக்கும். துவாரம் கூட போட்டு விடலாம். செண்டு தடவிய நம் மீது வண்டுகள், தேனீக்கள், தட்டாரப் பூச்சிகள் பறந்து உட்கார வரக் காணோம். அவை போலி மணம் ஆகவே வர மாட்டா. இதனால்தான் கவி யுள்ளம் படைத்தவர்கள் இயற் கையை விரும்பி, யந்திர பூதத்தின் சிருஷ்டிகளில் மனம் லயிக்காமல் இருக்கிறார்கள் போலும்!

ஆதியில் மனிதன் இயற்கையின் சுகந்தத்தில் மூக்கைப் பறி கொடுத்தவன் இன்று செயற்கை வாசனையில் விருப்பம் கொண்டு விட்டான். இது எப்படி இருக் கிறது என்றால், இனிமையல்லாத வாத்திய இசை, பொருள் விளங் காத பாட்டு, புத்திசாலித்தனமில் லாத அழகு ரேகை, இவைகளை அனுபவிக்கிற கணக்குத்தான். இந்தக் காலத்தில் வாசனை யென் றால் "அது எத்தனை வெளுப்புக்குத் தாங்கும்?" என்று கேட்கிறார் கள்.

வாசனை காலத்தை வெல்வதில் மார்க்கண்டேயனைப் போல போட்டியிடாமல் கணப் பொழு தில் துருவனைப் போல நம் இதய வானத்தைக் கொள்ள வேண்டும். இன்ப நினைவுகளைப் போல் வாசனைகள் மூக்கின் நுனி யில் வட்டமிட வேண்டும். காத தூரம் குரல் கொடுக்கக் கூடிய வர்களே சங்கீதம் பாட வேண் டும் என்று வந்து விட்டால் அது வீணையின் நாதமாக இருக்குமா? கழுதையின் கத்தலாகத்தான் இருக்கும். இயற்கை வாசனைக் கும், செயற்கை வாசனைக்கும் இந்த வேற்றுமை ஒரு உதாரணம்.

வருங்கால உலகத்தில் எத்த னையோ புனருத்தாரண திட்டங் கள் வகுத்த அறிவாளிகள்கூட, மூக்கை மறந்து விட்டார்களே. நினைவு கொண்டு யந்திர சாதன மூலம் வழி வகுத்து இயற்கை வாசனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நான் பெரிதும் அனு பவிப்பேன்.

மூக்கறிஞர்கள், மூக்கு நிபுணர் கள் கூடப்போகும் அந்த உலக மகா நாட்டில், என்னென்ன அற்புத விந்தைகள் நிகழப் போ கின்றதோ! அப்படி வரப் போகிற அந்தக் காலத்தை மோப் பம் பிடித்துச் சொல்லக் கூடிய நபர், லாப்லந்துக் காரனாகத்தான் இருக்க முடியும்.

நாம் ஒருவரை வணங்கும் போது கேவலம், கையெடுத்து நமஸ்காரம் செய்கிறோம். அவர் களோ மூக்கோடு மூக்குத் தேய்த் துக் கொள்கிறார்களே. இந்த மூக்கர்களே இந்த ஆராய்ச்சி செய்வார்கள் என்பது என் கனவு.

நனவாகும் நாள் எந்நாளோ?

தற்காப்புப் பயிற்சி

[சு. கிருஷ்ணராவ் எம். ஏ., பி. எல். — டி. எஸ். சங்கரன் பி. எஸ்ஸி]

சென்ற நூற்றுண்டைக் காட்டிலும் இந்த நூற்றுண்டில் நாகரிகம் வளர்ந்திருக்கிறது. நடை, உடை, பாவனை, உணவு, போக்கு வரவு பழக்க வழக்கங்கள் எல்லாவற்றிலும் மாறுதலும் நாகரிக மேம்பாடும் அடைந்திருப்பதை நாம் கவனிக்கலாம். மின்சாரம், மோட்டார், டிராம், பஸ், ரயில், ஆகாய விமானம் இவைகள் இல்லாத பல்லாண்டுகளுக்கு முன் நம் முன்னேர் தற்காப்புக்காக மிகக் கவலைப் படாமலிருந்தார்கள். காலில் செருப்பும், கையில் கழியும், குடையுமிருந்தால் மனிதன் எல்லா வகையான தற்காப்பும் பெற்றவனுக இருந்தான். அக் காலத்தில் மின்சாரத்தால் விபத்து இல்லை; மோட்டார், டிராம் விபத்து இல்லை; இருப்புப் பாதை ஆபத்து கிடையாது. காடுகளில் துஷ்ட மிருகங்களின் ஆபத்து, ஆற்று வெள்ளத்தால் ஆபத்து, திருடர்களின் பயம், நெருப்பினல் விபத்து இவைகளைத்தவிர வேறு பயம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனல் நாகரிகம் முற்ற முற்ற மனித வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுப் பலவிபத்துகள் ஏற்படக் காரணமாக இருக்கின்றன.

மனிதன் தள்ளாத கிழ வயது வரையில் வாழ்ந்து இயற்கையாக இறந்து போவது சாலச் சிறந்தது. இவ்விதமான இயற்கை மரணத்தைத் தவிர காலரா, பிளேக், வயிற்றுப் போக்கு, வைசூரி, காச நோய், குஷ்டம் இவை போன்ற தொத்து நோய்களால் பல பேர் இறக்கின்றனர். ஆனல் தக்க முன் ஜாக்கிரதையில் இந்த நோய்களை வராமல் தடுக்க முடியும்; ஒரு வேளை நோய் வாய்ப் பட்டால் அவைகளை நீக்கவும் வழியுண்டு. இவை சுகாதார, வைத்திய இலாகாக்கள் மனிதனுக்குச் செய்யும் பேருதவி.

மேலே சொல்லிய இருவகை மரணங்களைத்தவிர வீடுகளிலும், ரஸ்தாக்களிலும் தொழிற்சாலைகளிலும் எதிர்பாராத விதமாய்த் தம் அசாக்கிரதையினல் பல விபத்துகள் ஏற்பட்டு அதனல் அகால மரணங்கள் சம்பவிக்கக் கூடியனவா இருக்கின்றன. சுகாதார வைத்திய முறைகள் இங்குப்பயன் படாது. ஆகையால் இத்தகைய எதிர்பாராத விபத்துகள் எவ்விதம் ஏற்படுகின்றன, அவைகளை நம் அறிவால் எவ்வாறு தடுக்க இயலும் என்று தற்கால அறிஞர்களாலும், விஞ்ஞானிகளாலும் தீவிரமாக யோசிக்கப்பட்டு வருகின்றன.

விபத்துகளைத் தடுக்கவும், விபத்துகள் ஏற்பட்டால் அவைகள் நம்மைப் பாதிகாவண்ணம் நம்மைக் காத்துக் கொள்ளவும் பல வழிகள் உள. அவைகள் சிறுவர், எளியோர், ஏழைகள், பணக்காரர், ஆண்கள், பெண்கள், வயோதிகர், கண் இழந்தவர், காலிழந்தவர், காதிழந்தவர், இவர்

கள் எல்லாரும் அவ்வழிகளை உணர்ந்து நாகரிக வளர்ச்சியால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க முயற்சிக்க வேண்டும். பள்ளிப் பிள்ளைகளுக்கும் பொது ஜனங்களுக்கும் இவ்விஷயங்கள் சுளுவான முறையில் கற்பிக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம். இவ்வறிவால் விபத்துகள் குறைந்து, அவைகளால் ஏற்படும் மரணங்கள் குறைந்து நாடு நலம் பெற வழியுண்டு.

விபத்துகள் ஏற்படும் முறைகளையும், அவைகளைத்தடுக்கும் முறைகளையும் பற்றிப் பல அறிஞர்கள் பல உண்மைகளைக் கண்டுள்ளனர். பல ஆண்டுகளுக்கு முன் இவைகளைப் பற்றி நாம் நம் கவனத்தை அதிகமாகச் செலுத்தவில்லை. போர் காரணமாக ரஸ்தாக்களில் அதிக விபத்துகள் ஏற்படவே நாம் நம் அறிவைத் தீட்டி விபத்துகளைப்பற்றி ஆராயத் தொடங்கியிருக்கிறோம். ஒரு உண்மை முதலில் விளங்குகிறது. வீடுகளிலோ தொழிற்சாலைகளிலோ. ராஜபாட்டைகளிலோ அல்லது நீரிலோ ஏற்படும் எல்லா விபத்துகளும் மனிதனுடைய சிற்றறிவினலும் கவனக்குறைவினலும்தான் ஏற்படுகின்றன. எப்பேர்க்கொத்த இயந்திரங்களும், கருவிகளும் சாதனங்களாக ஏற்பட்டாலும், மனிதனுடைய அறிவாலும் கவனத்தாலும்தான்வருமுன் காப்பாகிய தற்காப்பு ஏற்பட வேண்டும் என்று உண்மையில் விளங்குகிறது.

மேலே கூறியபடித் தற்காப்பு என்பது மனித அறிவையும், கவனத்தையும் பொறுத்தது என்றும், உண்மையான தற்காப்பு ஏற்பட அறிவையும், கவனத்தையும் வளர்த்தல் அவசியம் என்றும் ஏற்படுகிறது. இது இயந்திர யுகம். நம் வாழ்க்கையில் இயந்திரங்கள் பல மாறுதல்களை உண்டாக்கியிருக்கின்றன. போக்கு வரவு சாதனங்களிலாகட்டும், சாதனப் பொருள்களை அபரிமிதமாக உண்டாக்குவதிலாகட்டும் இயந்திரங்களின் செயல் மிக மிக விந்தையையளிக்கக் கூடியதாக ஆகிறது. எனவே நூதன இயந்திர நாகரிகத்தை அனுசரித்து, நாம் நம் வாழ்க்கை முறைகளைத் திருத்தியமைத்துக் கொள்ளாவிட்டால் இயந்திரங்களால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மிகுந்து அவைகளால் நாம் துன்புற நேரிடும். இவ்விபத்துகளால் உயிர்ச்சேதம், பொருட்சேதம், மருந்துச் சேதம், உடல் வலி குன்றல், காலஹரணம் முதலியன ஏற்படுகின்றன. ஆகையால் இத்தகைய சேதங்களைத் தவிர்க்க நாகரிக மாற்றத்தையொட்டி நம் வாழ்வு முறைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம். தற்காப்பு கொள்ள வேண்டியது அவசியம். தற்காப்பு அறிவு, வாழ்வு முறை மாற்றத்தில் அவசியமான ஒரு அம்சம். தற்காப்பு அறிவால், விபத்துகள் ஏற்படும் சூட்சமங்களையும், அவைகளைத் தவிர்க்கும் வழிகளையும், சமயோசித உதவிகளையும் நாம் அடையக்கூடியவர்களாக ஆவோம். "தற்காப்புத் திட்டத்தில் 10 ல் 1 பாகத்தையேனும் நம் வாழ்வில் நாம் கைக்கொண்டால், நம் தேசம் மனோவலிமை பெருகி, வியாபாரம், தொழில், அறிவு இவைகள் இதுகாறு மில்லாத ஒரு செழுமையைப் பெற்று நாட்டின் எழில் பெருகும்" என்று அறிஞர் வற்புறுத்துகின்றனர்.

அமெரிக்க ஐக்ய நாடுகள் விஞ்ஞான அறிவிலும், பொருளீட்டத்

திலும், மற்றும் எல்லாத் துறைகளிலும் மேம்பட்ட நாடு. அவை தற்காப்பு முறைகளைத் தம் வாழ்க்கையில் கைக் கொண்டதால் சென்ற 30 ஆண்டுகளில் 3 லக்ஷம் உயிர்கள் சேதமின்றி விபத்துகளிலிருந்து தப்பிப் பிழைக்க முடிந்தது என்று "அமெரிக்கத் தற்காப்புச் சங்கம் பெருமை கொள்கிறது. தற்காப்பு அறிவின்றேல் அவ்வுயிர்கள் சேதப்பட்டேயிருக்கும் என்பது திண்ணம்.

நம் நாட்டில் விபத்துகள் எவ்வாறு ஏற்படுகின்றன? சராசரி ஒரு வருடத்தில் விபத்துகளால் எவ்வளவு உயிர்கள் சேதமடைகின்றன? நகரங்களில் எவ்வளவு விபத்துகள்? கிராமங்களில் எவ்வளவு? என்ற விவரங்களைப் பொறுத்துத்தக்க புள்ளிகள் கிடையாது. இத்துறையில் தற்காப்புத் திட்டத்தைப்பற்றிச் சரியான முயற்சிகூடக் கிடையாது. முக்கியமாய் விபத்துகள் ஏற்பட்டால் எவ்வாறு அவை ஏற்பட்டன என்று நாம் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துகிறதில்லை. தெரியப்படுத்தினலும் அதிகாரிகள் அவைகளைப் பற்றிக்கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆனல் தொழிற்சாலைகளில் மட்டும் சில வருடங்களாகச் சரியான புள்ளி விவரங்கள் சேகரித்து வருவதாகத் தெரிகிறது. அவைகளிலும் 1934 ம் ஆண்டில் 20,787 விபத்துகளும், 1942 ல் 54,174 விபத்துகளும் ஏற்பட்டன என்றும். ஆண்டுக்கு ஆண்டு விபத்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறதென்றும் தெரியவருகிறது.

சராசரி ஒரு ஆண்டில் லட்சத்திற்கு 23-ம் ஸ்விட்ஜர்லாந்தில் 13-ம் இந்தியாவில் 97-ம், மோட்டார் வண்டியில் விபத்து அல்லது மரணம் என்று கண்டு பிடிக்கப்படுகிறது. எனின், நம் நாட்டில் தான் மோட்டார் விபத்தால் அதிக மரணம் எனத் தெரிகிறது.

நாளடைவில் நம் நாட்டில் தொழில் விருத்தியும் அதை அநுசரித்துத் தொழிற்சாலைகளும், போக்கு வரத்து செளகரியங்களும், மின்சார வசதிகளும் அதிகமாக ஏற்படப் போகின்றன. ஆகையால் ரஸ்தாக்களிலும், தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் விபத்துகள் குறைய நாம் தற்காப்பு அறிவைப்பெற வேண்டியது மிக அவசியம்.

பொதுவாய் விபத்துகள் எவ்வாறு எச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்டன; அவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்திருக்க முடியும்; எவ்வாறு தற்காப்புச் செய்து கொண்டால் அந்த விபத்துகள் குறைந்திருக்கும் என்று அறிய வேண்டியது அவசியம். விபத்துகளின் காரணம் அறியப்பட்டால் அவைகளை நிவர்த்திக்கும் வழியும் காணப்படும். மகாநாடுகளில் இவ்விஷயங்களில்அறிவாளிகளால் கவனம் செலுத்தப்பட்டுப்பல சூச்சுமங்களை அவர்கள் விளக்கிக் காட்டியிருக்கின்றனர். இவ்வறிவில் அமெரிக்கர் மிகச் சிறந்தவர்கள். அவர்கள் அறிந்த விஷயங்களைக் கொண்டு நாமும் நற்பயனை அடைவது நம் கடமையாகும்.

அகில இந்தியத் தற்காப்புச் சங்கம் சுமார் 14 ஆண்டுகளுக்கு முன் துவக்கப் பட்டது. அதன் கிளைகள் பல மாகாணங்களில் நிறுவப்பட்டன. அச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களாவன:—

1. ஒவ்வொரு விபத்தின் காரணத்தையும் நன்கு ஆராய்தல்.
2. வீடுகள், தொழிற்சாலைகள், ராஜபாட்டைகள், நீர், பள்

விக்கூடங்கள் இவைகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க உபாயங்களைத் தேடுதல்.

3. மானிடச் செயல்கள் ஒவ்வொன்றையும் தற்காப்பை முன்னிட்டு எவ்வாறு மாற்றியமைத்துச் சீர் செய்தல்.

4. தற்காப்பு முறைகளைப் பொது ஜனங்களுக்குச் சுளுவான முறையில் அறிவுறுத்தல்.

5. பொது ஜனங்களைத் தற்காப்பு முறையில் ஒழுகும்படிக் கட்டுப்பாடு செய்தல்.

6. விபத்துகளிலிருந்து தப்புவிப்பவர்களுக்குப் பரிசளித்தல்.

7. மேலே கூறிய ஆறு திட்டங்களைப் பற்றி எல்லா நடவடிக்கைகளையும் செயல் முறையில் கொணர்தல்.

இப்பயிற்சி பள்ளிப்பிள்ளைகளுக்கு முதன் முதலில் கற்பிக்கப்பட வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளிலும், உயர்தரப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் போதனை முறையில் ஒரு முக்கிய அம்சமாக இவ்வறிவு புகட்டப்பட வேண்டும். இவைகளைப் பற்றிப் பள்ளி மாணவர்கள் விதிகளை நடத்திக் காட்ட வேண்டும். சுகாதார வாரக் கொண்டாட்டம் போன்று தற்காப்புப் பயிற்சி வாரத்தையும் ஒவ்வொரு பள்ளியிலும் கொண்டாட வேண்டும். துண்டுப் பிரசுரங்கள், சுவர் நோட்டீசுகள், பெரும்படங்கள், சினிமாப்படங்கள், ரேடியோப் பேச்சுகள், இவைகள் மூலமாய்ப் பொது ஜனங்களுக்குத் தற்காப்பு அறிவைப் புகட்டி அவ்விழாவைக் கொண்டாடுவது நலம். அதிகார வர்க்கத்தினரும், முக்கியமாகப் போலீஸ் இலாகாவும், மோட்டார் கம்பெனிகளும், தொழில் முதலாளிகளும், மின்சார மாராமத்து இலாகாக்களும், இவ்விழாவிற்கு ஒத்துழைப்பது சிறந்தது.

விபத்துகளைக் குறைக்கும் விஷயத்தில் அரசாங்க ஒத்துழைப்பு மிக மிக அவசியம். முக்கியமாக ராஜபாட்டையை எடுத்துக் கொண்டால், ரஸ்தாக்களை, அதில் போகக்கூடிய போக்கு வரத்துகளுக்குத் தக்கபடி யமைத்தல் அவசியம்.

(a) ரஸ்தாக்களை விசாலப்படுத்துவது (b) அவைகளின் பரப்பை மேடு பள்ளங்களின்றி சிமெண்டு அல்லது தாரினுல் சமப்படுத்துவது (c) ரஸ்தாக்களின் இரு கங்குகளிலும், பாதசாரிகள் செல்ல மேடைகளை அமைப்பது, (d) கூடிய மட்டிலும் வளைவின்றி ரஸ்தாக்களை ஏற்படுத்துவது, (e) ரஸ்தாக்களில் செல்லும் மோட்டார் முதலிய வண்டிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்துவது, (இது போலீஸ் இலாகாவின் கடமை) (f) ரஸ்தாக்களில் இரவு காலங்களில் வெளிச்ச வசதிகளை உண்டாக்குவது, (g) வண்டி வாஹனங்களுக்கும் தக்க வெளிச்ச வசதி கோரித் திட்டம் செய்தல் (இது போலீஸ் இலாகா கடமை) (h) ரஸ்தாக்களின் சந்திப்புகளில் தக்கபடிப் போக்குவரத்துகளை அடக்கிச் செலுத்துதல், (i) ரஸ்தாக்களின் நாலு முனைகளையும் தட்டையாக விட்டு வைக்காமல் வளைந்திருக்கும்படி யடைத்தல், (j) பாதசாரிகள் ஒருபுறமிருந்து மறுபுறம் செல்ல வசதிகளையமைத்தல், (k) நாற்சதுக்க முச்சந்திகளில் நடுவில் மேடைகளை யடைத்தல், (l) பாதசாரிகளை நடப்புவிக்க அழகான நடைமேடைகளை யமைத்தல், (m) பாதைகளில்குறுக்காகக்கட்டிடங்

197241

கள் விட்டு வைத்தல், இன்னும் மற்றத் தடங்கல்கள், மரங்கள் இவைகளை அப்புறப் படுத்தல். (n) கால் நடைகள் ரஸ்தாக்களில் சுயேச்சையாகத் திரிவதைத் தடுத்தல், (o) நடை பாதையில் ஜனங்கள் கூட்டங்கூடாமல் சில்லரைக் கடைகள் வைக்காமலும், ஏழை எளியவர்கள் படுத்துத் தூங்காமலும் தடுத்தல், (p) பொது மோட்டார்கள் டிராம்கள் இவைகளில் ஏறும்பொழுது ஜனங்கள் ஒருவர் பின் ஒருவர் நின்று செல்லும் பழக்கத்தை வற்புறுத்துதல், (q) ரஸ்தாக்களில் ஆங்காங்கு ஜனங்களைப் பெரிய விளம்பரங்கள் வாயிலாகவும், கண்ணைக் கவரக்கூடிய படங்கள் வாயிலாகவும் எச்சரிக்கை செய்தல், (r) மோட்டார் வண்டிகளின் வேகம், நாற்சதுக்கம், முச்சந்தி, பள்ளிக்கூடம், ரயில் பாதைச் சந்திப்பு, ரஸ்தா திரும்புதல் முதலியவைகளைக் காட்டக்கூடிய விளம்பரங்களை அமைத்தல், (s) போக்கு வரத்துகளில் இடசாரி வலசாரி போவதை வற்புறுத்துதல் (t) சாணி பொருக்குவது, இவைகள் அவசியம். இவற்றால் ரஸ்தாவில் ஏற்படும் விபத்துகள் அநேகம் குறைய வழியாகும். அரசாங்கத்திலுள்ள மராமத்து இலாகா, நகர பரிபாலன இலாகா மின்சார இலாகா, போலீஸ் இலாகா இவைகளின் ஒத்துழைப்பினால்தான் இத்தகைய தற்காப்பு வசதி ஏற்படக்கூடும்.

மற்றும் தற்காப்புச் சங்கங்கள் ஒவ்வொரு நகரிலும் ஏற்பட்டு, அதிகமான அங்கத்தினர்களைச் சேர்த்து தற்காப்பு அறிவை ஜனங்களிடத்தில் பரவச் செய்வது நம் கடமையாகும். இவ்வழிகளால் பல விபத்துகளைத் தடுக்கக்கூடும் விபத்துகளால் ஏற்படும் உயிர்ச் சேதங்களைக் குறைக்க முடியும்.

இங்கு நாம் பல விபத்துகள் ஏற்படக்கூடிய பல இடங்களைக் காட்டி எவ்வகையில் அவைகளைத் தடுக்க இயலும் என்று கவனிப்போம்.

ராஜபாட்டையில் அநுசரிக்க வேண்டிய தற்காப்பு விதிகள்:—

பெரிய நகரங்களில் மோட்டார் டிராம், லாரி முதலியவைகளின் போக்கு வரத்துகள் மிக அதிகம், கோவை, மதுரை, மதருஸ், முதலிய பெரிய பட்டணங்களில் பழகியவர்களுக்கு இது நன்கு விளங்கும். தற்சலனிகள் மனித வேகத்தைக் காட்டிலும் அதிக வேகத்துடன் செல்லக் கூடியவை, ஆகையால் அவைகளின் வேகங்களை அநுசரித்து நாம் செல்லப்பழக வேண்டும். முக்கியமாய்,

1. தற்காலங்களின் பொதுவான சட்டங்களை அறிந்து கொள்ள வேண்டும்.
2. பாதசாரிகளின் மேடைகள் இல்லாத பாதைகளில் பாதையின் வலது கங்கின் ஓரமாக எதிர்த்து வரும் வண்டிகளை நோக்கிச் செல்ல வேண்டும்.
3. பாதசாரிகளின் மேடைகள் உள்ள பாதைகளில் மேடைகளின்பேரில் முன் போலவே எதிர்த்து வரும் வண்டிகளை நோக்கிச் செல்ல வேண்டும்.
4. ஒருகால் வண்டிகள் போகும் திக்கில் பாதசாரிகள் போக வேண்டுமானால், மேடைகளின் வெளிப்புறக் கங்கின் ஓரமாகச் செல்ல வேண்டும்.
5. ஆழ்ந்த நிறங்கொண்ட ஆடைகளை அணிந்து ரஸ்தாக்களில் போவதுகூடாது. வெண்ணிற ஆடைகளை அணிந்து செல்வது சிறந்தது.

6. விளக்கேற்றப்படாத ரஸ்தாக்களிலே இரவுக் காலங்களில் கையில் விளக்குக் கொண்டு போவது உசிதமானது.

7. தூசி கிளம்பும் ரஸ்தாக்களில், ஒரு மோட்டார் வண்டி சென்றவுடன் தூசி கிளம்பும். தூசி அடங்கும் வரை ஓரத்தில் நின்று முன் பின் கவனித்துச் செல்லல் வேண்டும்.

8. நின்று கொண்டிருக்கும் மோட்டார் வண்டிக்குப் பின்புறம் நிற்கவோ உட்காருவதோ கூடாது. ஒரு கால் அவ்வண்டி பின்புறமாக நகரக்கூடும், அதனல் ஆபத்து ஏற்படலாம்.

9. போக்கு வரத்து அதிகமுள்ள ரஸ்தாவின் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் தாண்டிச் செல்வது அபாயமாக இருப்பினும், முக்கிய விதிகளை அனுசரிப்பதால் அபாயம் ஏற்படா வண்ணம் காத்துக் கொள்ளலாம்.

ரஸ்தாவைத் தாண்டு முன் நின்று, இரு பக்கங்களிலும் கவனிக்கவும். ஏதாவது வண்டிகள் வரும் ஓசை ஏற்பட்டால், அது எப்பக்கத்திலிருந்து வருகிறதென்று கவனிக்கவும். அபாயமில்லாமல் ரஸ்தாவின் குறுக்கே போக முடியும் என்று தெரிந்தால் வேகமாக எதிர்ப்புறம் சென்று சேரலாம். தயக்கம் வேண்டாம். ரஸ்தாவின் மத்தியில் யாது காரணத்திற்காகவும் மெதுவாக நடக்காதே. சில சந்தர்ப்பங்களில் நிற்க வேண்டியிருந்தால் அசையாமல் நில். இருவர் மூவர் ஒன்ருகப் போவதால் சேர்ந்து போங்கள்; பிரிந்து தனித்தனியாகப் போக வேண்டாம்.

10. ரஸ்தாவைக் கடக்கக்கூடிய மட்டிலும் போக்கு வரத்து அதிகம் இல்லாத இடமாகப் பார்த்து கடந்து செல்லவும்.

11. ரஸ்தாவைக் கடக்கும் பொழுது நின்று கொண்டிருக்கும் வண்டிக்கு முன்புறமோ பின்புறமோ அதிகக் கவனத்துடன் செல்லவும்.

12. மற்றும் போக்கு வரத்தைச் சரிவரச் செலுத்தும் போலீஸ்காரனுடைய குறிப்புகளையும் கவனிக்கவும்.

13. திடீரென்று போக்கு வரத்தில் அகப்படுவோமென்று அறிந்தால் உடனே நிற்கவும். சில இடங்களில் பாதசாரிகள் ரஸ்தாவைக் கடக்கப் போட்டிருக்கும் வழியாகப் போகவும். இரவில் கூடிய மட்டிலும் ரஸ்தா விளக்குக் கம்பத்தின் அருகாமையில் ரஸ்தாவைக் கடக்கவும்.

1. நகர்ந்து கொண்டிருக்கும் எந்த வண்டியிலும் ஏற வேண்டாம். அதினின்று இறங்க வேண்டாம். ஏறுவதும் இறங்குவதும் வண்டி நின்ற பிறகுதான்.

2. பஸ், டிராம் முதலியவைகளில் வலது புறத்தில்தான் ஏறவும் இறங்கவும் வேண்டும்.

3. பஸ், டிராம் இவைகளில், வேண்டுமானல் — முதலில் ரஸ்தா ஓரத்திலுள்ள பாதசாரிகளுடைய மேடையில் நின்று முதலில் போக்குவரத்தைக் கவனிக்கவும், பின்பு வண்டியிலிருந்து ஆட்கள் இறங்கிய பிறகு வண்டி போகும் திக்

கைநோக்கிக் கவனத்தைச் செலு த்தி ஏறவும்.

4. அதுபோல் பஸ், டிராம் இவைகளிலிருந்து இறங்க வேண்டுமானால் இறங்க வேண்டிய வண்டிக்கும், பாதசாரிகள் நடைமேடைக்கும் இடையில் வேறு வண்டிகள் இல்லையென்று கவனித்து இறங்கவும் — அப்படி இறங்கும் வண்டிக்கும் முன்னாலோ பின்னாலோ போக வேண்டாம்.

5. வண்டிகளிலிருந்து இறங்கும் பொழுது நடை மேடைக்குப் பக்கத்திலுள்ள பக்கமாக இறங்கவும்.

6. வண்டியோட்டியின் கவனத்தை, தான் வண்டி ஓட்டுவதினின்று மாற்றலாகாது. அவன் பார்வையையும் மறைக்கக் கூடாது.

7, நாற்சந்து முச்சந்திகளில் வண்டியை நிறுத்துவதோ, வண்டியில் சாமான்களை ஏற்றுவதோ இறக்குவதோ கூடாது.

1. ரஸ்தாக்களிலும், நடை மேடைகளிலும் அசுத்தமின்றி இருக்க வேண்டும்.

2. அவைகளின்பேரில் பழத் தோல்களை எறியாதே. அவைகள் அங்குக்கிடந்தால் அவைகளைத்தூர ஒதுக்கு. அதுபோல் கண்ணாடித் துண்டுகள், தகரத் துண்டுகள், லாடத் துண்டுகள் அல்லது கூரான எந்தப் பொருளும் இருந்தாலும் அவைகளைத்தூர ஒதுக்கவும்.

3. வயோதிகர், சிறுவர், கண் தெரியாதவர், செவிடர், மூடவர் இவர்கள் ரஸ்தாவைக் கடக்க உதவி செய்யவும்.

4. குடை பிரிந்திருந்தால் தலைக்குமேல் பிடிக்கவும், மடிந்திருந்தால், கையில் பிரம்பைப் பிடிப்பது போன்று வைத்துக் கொள்ளவும். அக்குளில் குறுக்காக வைக்கக்கூடாது.

5. நெருப்பணைக்கும் மோட்டாரின் மணி அல்லது ஆரம்ப சிகிச்சை மோட்டாரின் மணி இவைகளைக் கேட்டால் ரஸ்தாவின் ஓரத்தில் ஒதுங்கவும்.

6. மழைக்காலங்களில் கவனம் அதிகமாகச் செலுத்த வேண்டும். ரப்பர் போட்ட பாதரட்சைகளை உபயோகிக்கக் கூடாது. தண்ணீர் தேங்கிய ரஸ்தாவில் அவசரமாக நடக்கலாகாது.

7. மழைக் காலங்களில், பள்ளிக்கோ, ஆபீசுக்கோ எப்பொழுதும் புறப்படுவதற்குச் சற்று முன்னதாகவே புறப்படுவது நலம்.

8. ரஸ்தாவின் மத்தியில் நின்று கொண்டு வம்பு அரட்டைகள் பேச வேண்டாம். இது ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும்.

9. வீட்டுக்கால்நடைகளைத்தன்னந்தனியாக ரஸ்தாவில் மேய விடவேண்டாம்.

10. ரஸ்தாவில் பிள்ளைகளை விளையாட விட வேண்டாம். விளையாட்டு வேகத்தில் ஆபத்தில் சிக்கிக் கொள்ளலாம்.

11. பந்து ரஸ்தாவின் மத்தியில் போய் விட்டால், ஒரே ஒரு சிறுவன் மட்டும் பக்கத்தில் இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்துக் கவனமாக இருந்து பந்தை எடுத்து வர வேண்டும். அன்றிப் பல பிள்ளைகள் போட்டியிட்டுப் பந்தை எடுக்கப் போனால் விபத்திற்குக் காரணமாகலாம்.

12. போக்கு வரத்து அதிகமாக உள்ள ரஸ்தாக்களில் பட்டம்

பறக்க விடுவது நல்லதல்ல. பிள்ளைகள் மேலே பறக்கும் பட்டங்களில்தான் கவனம் செலுத்துவார்களேயன்றி ரஸ்தாக்களில் வரும் வண்டிகளைக் கவனிக்க மாட்டார்கள்.

13. சில பிள்ளைகள் வண்டிகளுக்குப் பின் அவைகளைப் பிடித்துக் கொண்டு ஓடுவதைப் பார்க்கிறோம். வண்டி திடீரென்று நின்று விட்டால் விபத்து நேரிடலாம்; அல்லது பின்னல் வேகமாக வரும் வண்டியினல் ஆபத்து உண்டாகலாம்.

ஒவ்வொரு ஆண்டிலும் நம் நாட்டில் விஷஜுரம், வைசூரி, காசம், காலரா, டைபாய்ட், ரத்தபேதி, பிளேக் முதலிய கொடிய வியாதிகளால் பல்லாயிரக் கணக்கில் ஜனங்கள் மடிகிருர்கள். ஆறு மரணத்தில் நாலு மரணமாவது மேற்கூறிய தொத்து வியாதிகளால் ஏற்படுகின்றன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. தக்க தற்காப்புச் செய்து கொண்டால் இவ்வியாதிகள் நம்மை அணுகாது. கீழ் வரும் நிபந்தனைகளை நாமும் அனுஷ்டித்து நம் சுற்றத்தாரையும், நண்பர்களையும் அனுஷ்டிக்கும்படிச் செய்தால் தொத்து வியாதியின் பயம் நீங்கி விடும்.

1. வீட்டிலும், ஓட்டல்களிலும் சுத்தமான காய்ச்சி வடிகட்டின நீரையே அருந்தவும். இதனல் காலரா, டைபாய்ட், ரத்தபேதி இவைகள் தடுக்கப்படும்.

2. புதிய சூடான உணவை உட்கொள்ளவும். ஆறிப்போன பழைய உணவு நல்லதல்ல.

3. உணவை எக்காரணங் கொண்டும் கைகளால் பரிமாறக் கூடாது. கை நகங்களில் பல கிருமிகள் தங்கியிருக்கலாம்.

4. உணவுச் சாலைகளிலும், அடுக்களையிலும் ஈ வராமற் செய்யவும். இதனல் ரத்தபேதி, காலரா, டைபாய்ட் முதலியன அணுகாது.

5. நகரத்தில் இன்ப்ளுயன்சா, இருமல், சளி, சளி சுரம் முதலிய தொத்து வியாதிகள் இருக்கும் பொழுது கூட்டங்களில் கலந்து கொள்ளாதே — இந்த வியாதிகள் சுவாசத்தின் வழியாய் நுரையீரலை அடைய ஏதுவாகும்.

6. பொதுக் கூட்டங்களில் இருக்கையில் தும்மல், இருமல், கொட்டாவி விடுதல், இவைகள் ஏற்படும்பொழுது கைக்குட்டையைக் கொண்டு தம் வாயைப் பொத்திக் கொள்ள வேண்டும். இதே போல் மற்றவர்களையும் செய்யும்படி வற்புறுத்த வேண்டும்.

7. இரவில் காற்ருேட்டமுள்ள அறையில் கொசு வலைக்குள் தூங்குவது அவசியம். கொசுக்களால் விஷசுரம் பரவுகிறது.

8. உணர்ச்சியைக் கண்டபடித் திரிய விடாது அடக்குவதால் வெட்டை, குஷ்டம், முதலியன வராமல் தடுக்கலாம்.

9. அம்மை குத்துதல், இனகுலேஷன் ஊசி போடுதல் இவைகள் முக்கியம். இவைகளால் தேகத்தில் வியாதியைத் தடுக்கும் வலிமை ஏற்படும். வைசூரி, பிளேக், காலரா, டைபாய்ட், இவைகளுக்குக் காலா காலங்களில் அம்மை குத்திக் கொள்ள வேண்டும்.

10. உடை, படுக்கை, இருக்கை இவைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

14. நல்ல ஆரோக்கியமான இடத்தில் சிறிது நேரம் உடற் பயிற்சி அல்லது தக்க விளையாட்டு களில் ஈடுபட வேண்டும். அல்லது சிறிது தூரம் உலாவச் செல்ல வேண்டும்.

15. தக்க வேளைகளில் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

1. தொழிலாளி தனக்கு உட்பட்ட வேலைகளை ஆபத்தின்றிச் செய்வதற்கு வேண்டிய மனப் பான்மையை . உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

2. சாமான்களைக் கையாடும் பொழுது தான் ஒருவனால் மட்டும் அவைகளைக் கையாள முடியுமா அல்லது பிறருடைய உதவி தேவையா என்று தீர்மானித்து நடக்க வேண்டும். அல்லது அவைகளைத் தக்க சுளுவான இயந்திர சகாயத்தால் கையாளவும்.

3. சாமான்களைக் கையாளும் பொழுது கூர்மையான முனைகள் தோலைக் கிழியாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

4. இயந்திரங்களைத் துடைத்து எண்ணெயிடும் பொழுது கூடிய மட்டிலும் அவைகளை ஓடாமல் நிற்க வை.

5. ஓடிக் கொண்டிருக்கும் இயந்திரத்தில் வேலை செய்ய வேண்டுமானால் கவனம் அதிகம் தேவை. தேகத்தை ஒட்டினாற் போலுள்ள உடைகளை மட்டிலும் அணியவேண்டும். தலைக் கூந்தலையும் சிறுகக் கத்தரித்துக் கொள்ளல் வேண்டும்.

6. வேலைகளுக்குத் தக்க காப்புக் கண்ணாடி ரப்பர் பூட்ஸ், முக மூடி, கையுறை முதலியவைகளை அணிந்துகொள்.

5. லோகத் துணுக்குகளைக் கையால் வாரி எடுக்காதே. 'புருஷால்' வாரி எடுக்கவும்.

6. தொழிலுக்குத் தக்க கருவியைச் சரிவர உபயோகிக்கவும். தக்க கருவியைக் கையாளவும் கருவியைப் பயன் படுத்தத் தெரியா விட்டால் தொழில் சூபர்வைசரைக் கொண்டு தெரிந்து கொள்.

7. இயந்திரங்களி விடப்பட்ட காப்பு மூடிகளை எக்காரணத்தைக் கொண்டும் விலக்கக்கூடாது.

8. இயந்திர சாலைகளில் மேலே தூக்கப்பட்ட பளுவான பொருள்களுக்குக் கீழே போகாதே.

9. இயந்திரங்களை இயக்குவதற்கு முன், அந்தந்தத் தொழிற் சாலைகளிலேற்பட்ட தற்காப்பு விதிகளை அனுசரிக்க வேண்டும்.

10. ஏணிகள், மேடைகள், நகர்ந்து கொண்டிருக்கும் பார வண்டிகள் இவைகளிலிருந்து குதித்தலாகாது.

11. விஷ வாயுக்கள், மின் சாரம், அமிலங்கள், காரங்கள், வெடிமருந்துகள் இவைகள் கையாடுமிடங்களில் அந்தந்தப் பொருள்களைப் பற்றிய தற்காப்புகளைச் சரிவரக்கவனித்துக் கையாட வேண்டும்.

12. தொழிலாளிகள் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஒவ்வொருவரை ஹாஸ்யம் செய்வது, வீண் பேச்சுகள் பேசுவது இவைகளால் தொழிலில் மனது சரிவரச் செல்லாமல் ஆபத்து உண்டாகக் காரணமாகிறது.

அமெரிக்க ஐக்ய நாடுகளிலும் மற்றும் பிற நாடுகளிலும் வாசஸ் தலங்களில் மோட்டார் வண்டி

களால் அதிகப்படியான விபத்துகள் ஏற்படுகின்றன. இதற்கடுத்தபடியாகக் கீழ் விழுதல், நெருப்பு, நீரில் மூழ்குதல், இருப்புப் பாதை, துப்பாக்கிகள், விஷங்கள், விஷக்காற்றுகள், இவைகளால் ஏற்படும் விபத்துகள். நெருப்பினல் விபத்து பொதுவாக சிறு குழந்தைகளிலும், கீழ் விழுதலினல் விபத்து வயோதிகர்களிலும் காணலாம். மற்ற நாடுகளில் கணக்கெடுத்திருப்பது போன்று நம் நாட்டில் வீடுகளிலும் வாசஸ்தலங்களிலும் ஏற்படும் விபத்துகளின் புள்ளி விவரங்கள் கிடையாது. ஆனல் ரஸ்தாவில் ஏற்படுவதைக் காட்டிலும் வீட்டில் ஏற்படும் விபத்துகள் அதிகம் என்று அறிஞர் கருதுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் 80 விபத்துகளுக்கு மேற்கொண்டு கால் தடுமாறுவதால் ஏற்படுகின்றனவாம்.

மற்றும் வீடுகளில் நெருப்பு விபத்துகள், கவனக் குறைவால் ஏற்படுகின்றன. அடுப்புகளிலும், மண்ணெண்ணெய் ஸ்டவ் உபயோகப் படுத்தும் பொழுதும், தீக்குச்சி உரைக்கும் பொழுதும், அஜாக்கிரதையினல் தொங்கிக் கொண்டிருக்கும் புடவைகளில் தீப்பற்றிப் பலபேர் மாண்டிருக்கின்றனர் என நாம் அறிவோம். ஆதலால் கூடிய மட்டும் உடைகளைத் தேகத்தை ஒட்டியிருக்கும்படி வைத்துப் பழகிக் கொள்ளுவது நல்லது. இது பெண் பிள்ளைகள் மிக அவசியமாகக் னிக்க வேண்டிய விஷயம். தீ விபத்து சிறியதாய் ஏற்பட்டு, பின் மிகப் பெரியதாகப் பற்றிப்பல வீடுகளையும் நாசம் செய்யக் கூடும் என்பதை நன்கு அறிந்து அதி ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

சில வீடுகளில் திறந்த அலமாரிகள், குறிப்பு எழுதாத மருந்துகள் விஷங்கள் வைத்திருப்பதை நாம் கவனித்திருக்கிருேம். இது மிகவும் கெடுதலான விஷயம். ஒரு மருந்துக்குப் பதிலாக வேருெரு மருந்தை உட்கொண்டு அது விஷமாக இருந்து விட்டால் அதனல் பிராணபத்து ஏற்படும் என்பது திண்ணம். துப்பாக்கி ரவைகளில் கைபடுதல், பட்டாசுகளை கவனக் குறைவாகக் கொளுத்துவது, பாழ் வீடுகள் இடிந்து விழுதல், கைப்பிடிச் சுவரும் சகடையுமில்லாத கிணறுகளில் தண்ணீர் சேந்துதல், தென்னை மட்டைகள், காய்கள் பழுத்துக் கீழே விழுதல், காற்றில் மரங்கள் முறிந்து விழுதல் இவைகளாலும் பல விபத்துகள் ஏற்படுகின்றன. நம் பழக்க வழக்கங்களில் சிறிதளவேனும் கவனத்தைச் செலுத்தி நம் சுற்றுப் பொருள்களைக் கூர்ந்து கவனித்து வருவோமாகில், எக்காரணத்தால் விபத்துகள் நேரக்கூடும் என்றும் எவ்வாறு அவைகளைத் தடுக்க முடியும் என்றும் அநேகமாகத் தெரிந்து கொள்ள முடியும். விபத்துகளால் கைகால்கள் ஒடிந்துபோய் அல்லது தேகத்தில் அங்க ஹீனம் ஏற்பட்டால் நமக்கு எவ்வளவு குறைவு! நம் தொழிலுக்குக் குந்தகம் ஏற்படுவது மன்னியில் நம் வாழ்நாளையே வீணுக்க வேண்டியும் வரும். இது தவிர மருந்துகள் செலவு எத்தனை? காலகரணம் எவ்வளவு? வீடுகளில் பெற்றோர்கள் இத்தகைய தற்காப்பு விஷயங்களை நன்கு ஆராய்ந்து தம் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது அவர்களது கடமையாகும்.

எதிர்வெள்ளம்

[கோமதி சுப்ரமணியம்]

செல்லையா இதுவரை ஊர் வதந்திகளை நம்பவேயில்லை. மனிதனை மிருகமென்றால் யார் நம்பமுடியும். ஆனால் கண்ணால் கண்ட போதுதான் அவன் மனம் நம்பிக்கை பெற்றது.

வண்டியிலிருந்து இறங்கும் போது வீட்டிற்குள் அறை விழும் ஓசை. பேயறைகிற மாதிரி என்பார்களே அப்படிக் கேட்டது. தன்கிராமத்தில் பிணையல் மாடுகளை பனை மட்டையால் அப்படி ஓசையெழ அடிக்கும் காட்சி நினைவில் வரலாயிற்று. அவன் அருமைத் தங்கை மீனாட்சிதான் அடிபட்டுக் கொண்டிருந்தாள். அடிக்கிற கைங்கர்யத்தைச் செய்த புண்ணியவான், அவனுடைய நண்பனாக இருந்து, அவள் புருஷனாக உரிமை பெற்ற வெங்கிடாசலம்.

எதிர் பாராத சமயத்தில் மைத்துனன் வரவே, தன்முகத்தைத் தொங்கவிட்டபடியே நழுவவிட்டான், புருஷசிம்மம். மீனாட்சி தமையனைப் பார்த்தாள்.

தோளுக்குமேலே தொண்ணூறு அடி; துடைத்து விட்டால் ஒன்றுமில்லை என்ற பழமொழியை நிரூபிக்க வந்தவளே போல் மீனாட்சி "அண்ணாச்சி வாருங்க" என்று வரவேற்பளித்தது இன்னும் ஆச்சரியத்தை மூட்டியது. அழுகையை அரைக்கணத்தில் மாற்ற பெண்ணால் தான் முடியும்.

மீனாட்சி குழந்தையாக இருந்த பொழுதுள்ள அருமை யென்ன? பெற்றோர்கள் வளர்த்த பெருமை யென்ன?

உலகநாத பிள்ளைக்கு ஆசைக்கு ஒருபிள்ளையாக செல்லையாவும் அருமைக்கொரு பெண்ணாக மீனாட்சியுமே இருந்தனர். பெற்றோர்களுக்கு செல்லையாவிடம் ஆசை உண்டே தவிர அவனுக்கு அருமை கிடையாது. பெயரளவில் கூட கிடையாது. காரணம் படிப்பினால்த்தான். ஆண்பிள்ளையை அடித்து வளர்க்கணும், பெண் பிள்ளையைப் போற்றி வளர்க்கணும், என்ற வசனத்தைக் கடைப் பிடித்தார்கள். இதனாலெல்லாம் மீனாட்சிக்கு அதிக இளக்காரமாகி விட்டது.

எதற்கெடுத்தாலும் அண்ணாவை வம்புக் கிழுத்துக் கொண்டேயிருக்கிறது. சலுகைக்குத் தான் பெற்றோர்களிருக்கிறார்களே என்ற தைரியம்.

சில வேளைகளில் பண்ணுகிற வம்பையெல்லாம் பண்ணி விட்டு ரொம்ப சாதுவாக "அண்ணா எனக்குப் பாடம் சொல்லித்தர மாட்டாயா?" என்று கேட்பாள்.

"சரி உன் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு வா" என்று உத்தரவிடுவான். அப்பொழுது வாத்தியார் என்கிற தோரணை வந்து விடும். செல்லையா தனது ஆத்தி

ரத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு இது தான் சரியான சமயம். பாடத்தை வெகு சூட்டியாகக்கற்றுக் கொள்வாள். ஆனாலும் ஏதாவது சிறு பிழை வந்து விட்டால் போதும். ஆத்திரம் தீர நறுக்கெனக் குட்டி விடுவான். அது சாக்காக ஓவென்றலறிக் கொண்டு அம்மாவிடம் ஓடி முறையிடுவாள்.

அவ்வளவு தான் "எண்டா கடன்காரா குழந்தையை அழ விட்டு வேடிக்கை பார்க்கிறே..." என்று அம்மா ஒரு பக்கம்.

"அவனுக்கு வழியா படிப்புத் தெரிஞ்சால்லா தங்கைக்கு சொல்லிக் கொடுக்கத் தெரியும். அவன் தான் பெரிய மண்டு வாச்சே. மண்டூகம்... அதுக்கு வேறே என்ன தெரியும்... மூதேவி..." என்று அப்பா ஒரு பக்கமுமாக ஆரம்பித்து விடுவார்கள்.

"நீங்கள் இப்படிச் செல்லம் கொடுக்க கொடுக்க அவள் கெட்டு குட்டிச் சுவராகத்தான் போகப் போகிறாள்."

"நிறுத்தடா உன் பிரசங்கத்தை, நீ அவள் காலில் கட்டி அடிக்க ஆவயோ. வாயைப் பாரு வாயை என்று அடக்கி விடுவார்கள். இப்படி எத்தனையோ சம்பவங்கள்.

அன்று செல்லையாவுக்கு வருஷப் பரிக்ஷை ஆரம்ப தினம். அதற்காக அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டான்.

"இங்கே வச்சிருந்த பென்சிலை யார் எடுத்தா?"

"என் நான் தான் எடுத்தேன். எதுக்காக இத்தனை கூப்பாடு போடறே. இந்தா பிடி..." என்று விட்டெறிந்த மீனாட்சியைக் கண்டதும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"சனியன் முதன் முதல் கை வைத்து விட்டதோ மூதேவி... நான் பரீக்ஷைக் கென்று புதுப் பென்சல் வாங்கி இன்றைக்குத் தான் சீவி வைத்தேன். அதை ஒடித்து விட்டது தரித்திரம்..."

"அடேயப்பா, பெரிய தடபுடல் பண்ணிக் கொண்டு போகிறாயே பாஸாகி விடுகிறாப் போல் தான்..."

"கரிவாக்குக் கொடுக்காதே சனி. தொலை வீட்டுக்குள்ளே"

"இல்லை நல்ல வாக்குக் கொடுக்கிறேன். கட்டாயம் 'கோட்' அடித்து விட்டு வா... போதுமா?"

"இரு. இரு. வந்து உனக்கு வரிசை செய்கிறேன்" என்று கூறிக் கொண்டே பள்ளிக் கூடத்திற்கு நேரமாகி விட்டபடியால் அவசரமாய் ஓடி விட்டான்.

மீனாட்சியின் வாக்குப் பலனோ அல்லது செல்லையாவின் போதாத காலமோ அந்த வருஷம் பெயிலாகி விட்டான்.

பெயிலான சேதி தெரிந்த அன்று ஆங்காரத்துடன் வீடுவந்து சேர்ந்தான். முதன் முதல் அவனைச் சந்தித்தது மீனாட்சி தான். ஓங்கி நாலறை வைத்து விடவே ஓவென்றலறி விட்டாள். இந்தச் சத்தத்தைக் கேட்டு அம்மா மட்டும் வெளியே வந்திரா விட்டால் கொலையே விழுந்திருக்குமோ என்னவோ; அவ்வளவு ஆவேசத்தி லிருந்தான்.

"அட பாவி மகனே எண்டா இப்படி குழந்தையைக் கொல்றே. சண்டாளப் பாவி" என்று கூவிக் கொண்டே அவர்களை விலக்கி விட்டாள்.

"குழந்தையாம் குழந்தை. விடியா மூஞ்சி பரிக்ஷைக்குப் போகிற போதே வரம் கொடுத்தது நாசமாப் போக..."

"ஏண்டா மடப் பயலே, ஒழுங்காப்படிக்காமல் பரிக்ஷையை குட்டிச் சுவராக்கினது மில்லாமே அவளை எப்படியடா நீ கை நீட்டி அடிக்கலாம்" என்று அப்பா பதில் வரிசை யளித்ததையும் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

இந்தச் சம்பவங்களினலெல்லாம் மீனுட்சி மீதுள்ள வெறுப்பு அதிகமாகிக் கொண்டே வந்தது.

இதற்காகப் பழி தீர்த்துக் கொள்ள முயன்ற ஒவ்வொரு தடவையும் கடைசியில் தோல்வி செல்லையாவுக்கே.

காலச் சக்கரம் எப்பொழுதும் ஒன்று போல் ஓடிக்கொண்டேயிருக்க முடியுமா? சுழலும் வேகத்தில் எத்தனையோ மாறுதல்கள் எவ்வளவோ அதிர்ச்சிகள் அப்படித்தான் மீனுட்சியின் வாழ்க்கையிலும்.

அவள் தந்தை இறந்த பின்னர் குடும்பப் பொறுப்பு செல்லையா கையில் ஒப்படைக்கப் பட்டது. தங்கைக்கு வரன் தேடும் கடமையை தலைமேற் கொண்டான். எங்கிருந்தோ பிடித்து வந்து விட்டான் வெங்கிடாசலத்தை. மாப்பிள்ளை பொல்லாதவன் கெட்ட நடவடிக்கையுள்ளவன் என்பது செல்லையாவுக்குத் தெரியாததல்ல. தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்குச் சரியான சந்தர்ப்பம் என்று எண்ணி மகிழ்ந்தான். ஆனல் அதனல் ஏற்படப் போகும் விபரீதங்களைச் சிறிதளவேனும் நினைத்துப் பார்த்திருந்தான? இல்லை...!

மீனுட்சியைக் கட்டிக்கொடுத்த கிரகம், செல்லையாவுக்குப் பட்டணத்தில் வேலை கிடைத்துவிட்டது. அம்மாவை அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

செல்லையா வேலைக்குப் போன புதிதில் மீனுட்சியிடமிருந்து அடிக்கடி, கடிதம் வந்து கொண்டிருந்தது. பின்னர் எப்பொழுதாவது கடிதம் வரும். இத்தனை நாள் தாமதமாவதற்கு ஏதாவது சால் ஜாப்புச் சொல்லி எழுதியிருப்பாள். இப்பொழுது அதுவும் இல்லை. கிட்டத் தட்ட வருஷம் ஒன்ருகி விட்டது.

எப்பொழுதாவது அம்மா மீனுட்சியின் பேச்சை யெடுக்கும் பொழுது அவனுக்கு என்னவோ போலிருக்கும். இயற்கையிலேயே செல்லையா நல்ல மனம் படைத்தவன். அதுவும் இப்பொழுது வருஷக் கணக்காகப் பிரிந்திருந்து விட்டான்- தூரத்திலிருந்தாலே அருமை ஏற்படுவது சகஜந்தானே.

சில தினங்களாக செல்லையாவுக்கு, தான் தங்கைக்கு பெரிய துரோகம் செய்து விட்டோமென்ற எண்ணம் தோன்றித் துன்புறுத்திக் கொண்டிருந்தது. லீவு எடுத்துக் கொண்டு ஊருக்குப் போய் தங்கையைப் பார்த்து வருவதென்ற தீர்மானத்துடன் புறப்பட்டு விட்டான். வந்தால் அழைத்து வரலாமென்ற ஆசையொருபுறம்.

ஊருக்குக்கு வந்ததும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் மீனுட்சியின் நிலைமையைத் தெரிவித்த பொழுது பொய் சொல்வது போலிருந்தது. அனல் இப்பொழுது கண்ணுரக் கண்ட பின்னரும் சந்தேகமென்ன? அவள் வாழ்கிற பெருமையறிய இதை விடவும் வேறு அத்தாட்சி வெண்டுமா?

"என்ன அண்ணுச்சி அப்படியே பிரமை புடிச்சாப்பிலே உக்காந்திட்டிங்க. இன்றைக்குக் கிடைத்த வெகுமதி என்ன அவ்வளவு அபூர்வம். எந்நேரம் உண்டானது தானே" என்ருள் மீனுக்ஷி.

மௌனத்தைக் கலைத்த பின்னரே அவனுக்கு சிந்தனை தெளிந்தது.

"என்ன, எந்நேரமும் இதே கதி தானு?"

"இல்லே, இன்றைக்கு அவர்களுக்கு வேறு ஆயுதங்கள் ஒன்றும் கைவசம் கிடைக்காததால் கையினுலேயே வரிசையளிக்க நேர்ந்தது. இல்லேயானல் ஒவ்வொரு நாளைக்கும் புதுப்புது ஆயுத பூஜை கிடைக்கும்." என்று சொல்லிக் கொண்டே அலட்சியமாகச் சிரித்தாள். அவள் வாழ்க்கையே சிரிப்பாகத் தானே யிருக்கிறது. அதனுல் தான் அப்பொழுதும் சிரிப்புவந்திருக்க வேண்டும்.

"இப்பொழுதாவது உங்கள் வஞ்சம் தீர்ந்ததல்லவா?" என்று கூறிய படியே அண்ணனை நோக்கினுள்.

செல்லேயாவின் மனம் மாறியதை அவள் அறியவில்லே. அவனை பழைய அண்ணுவாகவே நினைத்திருந்தாள். விளையாட்டாக வார்த்தைகளைக் கொட்டி விட்டாள். அது அவன் புண்பட்ட நெஞ்சில் ஆயிரம் ஈட்டி பாய்வது போலிருந்தது. குழந்தை போல் கோவெனக் கதறி விட்டான்.

"மீனுட்சி என்னை மன்னிப்பாயா. நான் மகா பாபி. உன்னை அநியாயமாகக் கெடுத்து விட்டேன். பாழ் கிணறு என்று தெரிந்தும் உன்னைப் பிடித்துத் தள்ளிவிட்டேன். என்னை மன்னித்து விடு. அவைகளையெல்லாம் மறந்து விடு" என்று கூறியவன் துக்கம் தாளாது தேம்பித் தேம்பி அழுவதைக் காணச்சகியாத மீனுட்சி அண்ணுவுக்கு ஆறுதல் கூறித் தேற்றினுள்.

நாலைந்து தினங்களுக்குப் பின் தங்கையை அழைத்துச் செல்வதற்கு வெங்கிடாசலத்திடமும் ஒருவகையாக அனுமதி பெற்றுக் கொண்டான்.

"மீனுட்சி சாமானை எடுத்துவை. இதோ வண்டியமர்த்தி வருகிறேன்" என்று கூறி செல்லேயா வெளியே சென்ருன்.

"ஊருக்குப் போவதற்குள் மாடியையெல்லாம் பெருக்கி வைத்து விட்டுப் போ" என்ற கணவனது உத்தரவை சிரமேற்கொண்டு மாடிக்கு விரைந்து சென்ருள் மீனுட்சி. அவசர அவசரமாய் பெருக்கித் தள்ளி விட்டு தூசியை அள்ளி வாசலில் எறிந்தாள். அந்த வேளை கீழ் வாசலில் வந்த கணவன் தலையில் அது கொட்டிற்ருே என்னவோ!

மாலை வந்தது, மதியமும் வந்தது. கோல நிலா வந்தங்கே விளையாடக் காத்திருக்கும் கோலாகல நேரம். வானத்தை அண்ணுந்து பார்த்தாள். மனதைச் சித்திரித்து மங்கியும் ஒளி தூவியும் ஜாலம் புரியும் நட்சத்திரக் கூட்டம் அவளைப் பார்த்து, "என்ன?" என்று கேட்பதுபோல் இருந்தது.

"என்ன?"

என்ன சொல்லுவாள். தன்னிடமே "என்ன?" என்று கேட்டுக் கொண்டாள். ஊருக்குப் போவதா? ஆமாம் போய் என்ன செய்ய? என்ன செய்வது.

எல்லாரும் ஊரில் போய் என்ன செய்வார்கள்? சரி. பிறகு?பிறகு? பிறகென்ன?

இந்தச் சண்டையும் சச்சரவும்–கிரகச் சாரம். ஏனோ இப்படி நிகழுகிறது? எல்லாருக்கும் இப்படித் தானா? நன்றாயிருக்கிறது. ஆனால் தனக்கு மட்டும் இப்படி ஏன் நேர வேண்டும்? என்னத்தைச் சொல்வது? ஆட்டி வைக்கும் அந்த அவன்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்!

குற்றாலத்து அருவி போல் ஆனந்தம் துள்ளி விளையாட வேண்டிய அந்த கோமள உள்ளத்திலே, லேசாகக் குவியும் இருள் போல் சோகம் படர்ந்து வந்தது.

தன்னுடைய சகோதரன் வண்டி கொண்டு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டுப் போனானே, வண்டியுடன் வந்தால் போக வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி யெல்லாம் அவளுக்குக் கவலை இல்லை! பக்கத்து

அறைக் கதவு 'படார்' என்று சாத்தும் சத்தம் கேட்டதே, கணவன் வெளியே எங்கோ சென்று விட்டானா இல்லையா என்பதையும் அவள் எண்ணிப் பார்க்கவில்லை. இரவுச் சாப்பாடு! நல்ல கூத்து! தான் எங்கே நிற்கிறாள் என்பதே அவளுக்குப் புரியவில்லையே! ஏதோ கண் காணாத தேசத்திலே வன வனாந்திரங்களுக்கு நடுவே கொடும் புலி வாழும் காட்டில் தனிப்பட்டு நிற்பதாகக் கற்பனை பண்ணிக் கொண்டாள். ஆம், அன்பற்ற கணவன் மிருகம் தானே! 'புலி'யிலும் கேடு கெட்ட மிருகம். என்ன சந்தேகம்?

வாசலில் வண்டி வந்து நின்றது. 'தடதட' வென்று சகோதரன் மாடிக்கு வந்தான். கற்சிலை போல் நின்ற சகோதரியிடம், "புறப்படு, புறப்படு" என்றான்.

அவளுக்கு இது கேட்கவில்லை.

"என்ன, புறப்படு மீனாட்சி."

தூக்கத்திலிருந்து விழித்தவள் போல், "எங்கே?" என்றாள்.

ஆச்சரியத்துடன், "எங்கேயா?" என்றான்.

அவள் திரும்பிப் பாராமலே, "எங்கே அண்ணா வரச் சொல்லுகிறாய்?" என்று சாவதானமாகக் கேட்டாள்.

அவனும் 'சிலை'யாகி விட்டான்.

பேச்சற்று நிற்கும் தமையனிடம், "அண்ணா, ஏன் பேச மாட்டேன் என்கிறாய்?" என்றாள் மெல்லிய குரலில்.

"என்ன பேசுவது? பேசுவதா? இந்த மிருகத்திடம் இனி நமக்கு வேலை இல்லை! புறப்படு. இன்னும் இங்கே 'குடித்தனம்' பண்ண உத்தேசமோ? அதை விட பிச்சை எடுப்பதே மேல்...'

சற்று நின்று, ஆனால் பொங்கி வரும் கோபத்தை அடக்கிக் கொண்டு, "உனக்கு மனம் கெட்டு விட்டதா? இந்த மிருகத்துடன் வாழ்வதை விட இறப்பதே மேல். நீ செத்து போய் விட்டாய் என்று நினைத்துக்கொள்ளுகிறோம். நித்த நித்தம் துக்கம் எதற்கு? ஒரே நாளில் தலை முழுகி விடுகிறோம்... பேச்சை அவன் முடிக்கவில்லை. அம்பு பட்ட மான் போல் அழுது துடிக்கத் தவிக்கும் அவள் அதரங்கள் அவனைப் பேச விடாமல் தடுத்தன.

கலங்கும் கண்களோடு அவனை ஒரு தரம் அண்ணாந்து பார்த்தாள். பிறகு, "ஏன் அண்ணா இத்தனை கோபம்? அவர் போக்கு அப்படி. என் விதி இப்படி, இதற்கு நீ சலித்துக் கொண்டு என்ன பண்ணுகிறது? நீ புறப்படு, போய் வா. என்னைப் பற்றி நினைத்து அதிகமாக வருந்தாதே. இப்போது சொன்னாயே நான் செத்து விட்டதாக நினைத்துக் கொள்ளு......

இதைச் சொல்லுகையில் 'ஓ' வென்று கதறி விட்டாள். சகோதரனுடைய தணல் சிந்திய வார்த்தைகள் அணைந்து போய் விட்டன.

தலைமேல் கைவைத்தபடி, என்னமோ முணங்கினான். மாடியோரம் நின்ற அவளை, "சரி, அப்படியானால் நீ வரவில்லை என்கிறாயா?" என்றான் மெள்ள:

அவளுக்கு விம்மலும் விக்கலும் தாங்க முடியவில்லை. அழுகைக் கிடையே பேசலானாள்: இத்தனை நேரம் பக்கத்து அறையில், 'சாந்தமாக' உட்கார்ந்திருந்த கணவனும் 'காது கொடுத்துக் கேட்டான். மீனாட்சி தக்கித் தக்கி, "அண்ணா,

என்னை ஏன் மேலும் மேலும் வருத்தப் படுத்துகிறாய்? அவர் போக்கு அப்படி என்று சொன்னேனே. நல்லதோ கெட்டதோ நான் அனுபவிக்கிறேன். அனுபவித்தாக வேண்டும்... ஏன் என்று கேட்காதே. கணவன் அடிப்பதும் உதைப்பதும் திட்டுவதும் பொறுக்காமல் வந்து விடுகிறேன். இல்லை வரச் சொல்லுகிறாய். தாய் வீடு இருக்க நான் வந்து விடுகிறேன். அப்படி வசதி இல்லாதவர்கள் என்ன அண்ணா செய்வார்கள்? மற்றவர்களைப் பற்றி பேச்சு எதற்கு? எனக்கு இந்த வசதி இருந்தும் வராமல் இருப்பது தான் சிலாக்கியம் அண்ணா. இது உனக்குப் பிடிக்காது. சுத்தமாகப் பிடிக்காது. நீ சொல்கிறபடி அங்கே வந்த பிறகு? சின்னக் குழந்தைகள் விளையாட்டா இது? பெண்ணுக்கு கணவன் 'தெய்வம்' என்பது இப்போது தான் எனக்கு விளங்குகிறது. அவர் ரொம்ப நல்ல படியாகவே நடந்து வந்திருந்தால் — நடந்து வருவதாக இருந்தால் — இந்த தெய்வத் தன்மை, இன்னதென்றே எனக்குப் புரிந்திருக்காது. இப்போது தான் நன்றாக விளங்குகிறது. சுகமோ துக்கமோ பூராவும் ஏற்றுக் கொள்ளுகிறேன். இனிமேல் என் காது கேட்க அவரை ஒரு 'வார்த்தை'யும் சொல்லாதே. எனக்குப் பிடிக்காதது மட்டுமல்ல. எனக்குச் சகிக்கவும் சகிக்காது அது. ஏன் என்னை வாட்டுகிறாய்? நீ போய் விடு. சௌக்கியமாக ஊர் போய்ச் சேரு...'' மனசிலுள்ள 'பாரம்' முழுதும் தீர்ந்த மாதிரி இருந்தது அவளுக்கு. சகோதரன் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். பக்கத்து அறையிலிருந்து கணவன் திடீரென்று எழுந்தான். முதலில் அறையில் உள்ள 'ஸ்விட்சை'த் தேடினான். விளக்கு ஏற்ற!

அறையில் வெளிச்சம் பரவத் தான் வெளியே நின்ற இருவருக்கும் உள்ளே "அவர்" இருப்பது தெரிந்தது.

கீழே நின்றிருக்கும் வண்டிக் காரனை அனுப்பி வைக்க சகோதரன் சென்றான்.

அவள் திகிலுடன், வெளியே வரும் கணவனைப் பார்த்தாள். அந்தப் பெரிய விழிகள், "நான் என்ன பாவம் செய்தேன்?'' என்று கேட்பது போல் இருந்தன.

"சீக்கிரம் சமைப்பது தானே!'' என்ற கணவன் சொற்கள் அவள் காதில் விழுந்தன.

மேலும் அவன் "நேரமாகி விட்டது. போய்ச் சமை. முதலில் எனக்கு தண்ணி கொஞ்சம் கொண்டு வா'' என்றான். அவ்வளவு சாந்தமயமாக அவன் அதற்கு முன் கேட்டதே இல்லை. விரைந்து ஓடினாள். தண்ணீர் கொண்டு வரவா? அல்லது அமுதம் கொண்டு வரவா?

★



கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்...

அத்தியாயம் இருபத்தாறு

சிகாகோ பிரசங்கம்

யாழும் குழலும் பிடிலும் மிருதங்கமும் குரலும் ப. நாதப் பஞ்சாமிருதம் போலச் சேரத் தமிழ்மணி கிணீரென்று பாடினான். கரகரப்பிரியாவும் ரூபகமும் சேர்ந்து சபையைப் பரவசப்படுத்தின.

உலகமெல்லாம் உள்ளமொன்றி
ஒருகுலம்போல் வாழுவோம்.
கலக மின்றிக் கவலை யின்றிக்
கருணையன்பு சூழுவோம்.
அருண ஜோதிக் கிரணம் போல
அருளொளியிற் கூடு வோம்.
மரண பயமும் வென்று சாந்த
மங்க லத்தில் ஆடுவோம்.
ஒருகடவுள் ஒருலகம்
ஒருமை யன்பு நேயமே
பெருமையான சமய மென்று
பிரிய மாக வாழுவோம்.

இப்பாட்டைப் பாடும் போதே சபையில் இதென்ன பாஷை இவ்வளவு இனிமையாயிருக்கிறதே என்ற பேச்செழுந்தது. ஜெங்கின்ஸ் ஆவேசமாக எழுந்து ஆங்கிலத்தில் இதுதான் சர்வ சமரஸ உலக கீதம் என்று வீறிட்டமர்ந்தார். கரகோஷம் சடசடவென்று சபையதிர்ந்தது. தமிழ்மணி ஆங்கிலத்தில் வீராவேசமாகப் பேசினான்.

ஆன்மநேயர்காள்,

இதுதான் தமிழ் வாணியின் யாழொலி. இதே மேடையில் உங்கள் முன்னே விவேகானந்தர் வேதாந்த கர்ஜனை செய்தார். அவர் சமஸ்கிரதத்தில் எழுதிய உபநிஷத்தை ஆதாரமாகக் கொண்டு ஞான முழக்கம் செய்தார். இந்தியாவில் சமஸ்கிரதம்

தமிழ் என்ற இரண்டு தெய்வ மொழிகள் உள்ளன. உங்களுக்கு சமஸ்கிரதத்தைத் தெரியும். எமர்ஸன், தோரு காலம் முதல் கீதை இங்கே பரவியிருக்கிறது. இந்தியாவின் மற்றொரு தெய்வ பாஷை தமிழ். இது திராவிட பாஷை. இதுதான் இந்தியாவின் முன்மொழி, தொன்மொழி. ஆரியர்கள் புகுந்த பிறகு இந்த அகில இந்திய மொழி தென்மொழியாய் விட்டது. பதினாயிரம் ஆண்டுகளாக நாகரிகம் பெற்று உலக மொழியாக வளர்ந்தது தமிழ். இன்றும் அது இளம் பொலிவுடன் இருக்கிறது. ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக முப்பது எழுத்தில் அமைந்து உலக எண்ணங்களையெல்லாம் தெளிவாக வெளியிடும் திறமை பெற்றது தமிழ் மொழி. மற்ற மொழிகளில் நான்கு எழுத்திற் சொல்வதைத் தமிழ் இரண்டே எழுத்தில் சுருக்கமாகச் சொல்ல வல்லது. உறா உற என்று மூச்சைப் பிடுங்காமல் மூச்சுச்செட்டுடன் பேசத் தக்கது தமிழ்.

தமிழ் பேசும் வீர மரபினர் தமிழர். தமிழர் பல நூற்றாண்டுகளாகக் கப்பல் நடத்தி உலகெங்கும் தமது செய் பொருள்களை விற்று வந்தனர். ரோம், கிரீஸ், எகிப்து தேசங்களெல்லாம் ஒரு காலம் தமிழ்க் கப்பலை எதிர்பார்த்தன. ஆடையும், உணவுப் பொருள்களும், வாசனைச்சாமான்களும் தமிழ்க் கப்பலிற் சென்று உலகெங்கும் விற்றன. பொனீசியா, எகிப்து, ரோம், அபிஸினியா, பிலிபைன், ஜாவா முதலிய நாடுகளில் தமிழர் குடியேறினர். அங்குள்ள மொழிகளிலும் ஜனங்களின் நடை உடை பாவனைகளிலும் தமிழர் கலைச்சுவை கலந்தது. செந்தமிழ் மதுரையில் நெய்த சல்லாவும் சாய வேட்டியும் ஐரோப்பியரால் ஆவலுடன் வாங்கப் பெற்றன. எங்கள் தமிழகம் ஒருகாலம் கடலரசியாக விளங்கியது.

ஒரு நாட்டை அதன் பெரியாரால் அறிகிறோம். அமெரிக்கா என்றதும் வாஷிங்டன், லிங்கன், எமர்ஸன் முதலியோர் நினைவு வரும். எடிஸன் நினைவு வராமற் போகாது. அதேமாதிரி தமிழகத்தில் ஏராளமான வீரரும், அரசரும், அறிஞரும், கவிகளும் இருந்தார்கள், இருக்கிறார்கள். திருமாவளவன் என்ற சோழன் பெரும்படை கொண்டு இமயமலை முதல் இலங்கை வரையில் போர் நடத்தி வெற்றி பெற்றான். இளஞ்செழியன் என்ற பாண்டியன் பதினொரு மன்னரை ஒரேபோரில் வென்றான். தமிழர் வீறுபடைத்த வீரர், அப்போரில் இறப்பதை மோட்சமாகக் கருதும் சூரர். ஒரு தமிழ்த்தாய் போர் முரசைக் கேட்டதும் தன் மகனுக்கு இனிய உணவளித்துக், கையில் வேலும் வாளும் தந்து ஆசிகூறி, "மகனே போ நாட்டுக்காக அறத்திற்காகப் போர் புரி. அதர்மப்பகையை வென்று வா" என்றனுப்புவாள். ஒரே புதல்வனைக்கொண்ட அதே தாய் தன்மகன் கடும்போர் செய்து மார்பில் அம்புபட்டு இறந்ததைக் கண்டதும் மிகப்பெருமையடைந்து மகிழ்வாள். தமிழ் வீரரின் வாள் அநியாயமாகப் போர்செய்ததில்லை. தேசத்தை தருமத்தை, மானத்தைக் காக்கத் தமிழர் உயிரைத் துரும்பாக எண்ணிப் போர் புரிய வல்லவர்கள், தமிழர் வீரத்தைப் போலவே ஞானமும் புகழ்பெற்றது. மற்றெந்த நாட்டைக் காட்டிலும் தமிழ் நாட்டிலேதான் தெய்வப் பெரியார் கூட்டம் அதிகம். தமிழகத்தில்

சுமார் நூற்றைம்பது மகான்கள் விளங்கினர்கள். அவர்கள் சரித்திரங்களெல்லாம் ஆங்கிலத்தில் வரும் நீங்கள் பார்க்கலாம். இங்கே உதாரணத்திற்காக இரண்டொருவர் பெருமையைச் சொல்கிறேன்.

வள்ளுவர் என்ற அருட்புலவர் திருக்குறள் என்ற வேத நூலை அருளினர். கீதை போர்க்களத்தில் எழுந்து ஆத்ம உணர்வுடன் அர்ச்சுனனைப் போர்புரியத் தூண்டுகிறது. திருக்குறள், மகான் வள்ளுவரின் அனுபவ வாக்கு. அந்த மகான் மைலாப்பூரில் நெசவுத் தொழிலால் சுதந்தரமாகப் பிழைத்துக் கொண்டு தமது அனுபவங்களைத் திருக்குறளாக யாத்தார். மனிதன் அறமறிந்து, உண்மையறிந்து, அன்புகொண்டு இல்லறத்தில் வாழ்வதே தெய்வத்தன்மையெனலாம் என்று சொல்லாலும் செயலாலும் விளக்கியவர் வள்ளுவர்.

அன்பின் வழியது உயிர்நிலை; அறத்தால் வருவதே இன்பம்; ஆதிபகவன் முதற்றே உலகு; அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்; வாய்மையே தூய்மை: இன்புறும் இன்சொல்லவர்க்கு; ஒழுக்கமுடைமை குடிமை. உலகத்தோடொட்ட ஒழுகுதலே கல்விக்கழகு பொறுத்தார்க்கே புகழ்; தவஞ் செய்வார் தம் கருமஞ் செய்வார்; பொய்யாமையன்ன புகழ் இல்லை; இன்னாத செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்; கூத்தாட்டவைக்குழாத் தற்றே செல்வம்; அடல்வேண்டும் ஐந்தன்புலனை; கண்ணுடையரென்போர் கற்றோர்; அறிவுடையார் எல்லா முடையர் உள்ளமுடைமை உடமை. இவைபோன்ற ஆயிரக் கணக்கான மெய்யுரைகளை வள்ளுவர் திட்பநுட்பமான சூத்திரங்களாகச் சொல்லியிருக்கிறார். திருக்குறளே எங்கள் பைபிள். அதை மெச்சாதார் இலர். உங்களுக்கு ஒரு பைபிள் தான் உண்டு. எங்களுக்கு நூற்றுக்கணக்கான அறநூல்கள் உண்டு. ஆயிரக் கணக்கான அருட்பாசுரங்கள் உண்டு.

எங்களுக்குத் தருமோபதேசம் செய்தவர்களில் ஔவை என்னும் பெண்மணி முதன்மை பெற்றிருக்கிறாள். தமிழர் பெண்மையைப் பெருமை செய்பவர். ஔவையின் ஆத்திச்சூடியைத்தான் நாங்கள் சிறுவருக்கு முதற்பாடம் சொல்வது வழக்கம். அதன் முதல்வரி அறஞ்செய விரும்பு. ஆதலால் எங்கள் தமிழ்ச்சமுதாயம் அறவுணர்ச்சியில் ஊறி வீரம் பெற்ற தீரர் கூட்டம். எங்கள் பெண்கள் கற்பு நிலை தவறமாட்டார்கள். கற்பை உயிரினும் பெரிதாக மதிப்பார்கள். ஆணைப்பெண் சிவமாகவும், பெண்ணை ஆண் சக்தியாகவும் மதிக்கும். அருள் பெற்ற நாட்டவரே எமது தமிழர். அவர் உள்ளம் கருணையில் ஊறியது. பாரி என்ற மன்னன் தேரில் போகும் வழியில் ஒருமுல்லைக்கொடி கொழுகொம்பில்லாமல் துவளுவதைப் பார்த்தான். உடனே கருணையுடன் தனது தேரையே அதற்குக் கொழுகொம்பாக்கி தான் நடந்து ஊர் சேர்ந்தான். தாயுமானர் என்னும் மகான் இறைவா நான் பூசைக்குக்கூட மலர்பறிக்கக் கூசுகிறேன். ஏனெனில் நீ என்னுள் இருப்பது போலவே மலரிலும் புன்னகைக்கிறாய் என்கிறார். ஆண்டாள் என்ற அற்புதப் பெண்மணி உலகெங்கும் இறைவனைக்கண்டு அவனையே தன் ஆத்மபதியாக வேட்டாள். அப்பர் என்ற ஒருமகான் இறைவனைத் தவிர வேறு எவருக்கும் நான்

குடியல்லேன், நமனையும் அஞ்சேன், என்று ஒரு மன்னனுக்கு பதிற் சொன்னார். ஞானசம்பந்தர் என்ற மூன்று வயதுப்பிள்ளை அற்புதமான தேவாரங்கள் பாடி நோய் தீர்த்தார். பகைவரை வென்றார், இறைவனருளைப் பெற்றுச் சோதியிற் கலந்தார்.

உங்களுக்கு ராமகிருஷ்ணரைப் பற்றி விவேகானந்தரும் அவரது சீடர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர் வடக்கே விளங்கிய அதேகாலத்திலேதான் தெற்கே வடலூரில் ஓர் அற்புத ஞானி விளங்கினார். அவர் பெயர் ராமலிங்கம். இதோபாருங்கள் அவர் இயற்றிய அருட்பா. இதன் ஒவ்வொரு வரியும் அவருள் எழுந்த வேதவாக்கு. இது மனித சமுதாயத்திற்கு ஓர் தமிழ்ப் பெரியார் தந்த புதிய பொதுமறை. சாதி மத சாத்திர கோத்திர பேதமே யில்லாமல் மனித சமுதாயமெல்லாம் கருணையும் ஜீவகாருண்யமுங் கொண்டு, ஆன்மநேய ஒருமையில் வாழும் வகையை இந்த மகான் பதினாயிரக்கணக்கான பாடல்களால் உலகிற்குப் பாடித் தந்திருக்கிறார். அருட்பா போன்ற மற்றொரு நூல் எந்த நாட்டிலும் எம்மொழியிலும் உதித்ததில்லை. நண்பர்களே தமிழில் பொதிந்துள்ள கலைச்செல்வமும், அருட்செல்வமும் எல்லையற்றன. சுமார் நூறு தெய்வப் புலவர்கள் எங்கள் தமிழ் மொழியில் புண்ணிய நூல்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றுள் திருக்குறள் ஒன்றே உலகிற்குத் தெரியும். மற்ற ஏராளமான நூல்கள் இன்னும் குடத்தில் விளக்குகள் போலவே உலகறியாதிருக்கின்றன. நாளைமுதல் உங்களுக்குத் தமிழகப் பெரியாரையும் அருள்வாக்குகளையும் விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ் என்ற தென்மொழி இன்னும் சிறந்து விளங்குகிறது. அதில் அரிய பெரிய இலக்கியங்கள் உள்ளன. அற்புதமான கவிகளும் மகான்களும் இருக்கிறார்கள், தமிழ் உலக மொழிகளில் மிகவும் திட்ப நுட்பமானது. தமிழ் இசை நிரம்பியமொழி. வேறெந்த மொழியிலும் அவ்வளவு பெரிய அருட் பாசுரங்கள் இல்லையென்னலாம். இந்தப் பெருங் கூட்டத்திற்கு மறுபடியும் தமிழிசை விருந்தை ஊட்டி என் சொற்பொழிவை முடிக்கிறேன்.

அன்பு தெய்வம் என்று
சொல்லும்
அமுதமான தமிழ்மொழி,
இன்ப வாழ்வை இலகக் காட்டும்
எல்லையற்ற தமிழ்மொழி,
வாழ்க எங்கள் தாயமும்
வாழ்க தூய வாய்மையே;
வீழ்க துன்பம் அச்சம் இன்னல்.
வீரசக்தி ஓங்கவே.

சபையில் இன்று புதிய ஒன்றை அறிந்தோம் என்ற சத்தமும், எந் தாய் வாழ்க! என்ற கரகோஷமும் நீண்டொலித்தன:

மணிக்கு ஏற்பட்டது பதினைந்தே நிமிஷந்தான்; ஆனால் அவன் பேச்சை ஜனங்கள் விரும்பியதால் தலைவர் பேசட்டும் என்று தடைசெய்யாமல் விடுத்தார். மணி அரைமணிநேரம் உணர்ச்சிததும்பத் தன் உள்ளத்தில் குமுறும் எண்ணங்களை வெளியிட்டான். தலைவர் முடிவுரையில் இன்று இந்தியாவின் உள்ளத்தை யறிந்தோம். தமிழ் நாகரிகம் நமக்குப் புதிய கலைப்பண்பை யளித்தது. அன்பும் கருணையுமே உயிரான தமிழர் பெருமையை நாம் மெச்சுகிறோம். அமெரிக்கா இனித் தமிழ் இலக்கியங்களை ஆராயும்.

அதற்கு நமது மணியும் துணையாகுக. நாளைமுதல் அவர் செய்யப்போகும் சொற்பொழிவுகளைக் கேட்க வாருங்கள்!

இத்துடன் காரியதரிசி வந்தனோபசாரம் சொல்லக் கூட்டம் கலைந்தது. தாகூர் தமிழ் மணியைத் தம்முடன் அழைத்துச் சென்றார். பரிவாரங்களும் துணை சென்றன. தாகூர் உலகப் புகழ் பெற்ற பஹாய் சங்கக் கட்டிடத்தில் தங்கியிருந்தார். நாமும் அங்கே செல்வோம்.

அத்தியாயம் இருபத்தேழு

தாகூரின் ஆசி

நியூ யார்க்கிலும், சிகாகோவிலும் சங்கம் புகழ் பெற்றது. பஹாய் இயக்கம் உலக சமரஸத்தையும் அமைதியையும் நிலைநாட்ட நீண்டகாலமாகப் பாடுபடுகிறது. அதைத் தோற்றியவர் மிர்ஜா. ஆலி முகம்மது பாப் (Bab) என்பவர். இவர் பாரசீகத்தில் உள்ள ஷிராஜ் என்னும் நகரிற் பிறந்து, அதிகப்படிப்பில்லாமலே பக்திபரவசத்தால் இறைவனுடைய ஆதேசத்தைப் பெற்றவர். 1884-ம் ஆண்டு முதல் இவர் சீடர்களைக் கொண்டு நாடெங்கும் நன்னெறியை உபதேசித்தார். பாமர ஜனங்களுக்கு இவரது சர்வ சமரசக்கொள்கை பிடித்திருந்தது. ஏராளமான மக்கள் இவர் கொள்கைகளைப் பின்பற்றினர். பகைவரும் கொடுமையாக இவரைத் துரத்தி அடித்துத் திட்டித்தொல்லை செய்தனர். அதிகாரிகள் அநியாயமாகச் சவுக்கடி கொடுத்து இவரைச் சிறையிட்டனர். இயக்கம் மேன்மேலும் தியாகத்தீயால் வளர்ந்தது. முடிவில் பர்ரசீக மந்திரி இவர்மேல் அரசியற் குற்றம் சுமத்தி இந்த மகானைச் சுட்டுக் கொன்றார். இவர் சீடர்களை அதிகாரிகளும் பகைவர்களும் சித்திரவதை செய்தனர்.

பர்ம் ஆறே ஆண்டுகள் உபதேசித்துக் கொலையுண்டார். ஆனால் அவர் சிந்திய இரத்தம் வீணாகவில்லை. அவர் ஆதேசம் பெற்று பஹோல்லா என்னும் மகான் எழுந்து சமதர்மத்தை உபதேசித்தார். அவரையும் அரசாங்கம் கொடுமையாக நடந்தி, பாக்தாது, அட்ரியாநோபிள், அக்கா முதலிய இடங்களில் சிறையிட்டது. அந்த மகான் கடிதங்களாலும் மாணவர்கள் மூலமும் தன் கொள்கைகளை உபதேசித்தார். 1893.ல் சிகாகோவில் நடந்த சர்வமத சங்கத்தில் பஹாயின் சமரசச்சமயமும் ஓங்கி முழங்கியது. அன்றுமுதல் இங்கும் நியூயார்க்கிலும், பல நகரங்களிலும் பஹாய் சங்கங்கள் நின்று நிலவின. அப்துல் பஹாயின் முதன்மையான சிஷ்யர், மீர்ஜா ஆலி என்பவரே சிகாகோ பஹாய் சங்கத்தை நடத்தினர். அவர் இந்திய நண்பர். உபநிஷத்தில் பற்றுகொண்டவர். இந்தியாவிலும் பஹாய் சங்கக் கிளைகள் உண்டு. இந்தியப் பெரியாரை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்று உபசரித்து வந்தார். தாகூரிடம் அவருக்குப் பற்றுதலுண்டு. ஆதலால் கவியரசர், பஹாய் சங்கத்திலேயே தங்கினர். ஜெங்கின்ஸ் தம்பதிகளுக்கும் அவர் நண்பர்.

இன்று நடந்த கலைமன்றப் பேச்சுக்களில் தமிழ் மணியின் பேச்சு அவருக்குப் பெரு

மகிழ்ச்சி யளித்தது. ஏனெனில் பஹாய் கொள்கைக்கு அது முற்றிலும் ஒத்திருந்தது. ஆதலால் தாகூருடன் ஆலி தமிழ் மணியையும் அழைத்து விருந்திட்டார். விருந்திற்குப் பிறகு மூவரும் உலக நிலையைப்பற்றிப் பேசினார்கள். தாகூர் தமிழ்மணியைத் தட்டிக்கொடுத்து மெச்சினார். தாகூரிடம் அரிய கலைவாணரைப் போற்றும் பெருந்தன்மை யுண்டு. கலைப் பெருமை கிடையாது. அதனால் தமிழ்மொழியும் தன் உள்ளத்தைத் தெளிவாகப்பேசினன். பேச்சு, உலகமொழியான ஆங்கிலத்தில் நடந்தது. தமிழில் அதன் முக்கியபாகங்களைத் தருகிறேன்.

தாகூர்: உலகிற்குத் தமிழ் இருக்கிறது என்பதைத் தாங்கள் இன்று தெளிவாக்கினீர்கள்.

ஜெங்கின்ஸ்: கொலம்பஸால் அமெரிக்கா இருக்கிறது என்று விளங்கியது. மணியால் தமிழ்க்கலை ஒன்றுண்டு என்பது இன்று உலகிற்கெல்லாம் தெரிந்தது.

தமிழ் மணி: உலகிற்கெல்லாமா? நான் ஒருகூட்டத்திற்குத்தானே பேசினேன். இன்னும் என் குரல் உலகை எட்டவில்லை யென்றே நினைக்கிறேன்.

ஜெங்கின்ஸ்: மணி! தங்கள் குரல் தந்தி வேகத்தில் உலகெங்கும் பறந்தது. டெலிபோனில் ஐரோப்பாவை எட்டி விட்டது. இன்று அமெரிக்கப் பத்திரிகைகளெல்லாம் பெரிய எழுத்தில்,

தமிழ்க்கலை, உலகின் மிகப்பழைய கலை. அதைப் புதியமுறையில் நமக்குச் சொன்னவர் மணி என்னும் இனிய புலவர். அவர் பாட்டில் கலை மன்றத்தார் உள்ளம் ஆனந்தக்கடலாடியது, ... என்று விளம்பரப்படுத்தியிருக்கின்றன. தங்கள் படம் வராத பத்திரிகையில்லை.

மணி: அண்ணா, நான் இந்த விளம்பரத்தைக்கண்டு மகிழ்ச்சி கொள்ளவில்லை. நான் கொண்ட காரியம் முடிந்த பிறகே உலகிற்குத் தமிழ்க்கலை இன்ன தென்றே விளங்கும். காதால் கேட்டுமட்டும் காசியை அறிய முடியுமா? அல்லது புத்தகத்தில் படித்தாலும் படம் பார்த்தாலும் முடியுமா? நேருக்கு நேராக நமது ஆதர்சங்கள்நிறைவேறிக் கண்டாலே உண்மை விளங்கும்.

தாகூர்: இது முற்றிலும் உண்மை. எனது கவிதை கனவில் மிதந்த வரையில் உலகம் அதை அறியவில்லை. என்னை இறைவன் சோதித்தான். நான் அருமை பெருமை யென்று நினைத்ததையெல்லாம் அவன் வெடுக்கென்று பறித்துக் கொண்டு சோக இருளில் என்னுடன் கண்ணாமூச்சி விளையாடினன். அப்போதெல்லாம் நான் நோபல் வெகுமதி பெறுவேன், உலகம் என்னை அறியும் என்று நான் நினைக்கவேயில்லை. என் உள்ளார்ந்த வாழ்க்கையே கவிதையின் உருக்கொண்டது. என்னையே கவிதையாக்கி, ஆண்டவன் தன்னையே அதன் மணமாக்கினன் போலும்; அந்த மணம் வெள்ளைக்கார நாட்டில் வீசிய பிறகு என் பெயர் உலகிற்குத் தெரிந்தது. இருந்தும் எனது கவிதை சாந்திநிகேதனமாக உருக் கொண்டபிறகு தான் என் ஜீவனை உலகம் கண்ணாரக் கண்டது.

மணி: உண்மை, கவியரசரே, என் கனவுகளும் அச்சிலும் மேடையிலும் சிறகடித்துப் பறக்கின்

றன. எனினும் கனவில் ஒரு நினைவுண்டு. அந்த நினைவு கலைக் கோயிலாக உருக் கொண்டு காணவேண்டும். அப்போதே உலகம் என்னை அறியும், தமிழை அறியும்.

தாகூர்: மணியின் கலைக்கோயில் மணிக்கோயிலாக விளங்குக. ஆனால் தமிழ்க்கோயிலில் வங்கக் கவியான எனக்கும் இடமுண்டோ? அல்லது தமிழ் தனித்தனிமைத் தமிழாகவே இருக்குமோ?

மணி: கவிஞரே உலகில் தமிழ் தலை சிறந்த தொன்மொழி; இன்றும் உயிர்ப்பொலிவுடன் வளர்கிறது. வங்காளம் நேற்று எழுந்த குழவி. மூன்னூறாண்டுகளுக்கு முன் அதில் இலக்கியமில்லை. பங்கிமின் நாவல், மைகேல் மேகநாத காவியம், தங்கள் கவிதைகள் ஆகியவையே வங்கத்தின் இலக்கியச் செல்வம் ஆனால் அது இன்று உலகெங்கும் இசைச் சிறகடித்துப் பறக்கிறது. வங்காளிகளின் அயரா முயற்சியாலும் விளம்பரங்களாலும் தங்கள் தாய்மொழி இன்று உச்சநிலையில் விளங்குகிறது. உலகின் பழம்பெருந் தமிழுக்கும் அப்படிப்பட்ட பெருமை இன்று வரவேண்டும். ஆரியத்திற்கு முன்பே நமது நாட்டில் இலக்கியச் செழிப்புடன் விளங்கிய தமிழ் மொழியை இன்று விளக்குவைத்துத் தேடிப் பார்க்க வேண்டியிருக்கிறது. உலகம் அதை இருளில் ஆழ்த்தி விட்டது. தமிழில் அடங்கிய அரிய பொதுமறை நூல்கள் உலக ஒற்றுமைக்குச் சமய சஞ்சீவி போலுதவும். திருக்குறள், திருவாசகம், அருட்பா தாயுமானர் பாடல்கள் இவை உலகின் ஒப்பற்ற தெய்வ நிதிகளாகும். இவற்றை எல்லாமொழிகளிலும் மொழி பெயர்த் தளிக்க வேண்டும். முதலில் தமிழை உலகம் மதிக்க வேண்டும். தமிழர் கலைகளைப் போற்றவேண்டும். கலைக் கோயில் இந்த முயற்சியில் உலக பாஷைகளை யெல்லாம் வரவேற்கிறது. இந்தி, வங்கம், குஜராதி, மராதி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சீனம், ஜப்பானியம், பார்சி, அரபி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யம், இதாலியம், இஸ்பானியம் முதலிய எல்லாமொழிகளுக்கும் கலைக்கோயிலில் இடமுண்டு. ஆனால் எந்த மொழியும் எனது தாய்மொழியை விழுங்கவிடேன். எந்த மொழியையும் நான் வெறுக்கவில்லை. அறிவும் கலையும் எல்லாருக்கும் பொது. இதில் தமிழ்க்கலை தன்னை உலகிற்கே பொதுவாக்கி உலகக்கலைகளையும் தன்னுள் அடங்கி ஓங்கிவிளங்க விரும்புகிறது. எனது கலைக்கோயிலில் உலகக் கலைகளெல்லாம் கண் விருந்தளிக்கலாம். ஆனால் கோயிலின் மூர்த்தி தமிழ்க்கலையாகவேயிருக்கும். ஏனெனில் அதற்குள்ள அருளழகு வேறெந்த மொழிக்குமில்லை. உதாரணம் காட்டுகிறேன்.

தாகூர்: மணி, உனது தாய்மொழியில் அன்பு கொண்டிருப்பது சிறந்ததே. எனது வங்கத்தில் எனக்கு அளவுகடந்த அன்புண்டு. நான் ஒப்புயர்வற்ற தென்பேன். ஆனால் உலகம் அதை ஒப்பும் படியான கவிதைகள் உள்ளன. தமிழில் என்ன புதுமையுள்ளது? எல்லாம் பழையகாலக் கவிதைகள் தானே இருக்கின்றன?

மணி: ஐய, வங்கத்திற்குத் தாகூர் உண்டு. எங்களுக்குப் பாரதி யுண்டு. அங்கே பரமஹம்ஸர் உண்டு. அவர் பாடவில்லை. ஆனல் எங்கள் ராமலிங்கவள்ள லார் மிக உச்சமான துரிய ஜோதி பெற்ற தெய்வ மனிதர். அவர் பதினுயிரக் கணக்காகப் பாடியிருக்கிருர். அந்தப் பாட்டில் பத்து அறிந்தால் வேதம் உபநிடதம் கீதை எல் லாம் அதில் அடங்கிப்போகும். தாயுமானவரில் இருபது வரி களைப்படித்தாலும் போதும். மெய்ப் பொருள் விளங்கும். தாயுமானவருக்குச் சமான மான அருள்வாக்கு எந்த இலக் கியத்திலும் இல்லை. உதாரண மாகச்சில பாடல்களைப்பாடு கிறேன். கேளுங்கள்.

தமிழ்மணி தாயுமானரின் ஆனந் தக்களிப்பை யாழும் குழலும் பொருந்த இனிமையாகப்பாடி ஆங்கிலத்தில் பொருள் விளக் கினன். பிறகு அருட்பாவில் மகாதேவ மாலை,பிள்ளை பெருவிண் ணப்பம் முதலிய பாடல்களில் நாலைந்து சொல்லிப் பொருள் விளக்கினர். அப்பர் தேவாரம் பாடினன். தாகூர் வியந்து போனர்.

தாகூர்: ஆ, இவ்வளவு கருணையும் மல்கிய பாசுரங்களா தமிழில் உள்ளன!

தமிழ்மணி: இன்னும் மலைமலையா கக் குவிந்துள்ளன கவியரசே... கேளும் ஆண்டாள் பாசுரமும் நம்மாழ்வார் பாசுரமும். கம் பன் வாக்கைக்கேளும்.

தமிழ்மணி சுருதிகூட்டி மீண்டும் பாசுரங்ககளை அள்ளித் தேன்மாரி யாகப் பொழிந்தான். ஒரு வெள்ளைக் காரனுக்குப் பரவசம் வந்து விட்டது. மிஸ்டர் மணி, இவ்வளவு அரிய பாடல்களையெல் லாம் தமிழர் தங்களுக்கே வைத்து கொண்டிருப்பது சுயநலமல்லவா. நாளையே இவற்றை மொழி பெயர்க்க ஒரு புலவர் கூட்டத்தை நியமிக்க வேண்டும். நான் செலவை ஒத்துக்கொள்ளுகிறேன். இதோ இருபதினுயிரம் டாலருக் குச் செக்... என்று உடனே எழு திக் கொடுத்தான்.

தமிழ்மணி: வந்தனம் வள்ளலே. கலைக்கோயிலின் ஒரு பெரிய தொண்டு தமிழை உலகபாஷை களில் ஆக்கியளித்தலே. கலைக் கோயில் தீவிரமாகத் தொடங் யதும் இந்தப் பணிக்கு ஒரு புல வர் கூட்டம் ஏற்பாடு செய் வோம். தாங்கள் நன்கொடை யைப் பாங்கில் போட்டு வைப் பேன். மேற்படிப் புலவர் கூட் டம் வேலை தொடங்கும் போது தங்களுக்கும் அழைப்புவரும். ஜெங்கின்சுடன் தாங்கள் எமது கலைக்கோயில் வந்திருப்பீரா? தாங்கள் எங்கள் ஆங்கிலத்தைச் சரிபார்க்கலாம். தங்கள் பெய ரென்ன. தொழிலென்ன?

லூயி: என்பெயர் லூயி. நான் பிரான்ஸில் பிறந்து இங்கே குடியேறி அச்சுத்தொழில் நடத்துகிறேன் அவசியம் உங் கள் காரியத்தில் உதவிசெய் வேன்.

மணி: மிக்க நன்றி ஐயா... நீங்கள் கலைக்கோயில் அச்சகத்தில் சர் வாதிகாரம் செலுத்துங்கள்... உங்கள் பணத்திற்கு அச்சகம் ஏற்பாடு செய்து விடுகிறேன்... கலைக்கோயில் அச்சகத்திற்கு என்றே பணத்தை முடிக்து வைக்கிறேன்... விவேகானந்த ருக்குக் குட்வின் அகப்பட்டார் கலைக்கோயிலுக்குத் தாங்கள் வந்தீர்...வந்தனம்.

(தொடரும்)

புத்தக ஆராய்ச்சி

●

[திருக்குறள் நீதிக்கதைகள் : ஆசிரியர் : ம. சுந்தர சுப்ரமணியன் : அல்லயன்ஸ் வெளியீடு. விலை ரூ. 1—0—0]

குறள் தமிழ் மொழிக்குச் சிறப்புத் தரும் அரிய பொக்கிஷம், தமிழர்களுக்கு வழி காட்டும் ஒப்பற்ற நூல். உலகத்து பாஷைகளில் எல்லாம் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

குறளைத் தெளிவர்கச் சொல்லி, இளம் குழந்தைகளும் புரிந்து கொள்ளும்படியாக உரையும் குறிப்பும், உதாரணக் கதைகளும் தந்திருக்கிறார் ஆசியர். இம்மாதிரி நல்ல புத்தகங்களை தமிழ் மொழிக்கு அளிப்பது அல்லயன் ஸாரின் சிறப்பான தொண்டு. இதைப் பெரிதும் பாராட்டுகிறோம். பெரியவர்களும் படித்துப் பயன் பெறலாம்.

●

[மாய சந்யாசி : ரஷ்யக் கதை. மொழி பெயர்ப்பு : ரா. ஸ்ரீ. தேசிகன். பிரசுரம் : ஜோதி நிலயம் : சென்னை.]

இந்த ரஷ்யக் கதையை உணர்ச்சியோடு ஆசிரியர் மொழி பெயர்த்திருக்கிறார். மொழி பெயர்ப்பாசிரியரும் சொந்த நூல் எழுதுவதில் வல்லவராக இருந்தால் மொழி பெயர்ப்பும் பிரகாசிக்கும் என்பதற்கு இந்தப் புத்தகம் தக்க அத்தாட்சி. சர்வ தேசக்கதைகளைத் தேடிப் பிடிக்கும் ஜோதி நிலையத்தாரை ரசிகர்கள் நிச்சயம் தேடிப் போற்ற வேணும்.

கிடைக்கப் பெற்றோம் :—

[புதுமலர் நிலயம் : புதிய வெளியீடுகள்.

1 நாகம்மாள்: (நாவல்) ஆசிரியர் : ஆர். ஷண்முக சுந்தரம். விலை ரூ. 2—0—0.

●

2 பனித்துளி : (நாவல்) ஆசிரியர்: ஆர். ஷண்முகசுந்தரம். விலை ரூ. 1—4—0.

●

3 அருணோதயம் : (கவிதை) ஆசிரியர் : கம்பதாசன், விலை ரூ. 2–0–0.

●

4 அழகு ராணி : (சிறு கதைகள்) ஆசிரியர்: ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன். விலை ரூ. 2—0—0.

●

5 ஒளி உதயம் : (சிறு கதைகள்) ஆசிரியர் : கு. ப. சேது அம்மாள். விலை ரூ. 2—0—0.

●

6 யுத்தகால இலக்கியம்: ஆசிரியர்: "சுகி" விலை ரூ. 1—8—0.

(மேலே கண்ட ஆறு புத்தகங்களின் விற்பனை உரிமையாளர் : காசிநாத் & கம்பேனி: பெரியகடை வீதி, கோயமுத்தூர்.}

கிராமியக் கதை:

கண்ணம்மா

[கே. விஜயராகவன்]

அந்தப் பட்டிக் காட்டின் எட்டு மைல் சுற்றளவுக்கு அந்த ஊர் ஆதி சிவன் கோவில் பிரசித்தி பெற்றது. கோவில் மிகவும் பழமையானது. கோவிலும் கோபுரமும் கோவில் மதில் சுவர்களும் வானளாவி இருந்தது. அக்காலத்துச்சிற்பிகள் திறம்படச் சமைத்த சிற்பங்கள் கோவிலை அலங்கரித்தன. முக்கியமாக நடராஜப் பெருமான் கனக சபை மண்டபத்தைப் பார்க்கப்பதினாயிரம் கண்கள் வேண்டும். மண்டபத்தின் கற்றூண்கள் ஒவ்வொன்றிலும் ருத்திர மூர்த்தியின் பலவித நடனங்கள் சித்திரிக்கப் பட்டிருந்தன.

இந்த அழகிய ஆலயத்தின் சுற்றுப்புறம் தோப்புத் துரவுகளால் சூழப்பெற்று கண்ணுக்கும் மனதுக்கும் இன்பத்தைத் தரக்கூடியதாக இருந்தது.

அருணாசல வாத்தியார் அந்த ஊரில் பிரசித்தி பெற்றவர். அவருக்கு வயது எழுபதுக்குக் குறையாது. அவர் தன் ஒரே பேத்தியான கண்ணம்மாளோடு அங்கு வசித்து வந்தார். அருணாசல வாத்தியார் தமிழிலும் பரத நாட்டியக் கலையிலும் நல்ல பாண்டித்யமும் பயிற்சியும் பெற்றவர். ஆனால் அப்போது பரத நாட்டியக் கலையை கலை உணர்ச்சியோடு ரசிக்கக் கூடியவராக ஒருவரும் இல்லை.

அவருக்குத் தனிப்புகழும் மரியாதையும் அந்தஊரில் உண்டு. ஆகையால் அவர் யாரைப் பற்றியும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. தன் பேத்தியை தினந்தோறும் கனக சபைக்கு இட்டுச் சென்று நடேசர் சன்னதியில் பரதநாட்டியம் கற்றுக்கொடுத்து வந்தார். கண்ணம்மாளும் பாட்ட

னுடைய பாண்டித்யம் வீணுகப் போக வேண்டாமே என்று அவர் குறிப்பு அறிந்து வித்தையை லாவ கமாகக் கற்று வந்தாள். அவள்

இளமையும் எழிலும் நிரம்பிய யுவதி. அவள் ஆடரங்கிற்கு வரும் போது நாட்டியத்துக்கு ஏற்பத்தன்னை அலங்காரம் செய்து கொண்டு வருவாள். அந்த அலங்காரங்கள் அவள் அழகுக்கு மேலும் அழகு செய்வனவாக இருக்கும்.

அருணுசல வாத்தியார் பண்ணிசைத்துப் பாடுவார். அவள் அதில் லயித்து அபிநயம் பிடித்து ஆடுவாள். பாட்டனரும் பேத்தியும் உலகத்தை மறந்து கலையின்பத்தை அனுபவிப்பார்கள். தன் கலைச் செல்வத்தை பேத்தி பூரணமாகக் கற்றுக் கொள்வதைக் காணப் பரவசப்படுவார்.

கிராமத்தில் பெரும் பாலும் விவசாயிகள்;. உழைப்பாளிகள் இவர்களுடைய ஆடரங்கை அனுபவிக்க அவர்களுக்கு நேரமேது. பைத்தியங்கள் என்று சொல்லி விட்டுப் போவார்கள். அவர்களுக்கு இதையெல்லாம் அனுபவிக்க நேரமேது. விஷேச காலங்களில் பொழுது போக்குக்காக கொஞ்ச நேரம் வேடிக்கையாகப் பார்க்க வருவார்கள். கலையின் நுட்பத்தை அறிந்து போற்றும் பண்பு அவர்களுக்கு இல்லை.

தாலூகா போர்டு காலம் அது. அந்தப் பொட்டல் காட்டுப் பள்ளிக்கூடத்துக்கு என்னை மாற்றி விட்டார்கள். தாலூகா போர்டு பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும் ஆசிரியர்கள் அந்த ஊரை அந்தமான் தீவு என்று சொல்லுவார்கள். எட்டு மைலுக்கு நல்ல ரஸ்தா ஒன்றும் கிடையாது. நல்ல போக்கு வரவும் இல்லை. பொழுது போக்க வசதியும் கிடையாது. நாளெல்லாம் பிள்ளைகளோடு பேசிப் பேசி அலுத்துப் போகும். ஒரே ஆசிரியர் முப்பது நாற்பது பிள்ளைகள். ஐந்து வகுப்புகள். கட்டி அழ வேண்டும். மேலும் நான் பிரமச்சாரி. வேளா வேளைக்குச் சமைத்துச் சாப்பிட வேண்டும். சோம்பேறித் தனத்தால் சில நாள் பட்டினி கிடப்பதும் உண்டு. இதெல்லாம் நான் அந்தப் பட்டிக் காட்டுக்குப் போன புதிதில்.

ஒரு நாள் பொழுது போக வில்லை. அன்று விடுமுறையும் கூட. ஏதாவது புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கலாமென்ருல் அதற்கும் மனது செல்லவில்லை. வெளியில் சென்று சற்று உலாவி வருவோமென்று புறப்பட்டேன். சிவன் கோவில் பக்கமாகப் போய் தோப்புக்குள் பிரவேசித்

தேன். தோப்பின் குளுமை என்னை இன்புறச் செய்தது. அதோடு இனிமையான சாரீரத்தில் முத்துத் தாண்டவர் கீர்த்தனையை யாரோ பாடுவது போலவும், அதையொட்டி தாளத்தோடு சலங்கையின் நாதமும் கலந்து ஆடுவதும் போல என் காதில் லேசாகப் பட்டது. என் மனதில் உற்சாகம் பிறந்தது. விடுவிடென்று கோவிலுக்குள் பிரவேசித்தேன். கனக சபைக்கு வர அதிக நேரமாக வில்லை. அங்கு பார்த்த காட்சி என்னைப் பிரமிக்கச் செய்தது. நாட்டியமும் அதற்கேற்ற அபிநயமும் அடடா! நான் அதுவரை அந்த மாதிரி அற்புதத்தைப் பார்த்த தில்லை. ரொம்ப நேரம் அம்படியே லயித்துப் போய் விட்டேன். நாட்டியம் முடியும் தருவாயில்த் தான் என் ஞாபகம் வந்தது. என்னை அறியாமல் சபாஷ்! என்று சொல்லி விட்டேன். அப்போதுதான் பாட்டனும் பேத்தியும் ஏக காலத்தில் என்னைக் கவனித்தார்கள். என்னை அவர்களுக்குத் தெரியாது. ஊருக்குப் புதியவன். இருந்தாலும் அவர்களுடைய முகத்தில் அதிருப்திக்கான குறிகள் ஒன்றும் தென்படவில்லை. நான் அருகில் சென்றேன். யார்? என்னும் கேள்விக்குறியோடு என்னை நோக்கினார்கள். "நான் தாலூக்கா" என்று இரண்டே வார்த்தைகளில் சொன்னதும் தெரிந்து கொண்டார்கள்.

"ஊருக்கே புதிது" என்றார் பெரியவர்.

"ஆம்" என்றேன்.

"இவள் என் பேத்தி... கண்ணம்மாள்"

தலையசைத்தேன்.

"நானும் வாத்தியாராக இருந்தவன் தான். ஆனல் கர்நாடகம். பரத நாட்டியத்தில் பித்து. எனக்குத் தெரிந்ததை இவளுக்குக் கற்றுத் தருகிறேன்."

"நல்ல காரியம் செய்கிறீர்கள். உங்களால், மறைந்த கலை உயிர் பெறுகிறது" என்றேன்.

கண்ணம்மாள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களுக்குத் தகுந்த பெயர். அழகு அதற்கு ஏற்ற

அலங்காரம். யாவரையும்வசீகரிக்கச் செய்யும் தோற்றம்.

நாள் தவறினலும் மாலை நேரத்தில் நான் அங்கு செல்லத் தவறுவதில்லை. பாட்டனுக்கும் பேத்

திக்கும் நான் ஒருவனாவது அவர்களுடைய கலைத்திறத்தை அறிந்து ரசிக்க வருகிறேனே என்ற திருப்தி. கண்ணம்மாள் என் உள்ளத்தையே கொள்ளை கொண்டு என்னையும் ஆட்கொண்டு விட்டாள். நாட்கள் பலவாகியும் அவளோடு ஒரு நாளாவது ஒரு வார்த்தை பேசியதில்லை. பேச வேண்டும் என்கிற ஆசை. எங்கள் கண் அவ்வப்போது சந்திக்கும். வெட்கத்தால் பார்வை கீழேசென்றுவிடும். அவளுக்கும் என்னை அடிக்கடி பார்க்கத் தோன்றும் போல இருந்தது.

இடையில் ஒரு நாள் சங்கக் கூட்டத்துக்குப்போய் விட்டேன். போக எனக்கு மனமில்லைத்தான். என்ன செய்வது. நிர்ப்பந்தத்தை ஓட்டிச் செல்லவேண்டி நேர்ந்தது.

மறுநாள் ஆடரங்கிற்குச் சென்றபோது ஏக்கமும் வருத்தமும் குடிகொண்டிருந்த தொரு முகத்தைக் கண்டேன். அதிலிருந்து அவள் உள்ளத்தைக் கண்டுகொண்டேன். அன்று நடந்த பரத நாட்டியத்தில் அவளுடைய ஏக்கம் தான் பிரதிபலித்தது. அன்று அவளைத் தனிமையில் கண்டு ஒரு வார்த்தையாவது பேசவேண்டும் என்று என் மனதில் ஆவல் எழுந்தது. அதற்கு ஏற்றாற் போல அருணாசல வாத்தியாரும் ஏதோ காரியமாக வெளியில் அவசரமாகக் கிளம்பினார்.

திடீரென்று என்னால் பேச முடியவில்லை. என்ன பேசுவது! கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. இருவர் மனதிலும் பரபரப்பு குடிகொண்டிருந்தது.

"தங்களுடைய நாட்டியம்..."

"தங்களைக் கவர்ந்து விட்டது......"

"சந்தேகமில்லை"

"அது தான் தெரிகிறதே"

"தாங்கள் கவிதா உள்ளம்..."

"இல்லாவிட்டால் எப்படி ரசிக்க முடியும்.

"சாதுர்யமாகப் பேசுகிறீர்களே! நாட்டியக் கலையோடு தர்க்க சாஸ்திரமும் அறிவீர்கள் போலும்!"

"தங்களைப் போன்ற ரசிகர்களைக் காணும் போது யாவும் வந்துவிடுகிறது"

"தங்கள் பரத நாட்டியத்தைப் பற்றிச் சொல்ல வந்தேன்"

"எப்படியிருக்கிறது"

"முதல்தரமாகப் பரவசம் கொள்ளும்படியாக இருக்கிறது.

"தங்கள் சாயல்......"

"மயிலைப் போல இருக்கிறதோ!"

"அது மட்டுமில்லை - குரல்..."

"குயிலைப் பழிக்கிறதாக்கும்.."

"எது! என்னைப் பேச விடமாட்டீர்கள் போல இருக்கிறதே. உங்கள் பாட்டன் எல்லாக்கலைகளிலும் நல்ல பயிற்சி..."

"கொடுத்திருக்கிறார்"

"அவர் மகா நிபுணர். இல்லாவிட்டால்......"

"உங்களை என் இங்கு வரச் செய்கிறது"

"தாங்கள் என்னை......"

"கொள்ளை கொண்டு விட்டேன்"

"பேசும் பொற் சித்திரம் என்ற சொல்லுக்குத் தாங்களே உவமை"

"தாங்கள் மகா ரசிகர்"

வீணையின் நாதம் கலந்த அவளுடைய குரலின் இனிமையால் என் உச்சி குளிர்ந்தது.

மெதுவாகப் பேசிக் கொண்டே அருகே யிருந்த தடாகக் கரையை அடைந்தோம். மலர்கள் எங்களை வரவேற்றன.

என்னவோ நினைத்துக் கொண்டு "தாங்கள்..." என்று ஆரம்பித்தேன்.

உடனே, "போதும், போதும். இந்த மரியாதை கிரியாதை எல்லாம் கட்டி வச்சிட்டு சாதரணமா எப்பவும் பேசற மாதிரி பேசுங்கோ" என்றாள்.

"இப்ப நானும் அதைத் தானே நெனச்சேன். அதுக்குள்ளே நீயே அதைச் சொல்லீட்டே" என்றேன் சிரித்துக் கொண்டே.

அவளும் சிரித்தபடி என் அருகே உட்கார்ந்தாள்! 'கலகல' வென்ற மகிழ்ச்சிஅலை கோயிலின் நாலாபுரத்திலும் பரவியது.

பெரியவரும் வந்து சேர்ந்தார். எங்கள் மகிழ்ச்சிப் பெருக்கு அவரை மெய் மறக்கச் செய்தது. நாட்டியமே நடை பெறுவது போல் ஆர்வத்துடன் பார்த்துப் பூரிப்படைந்தார். அந்த வழியாக வீட்டுக்குச் செல்வோருக்கு அன்று ஒரு 'புதுக் காட்சி' தென்பட்டிருக்க வேண்டும். அதிசயத்தோடு எங்களைப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? இரண்டோடு இது ஒன்று மூன்று, என்று எண்ணிக் கொண்டு போயிருப்பார்கள்.

காக்கை உலகம்

[டி. சி. ராமசாமி]

மாலை வேளை. வானத்திலும் வையத்திலும் வழிந்தோடிக் கொண்டிருக்கும் அழகைப் பருகிய வண்ணம் என் தோட்டத்தை நோக்கி மெதுவாகச் சென்று கொண்டிருந்தேன். வழியிலுள்ள பிள்ளையார் கோயில் வேப்பமரத்துக் கிளையொன்றில் அமர்ந்திருந்த ஒண்டிக் காகத்தினிடம் என் கவனம் சென்றது. அந்தக் காகம் என்ன செய்யப் போகிறது என்பதைக் கவனிக்க வேண்டும் என்று தோன்றிற்று. மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டு மேலே அண்ணாந்து பார்த்தேன். கிழக்குத் திக்கில் ஊருக்கு அருகிலுள்ள மயானத்தைப் பார்த்தது அந்தக் காகம்.

அங்கே சில கழுகுகள் உயரத்தில் 'கிரிச்' சென்ற சப்தத்துடன் வட்டமிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், 'ஏதோ பிணம் கிடக்க வேண்டும்' என்று அறிந்து கொண்டது. 'இன்று பெரிய வேட்டைதான்' என்று உள்ளூர மகிழ்ச்சி அடைந்தது. அடுத்த கணம், இந்த வலிய கழுகு கூட்டத்திடையில் எப்படி இரைச்சியை எடுக்க முடியும் என்ற பீதியும் திகிலும் அதிகரித்தது.

அதே சமயத்தில், சற்று தூரத்தில் மரத்தை நோக்கி இன்னொரு காகம் வருவது தெரிந்தது. அக்காகத்தின் உதவியால் தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று அதனை அன்புடன் வரவேற்றது. மயானத்தையும் கழுகுக் கூட்டத்தையும் அதற்குச் சுட்டிக் காட்டி, கிடைக்கும் இரைச்சியில் சரி பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று முடிவு செய்தன. எப்படி முற்றுகை போடுவது என்பதைப் பற்றித் தீவிரமாக ஆலோசனை செய்தன.

இரண்டும் மயானத்தை நோக்கிப் பறந்தன. மயானத்தை நெருங்கியதும் தங்கள் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, அங்குள்ள நிலைமையைப் பரிசீலனை செய்யத் தொடங்கின. அப்பொழுது சில கழுகுகள் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தன. இன்னும் சில கழுகுகள் பிணத்தை விட்டு சற்று தூரத்தில் இரைச்சித் துண்டுகளைக் கொத்தி தின்று கொண்டிருந்தன. மற்றும் சில கழுகுகள் பிணத்தைக் கொத்திக் கொண்டிருந்தன. எதிரிகளின் படை இவ்வளவு ஜரூராக வேலை செய்யும் பொழுது, "வலிமையால் வெல்ல முடியாது, தந்திரத்தில் தான் வெல்ல முடியும்" என்று இரண்டு காகங்களுக்கும் புலப்பட்டிருக்க வேண்டும்.

உடனே, ஒரு காகம் மின்னல் வேகத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் கழுகுகளின் சக்கர வியூகத்தைப் பிளந்து சென்றது. எதிர்பாராது திடீரென்று நுழைந்த எதிரியைக் கையுங் களவுமாக பிடிப்பதற்காக பாராக் கழுகுகள் ஒன்று சேர்ந்து துரத்த ஆரம்பித்தன.

இது தான் தக்க சமயமென்று மற்றொரு காகம் 'ஜிவ்' வென்று கீழே இறங்கி, பிணத்தை கொத்தி இரைச்சியைக் கௌவிக் கொண்டு 'விர்' ரென்று மரத்தை நோக்கிப் பறந்தது. அதற்குள், பாராக் கழுகுகளிடம் சிக்கிய காகம்

'வெற்றிகரமாகப் பின்வாங்கி' மரத்தை அடைந்தது.

கிடைத்த இரைச்சியை இரண்டும் பங்கு போட ஆரம்பித்தன. இரைச்சியைக் கொண்டு வந்த காகம், 'என்னுடைய உதவி இல்லாவிடில் இப்பொழுது இரைச்சியைப் பங்கு போட முடியுமா? ஆகவே, எனக்குத்தான் அதிகப் பங்கு வேண்டும்' என்றது.

'வெற்றிகரமாகப் பின்வாங்கிய' காகம், "என்னுடைய உதவியில்லாவிடில் இரைச்சி கிடைக்க வழியே கிடையாது. ஆகவே, எனக்குத்தான் அதிகப் பங்கு வேண்டும்" என்றது.

வார்த்தைகள் முற்றி, இரண்டு காகங்களும் சண்டை இட்டுக் கொண்டிருக்கும் பொழுது, வேறு ஒரு காகம் கிளையிலிருந்த இரைச்சியைக் கௌவிக்கொண்டு வெகுவேகமாகப்பறந்தோடிற்று. சண்டையை விட்டு, ஓடும் காகத்தை பிடிக்க இரண்டு காகங்களும் வேகமாய்ப் பறந்தன. ஆனால், அது இவைகளின் பிடிக்கு அகப்படாமல் வெகு தூரத்திற்கு தூரம் சென்று விட்டது.

"மனித குலத்தில் தான் போட்டி, பொறாமை, வஞ்சகம் ஏமாற்றம் முதலிய அசுர குணங்கள் தலை விரித்து ஆடுகிறது என்றால், இயற்கையிலும் அப்படித் தானே" என்று வியந்த வண்ணம், இருள் சூழ ஆரம்பிக்கவே, தோட்டத்திற்குப் போகாமல் வீடு திரும்பினேன்.

தாமரை பூத்த தடாகம்

அருமை நண்பனுக்கு,

'அத்தி பூப்பது போல' என்று சொல்கிறார்களே அந்த மாதிரி என்றோ ஒரு நாள் வருகிறாய். வந்தவுடன் 'மின் வெட்டுப் போல' உடனே புறப்பட்டும் விடுகிறாய்! மல்லி பூப்பது போல்— அல்ல அல்ல, மல்லிகை கூட காலா காலத்தில் தான் பூக்கிறது. நம்ம ஊர் தங்க அரளி பூப்பது போல் நித்த நித்தம் நீ வந்தால் என்ன? வந்து எனக்கு ஆனந்தந் – தந்தால் என்ன? ஆனந்தம் என்றால் எப்பேர்ப்பட்ட ஆனந்தம்? பழைய கவிகள் சொல்கிறார்களே, சந்திரனைக்கண்ட கடல் மாதிரியும் சூரியனைக் கண்ட தாமரை போலவும் என்று. அப்படிப் பழைய கதைக்குப் போகிற சுபாவம் எனக்கு இல்லை. காலைப் போதும், மாலைப் போதும் வராவிட்டால் கடலுக்கும் தாமரைக்கும் களிப்பு இல்லை! ஆனால், எனக்கு மட்டும் நீ பக்கத்தில் இருந்தால் போதும். அதுவே தனியான ஆனந்தம். இராப் பகல் எந்நேரமும் எனது இதயம் மலர்ந்திருக்கும்.

நீ வருமுன்பு என்னென்னவோ யோசித்து வைத்திருப்பேன். நாளெலாம் பேச்சிலே கழித்து விட வேணும் என்று பெரிய பெரிய திட்டங்களுடன் இருப்பேன். ஆனால், உன்னைக் கண்டவுடன் திட்டங்களெல்லாம் மறைந்து விடும் மாயந்தான் என்னவோ? உனக்கு ஞாபகம் இருக்கிறதா? சதா சர்வ காலமும் என்னுடன் 'பேசாமல் பேசி' வருகிற பொருள் ஒன்று உண்டு என்பது தெரியும் அல்லவா? விளையாட்டுக்காக "அது எந்தத் தனம்" என்று நீ கேட்பாய். என் வாழ்வை மலர்வித்த பொக்கிஷம் – அந்தத் தனம் தான் – என் வாழ்க்கைத் தேவியோ என்று நீ நினைக்கலாம். ஆமாம், இது கூட ஒரு ஒப்பற்ற தனம் தான்— அது என்ன தெரியுமா? உனக்கும் தெரிந்திருக்க வேணுமே – அந்தத் தாமரைத் தடாகத்தை:

நம்ம ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறதே தாமரைத் தடாகம்— உன்னையும் என்னையும் மோனக் கனவிலே நாள்க் கணக்காய் மூழ்கச் செய்திருக்கிறதே தாமரைத் தடாகம்— அதை மறந்து விட முடியுமா?

என் தனிமையில் மகிழ்ச்சியை நிரப்புவது அழகு அலைகளைச் சிந்தும் தாமரை மொக்குகள் தான். அடுத்த கணம் வாடிப் போனாலும் – அழிந்து போனாலும் – அதை ஒரு நிமிஷமும் எண்ணாமல் – இந்தக் கணம் கலகலவென்று களிதுலங்க உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தாமரை மலர் வாழ்க்கைக்கு நல்ல வழி காட்டி என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. என் வாழ்வில் பல அற்புதத் தடாகங்கள் நிறைந்திருக்கின்றன. அதில் இந்தத் தாமரை தடாகமும் ஒன்று... என்ன சிரிக்கிறாயா? சிரியப்பா: 'சிரிப்பது உடம்புக்கு நல்லது' என்று ஒரு பெரியவர் சொல்லி இருக்கிறார்.........

உனது

எஸ். ரங்கசாமி.

வாழ்க்கைக் காட்சி:

அமர நினைவு

(கோமதி-சுவாமிநாதன்)

கடிகாரத்தில் பனிரண்டு தடவை மணி விடாது அடித்ததினால் ஏற்பட்ட ஓசை என்னை ஓர் பிரமையிலிருந்து விடுவித்தது. எவ்வளவு நாழிகையாக, நாற்காலியில் நான் அந்தமாதிரி மோன நிலையில் உட்கார்ந்திருந்தேனோ! எனக்கே தெரியாது. கை கால்களை நீட்டி, சோம்பல் முறித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். கடிகாரம் மாத்திரம், தன்னிடம் சோம்பலே இல்லை என்று பறை அறிவிப்பதுபோல் டக்டக் என்று அடித்துக் கொண்டிருந்தது. ஓர் பழைய காலத்திய அரிக்கன் லைட், அரைக்கண் திறந்து தூங்குவது போல், மேஜைமீது மினுக் மினுக் கென்று எரிந்து கொண்டிருந்தது.

நான் தூங்கிப் போய் விடவில்லை. ஆனால் என் சிந்தனைப் புயல் நொந்து போயிருந்த என் மனப்படகை பிரமை என்னும் கடலில் ஆழத்தில் விட்டிருந்தது. இப்போது சற்று புயல் ஓய்ந்திருந்தது. வயிறு பசித்தது போலிருந்தது. ஒரு போலி உணர்ச்சி தான். மனப்பசி எப்போதும் உள்ள என்னை, இதர பசிகள் அதிகமாகப் பாதிப்பதில்லை. எழுந்திருந்து போய் ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலம் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் நாற்காலியில் வந்து உட்கார்ந்தேன். என் கை என்னை அறியாமலேயே விளக்கைப் பெரிதாகத் தூண்டியது.

என் மேஜைமீது, அன்று மாலை தபாலில் வந்த "கலாதேவி" யின் சமீபத்திய இதழ் திறந்து கிடந்தது. என்ன ஆச்சர்யம்! நான் எந்தப் பக்கத்தை விரித்து வைத்து விட்டு, சிந்தனைப் புயலில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தேனோ அந்தப் பக்கம், அதிலும் அந்தப் பக்கத்திலுள்ள ஓர் சித்திரம் என்னையே கேலியாய்ப் பார்ப்பது போலிருந்தது. விறுவிறுவென்று பத்திரிகையை மூடினேன்; அது காற்றில் பறந்து போகாமலிருக்க ஒரு நூறு தோலா படிக்கல்லை அதன்மேல் வைத்தேன். அந்த க்ஷணத்தில் என் ஹிருதயத்தை நூறு டன் பாரமுள்ள ஓர் அமானுஷ்ய சக்தி அழுத்துவது போலிருந்தது.

அந்த மலை தேசத்து தபாலாபீசில் அரசன் முதல் ஆண்டிவரை (மந்திரி ஒருவனைத்தவிர) உள்ள உத்யோகங்களை நான் ஒருவனே தான் நிர்வகித்துக் கொண்டிருந்தேன். அந்த ஊர் வாசிகள் என்னைச் சுட்டிக் காட்டி என் காதில் விழும்படி 'போஸ்ட் மாஸ்டர்' என்று சொல்லும்போது அந்த வார்த்தையில் ஓர் பதவியின் மதிப்பும் அதிகாரத்தின் அறிகுறியும்

த்வனிப்பதாகவே எனக்குத் தோன்றும். எனக்கு உள்ளூர கொஞ்சம் பெருமையாகக்கூட இருக்கும். என் மதி மந்திரியாக விளங்கும் தபால்கார முனிசாமி காலையில் காக்ஷியளித்து தபாலுடன் உடனே போய் விடுவான். மாலையில் திரும்பி, வந்திருக்கும் தபால் பையை உடைத்து விட்டு, போக வேண்டிய பையைக் கட்டிப்போட்டு விட்டு அந்தர்த்யானமாகி விடுவான். எங்கள் இரண்டு பேருக்கும் ஆபீஸில் சொல்லிக் கொள்ளும்படியாக அவ்வளவு அதிக வேலையில்லை. நான்கு நாட்களில் ஒரு நாள் யாருக்காவது ஓர் தந்தி வரும். பத்து நாட்களில் ஒரு நாள் யாருக்காவது மணியார்டர் வரும், அவ்வளவுதான். அந்த ஊர் கொஞ்சம் சுகவாசத்திற்கு லாயக்கென்று கருதி எப்போதாவது சில குடும்பங்கள் வந்து தங்கிப் போகும். அதற்காகவேதான் ஆபீஸ் ஏற்படுத்தப் பட்டிருந்தது.

அந்த ஊருக்கு மாற்றுதலாகி வந்த சில மாதங்கள் வரை நான் பைத்தியம் பிடித்த மாதிரியே இருந்தேன். நான் ஒண்டிக் கட்டைதான். நாலு நண்பர்கள் மத்தியிலும், நகைப்பும் கேலியும் சூழ்ந்த இடங்களிலும் மதுவுண்ட வண்டு போலிருந்த எனக்கு புது இடம் தனிமையின் ஏக்கத்தையும் துன்பத்தையும் மிகவும் பெரிதாக்கிக் காண்பித்தது. 'வாழ்க்கை என்னும் பாதை ரோஜாப் பூக்கள் மாத்திரம் நிறைந்ததல்ல. முள்ளும் கலந்து தானிருக்கிறது' என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆரம்பத்தில் என் வாழ்க்கைப் பாதையில் முள்ளே கிடையாது என்றுதான் நம்பியிருந்தேன். ஆனால் நம்பிக்கை என்ற மொட்டு உண்மை என்ற புஷ்பமாக மலர்ந்தபோது என் வாழ்க்கைப் பாதையில் முள்ளைத் தவிர வேறொன்றும் இல்லை என்று தெரிந்து கொண்டேன்.

நாளடைவில் என் தனிமையில் ஓர் இன்பத்தைக் காண ஆரம்பித்தேன். அந்த இன்பம் என் கரடு முரடான வாழ்க்கைப் பாதையில் சிதறியிருந்த முட்களை விலக்கி எனக்கு தெளிவான வழியைக் காண்பிக்க ஏதுவாயிருந்தது. அந்த ஊரில் என்னுடன் பழக சரியான சினேகிதர்கள் இல்லை. என் நேரத்தை அபகரிக்க ஆபீஸ் வேலையுமில்லை. இந்த சமயத்தில் தான் என் கற்பனை சக்தி ஓர் ஆப்த நண்பனை எனக்கு அபயமளித்தது. நாம் என்ன பேசினாலும் மறுத்துப் பேசாத ஓர் ஆசாமியைக் கண்டால் நமக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது. அதே மாதிரி என் கற்பனை நான் நினைத்ததுக் கெல்லாம் போய் மனதில் விதவிதமான சித்திரங்களை எழுப்பியது. என் கற்பனைச் சித்திரங்களுக்கு போதிய வர்ணமிட்டு, மெருகிட்டு சிறு கதைகளாக்கி பத்திரிகைகளுக்கு அனுப்ப ஆரம்பித்தேன். அவைகள் பிரசுரம் ஆக ஆக என் உற்சாகம் அளவு கடந்ததாகி விட்டது. ஆபீஸில் தான் எனக்கு வாசம். ஐந்து மணிக்கு முனிசாமி வெளியே போய்விடுவான். சொந்தத்தில் தயார் செய்த காப்பியை சாப்பிட்டு விட்டு அந்த ஸ்டவ்விலேயே இரவு ஆகாரத்தை தயார் செய்து விட்டு என் நாற்காலியில் உட்கார்ந்தால், மணிக் கணக்கில் எழுத ஆரம்பித்து விடுவேன்.

சில நாட்களில் என் ஆப்த நண்பராகிய 'கற்பனை', 'அனுபவம்' என்றே புதிய நண்பர் ஒருவரை அறிமுகப்படுத்தி விட்டு சற்று

பின்னணியில் நின்றுகொண்டார். ஸ்ரீமான் அனுபவம் வெகு சீக்கிரத்திலேயே என் அன்பைக் கவர்ந்து விட்டார். நான் தீட்டிய அனுபவ சித்திரங்கள் கற்பனைச் சித்திரங்களைவிட நல்ல வரவேற்பு அடைந்தன. வாழ்க்கையில் நான் அடைந்த இன்ப துன்பங்கள், அனுபவித்த சுக துக்கங்கள், அல்லல்பட்ட சமய சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் காகிதப் படுதாவில் தீட்ட ஆரம்பித்தபோது அதில் சோக வர்ணமே மேலோங்கி நின்றது. என் நிஜ வாழ்க்கையைத்தானே அவைகள் பிரதி பலித்தன! சிறு கதை என்ற தலைப்பின் கீழ் என் மனதில், வெகு ஆழத்தில் குமுறிக் கொண்டிருந்த ஏக்கம் என்னும் காட்டாற்று வெள்ளத்தை திறந்துவிட ஆரம்பித்தேன். அதில் எனக்கு ஓர் நிம்மதி! ஆனந்தம்!

மேஜையின் மீது இருந்த சமீபத்திய 'கலாதேவி' இதழில் நான் எழுதியிருந்த "ஏக்கம்" என்ற சிறு கதை வெளியிடப் பட்டிருந்தது. என் வாழ்க்கை லக்ஷியத்தையே, தடுமாறச் செய்து, தலைகுப்புற விழச் செய்த என் காதல் ஏமாற்றத்தை அக்கதையில் புகுத்தியிருந்தேன். ஒவ்வோர் வார்த்தையும் என் சொந்த அனுபவத்தின் எதிரொலிதான். அதுவரை அந்தப் பத்திரிகையில், கதைகளுக்கோ, கட்டுரைகளுக்கோ, சித்திரங்கள் சேர்ப்பது கிடையாது. ஆனால், இந்த இதழில், அதுவும் என் கதையில் நான் கதாநாயகியாக வர்ணித்திருக்கும் பெண்மணியாக ஓர் சித்திரத்தை பத்திரிகை ஓவியர் தீட்டியிருந்தார். விதி வசத்தால், நான் யாரை மனதில் வைத்துக்கொண்டு எழுதினேனோ அவளின் போட்டோ மாதிரி அந்த சித்திரம் அமைந்திருந்தது. அது ஓர் விவரிக்க முடியாத அசாதாரண ஒற்றுமை. அதைப் பார்த்துக் கொண்டேதான் நான் பிரமையில் ஆழ்ந்து விட்டேன். அது என் ஆறாத மனப்புண்ணில் கூரிய வாளைச் சொருகி விட்டிருந்தது.

கலாசாலையில் முதல் இரண்டு வருஷங்களையும் புஸ்தக புழுவாகவே கழித்தேன். மூன்றாவது வருஷ ஆரம்பத்திலேயே எனக்கும், புஸ்தகங்களுக்கும் இடையே தவிர்க்க முடியாத ஓர் சக்தியாக வந்து சேர்ந்தாள் மிஸ் சசிகலா. சசிகலா அப்போதுதான் முதல் வருஷ வகுப்பில் சேர்ந்திருந்தாள் பெயருக் கேற்றாப்போல், பூர்ண சந்திரனின் சோபையைப்போல் அவள் அழகு பிரகாசித்தது. மாணவிகளின் சார்பாக அவள், கலாசாலை விஞ்ஞான கழகத்திற்கு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாள். அப்போதுதான் அவளை நான் முதன் முதலாக கழக காரியதரிசி என்ற ஹோதாவில் சந்திக்க நேர்ந்தது. அழகி என்றால் அவள்தான். அவள் வசீகரமும் மோகனப் புன்னகையும் என் தலையைக் கிறுக்கியதில் வியப்பொன்றுமில்லை. விஞ்ஞான கழகத்தை மனதாற வாழ்த்தினேன். அது என் விஞ்ஞான ஞானத்தை விஸ்தரிக்காதுபோனாலும் எனக்கு அது ஓர் காதல் சோலையை அளித்தது. மேலும் மற்றவர்களுக்கு சாதாரணமாக கிடைக்கக்கூடாத ஓர் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தை எனக்கு அது அளித்தது. புஸ்தகங்களைக் கட்டி தூர வைத்தேன். சதா கழக நினைவுதான். சதா சசிகலாவுடன் கழகமென்ற போலிப் போர்வையின்கீழ் சந்திப்புத்தான். வகுப்பில் என்னால் ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது. அவள் அழகை அள்ளிப்

பருக வேண்டுமென்ற அடக்க முடியாததோர் அவா. மறுமடியும் முதல் வருஷத்திய வகுப்பில் சேர்ந்து படிக்கலாமா வென்ற ஆசை. அவள் லாவண்யம் என்ற லாகிரியில் நான் லயித்து விட்டேன். எல்லோரும் என்னை விஞ்ஞானத்திற்காக உழைக்கிறான் என்று சொல்லிக் கொண்டார்கள். குறும்புக்காரர்கள் சிலர் மாத்திரம் நான் வேறுவித ஞானத்திற்காக பாடுபடுகிறேன் என்று சொன்னார்கள். சசிகலாவும் எனக்கு உற்சாக மூட்டும் தோரணையில்தான் பழகி வந்தாள். எனக்கு முன்னிருந்த வெளி உலகம், வாழ்க்கை லக்ஷியம், படிப்பு, எல்லாவற்றையும் அவள் மோகனப் புன்னகை மூடிவிட்டது.

காதல் தென்றல் அவைகளை காணமலடித்து விட்டது. அவள் அழகின் போதை அவைகளை அறவே மறக்கச் செய்தன அவள் அன்பின் ஆழத்தையோ, மனதிடத்தையோ, விஷப் பரீக்ஷைகளுக்கு உள்ளாக்கி ஏமாற்றத்தை அடைய நான் விரும்பவில்லை. அவள் என்னைக் காதலித்தாள் என்று நம்பினேன். அந்த நம்பிக்கைக்கு ஈடாக என் வாழ்க்கையையே பணயம் வைக்கத் தயாராகவுமிருந்தேன். எங்கள் காதல் சோலையில் கரடு முரடான பாதையில்லை. புல் வெளியும் ரோஜாப் புதர்களும், தென்றலும் உள்ள சுவர்க்கமாகவே இருந்தது. என் மூன்றுவது வருஷ கலாசாலைப் படிப்பு மூன்று விநாடிகள் போல் கழிந்து விட்டன. இன்னும் ஓர் வருஷத்தைக் கழித்து பரீட்சையின் வெற்றியைப் பற்றிக் கவலைப் படாமல் சசிகலாவின் சாஸ்வதமான காதலை லக்ஷியமாக வைத்துக் கொண்டு வெளி வுலகத்திற்குப் போய்விட வேண்டுமென்று என் மனது என்னைத் தூண்டிக் கொண்டே இருந்தது. காலசக்கிரம் எங்கள் காதல் கோவிலுக்கு சரியான அஸ்திவாரத்தை அடிகோலியிருந்த தென்றே நான் நம்பினேன். துன்பம் சாசுவதமோ என்னவோ, ஆனல் இன்பம் மாத்திரம் சாசுவதமே இல்லை. என் இன்பம், கடும் துன்பமாகக் கணப் பொழுதில் மாறி விட்டது.

இயற்கையாக உலகத்திலேயே பொறாமை ததும்பித்தானே நிற்கிறது! மாசு மறுவற்று களங்கமில்லாமல் காயும், சந்திர சூரியர்களை ராகுவும் கேதுவும் மறைக்க வில்லையா? எங்கள் காதல் ஜோதிக்கு கேதுவாக வந்து சேர்ந்தான் சந்திரசேகரன். என் வகுப்பில் வாசிக்கும் அவன், சசிகலாவிற்கு மிகவும் தூர உறவு என்று சொல்லிக் கொண்டான். என் மேல் அவன் பொறாமைப் படுவதற்கு காரணம் நான் சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டாமல்லவா? என்மேல் சுலபமாக வஞ்சம் தீர்த்துக் கொள்ள அவனுக்கு சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அவைகளை சாமர்த்தியமாகப் பயன் படுத்திக் கொண்டான்.

ஒரு நாள் என்னுடன் ரசாயன வகுப்பில் சேர்ந்து படிக்கும் பரிமளா 'அவசரம். வாசகசாலையில் சந்திக்கவும்' என்று ஓர் சீட்டு அனுப்பியிருந்தாள். அந்த சீட்டை என் கவனப் பிசகினல் எங்கோ துலைத்து விட்டேன். அன்று சாயங்காலமே பரிமளாவை வாசக சாலையில் சந்தித்தேன். அவள் முகம் வெளிறிப் போய் மிகவும் துக்கப்பட்டவளாகக் காணப்பட்டாள். "மிஸ்டர், ஒரு ரகசியம், நீங்கள் தான் உதவ வேண்டும்" என்று கெஞ்சும் குரலில் வேண்டினள். எனக்

கொன்றும் புரியவில்லை. மேலும் தொடர்ந்தாள். "நேற்று என் தகப்பனரிடமிருந்து நூறு ரூபாய் மணியார்டர் வந்தது. அதை ஹாஸ்டலிலுள்ள என் அறையில் வைத்திருந்தேன். இன்று காலையில் அதைக் காணேம். அறையில் என்னுடன் சரோஜாதான் இருக்கிருள். சமாசாரம் வெளிப்பட்டால், சரோஜாவைத்தான் நான் சந்தேகிப்பதாய் ஏற்படும். ஆகையால் நான் இதை வெளியே சொல்ல இஷ்டப்படவில்லை. இன்று சம்பளம் கட்ட வேண்டிய கடைசி நாள். நீங்கள் தயவு செய்து நூறு ரூபாய் தயார் செய்து கொடுத்தால் நான் எப்படியும் ரகசியமாக என் தாயாருக்கு எழுதி வாங்கிக் கொடுத்து விடுகிறேன்" என்ருள். அவள் நிலைமை எனக்குப் புரிந்தது. அன்று மாலைக்குள் அவளுக்கு ஏற்பாடு செய்து பணம் தருவதாய் வாக்களித்தேன். அவள் மறுபடியும் இந்த சமாசாரம் ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று வற்புறுத்தினள்.

நாங்கள் இருவரும் வெகுநேரம் தணிந்த குரலில் பேசிக் கொண்டிருந்ததை தன் கற்பனைத் திறமையுடன் சசிகலாவிடம் வர்ணித்திருக்கிருன் சந்திரசேகரன். பரிமளா எழுதிய சீட்டு, என்னுல் எங்கேயோ போடப்பட்டு, சந்திரசேகரன் மூலம், சசிகலாவின் கைக்கு போயிருந்தது. மறு நாள் காலையில் சசிகலா இதைப்பற்றி என்னிடம் கேட்டாள். பரிமளாவின் சினேகிதி சரோஜா, சசிகலாவிற்கு மிகவும் வேண்டியவள் ஆகையால் நான் உண்மையை வெளியிட இஷ்டப்படவில்லை. அவள் ஏதோ புஸ்தகம் கேட்டதாகவும் வேறென்றுமில்லையென்றும் மழுப்பினேன். சசிகலா பதில் சொல்லாமல் போய் விட்டாள். அவள் பார்வையில் அவநம்பிக்கை பிரதிபலித்தது. அவள் முக பாவத்திலிருந்து, அவளை பொருமைப் பேய் வலுவாகப் பிடித்துக் கொண்டு விட்டது என்று தெரிந்தது. அதன் பிறகு நான் எவ்வளவோ முயற்சித்தும் அவள் என்னுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை. நான் இன்பமேகங்களிலிருந்து துன்பசாகரத்திற்குள் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

வெற்றி அடைந்தோருக்கு மேலும் மேலும் வெற்றி கிடைப்பது சகஜந்தானே! சந்திரசேகரனுக்கு மேலும் ஓர் வெற்றி கிடைத்தது. சில பொறுப்பில்லாத மாணவர்கள், பரீட்சை நாட்களை ஒத்திபோட வேண்டுமென்று திட்டம் செய்து நடத்திய வேலை நிறுத்தத்தில், சில சாக்ஷியங்களை ஜோடனை செய்து சம்பந்தமே இல்லாத என்னை, அதில் பங்கெடுத்துக் கொண்டதாக ஓர் வதந்தியைப் பரப்பினன். அதன் பலனுக, நான் எவ்வளவோ நிரபராதி என்று நிரூபிக்க முயன்றும், முடியாமல் கலாசாலையிலிருந்து வெளியே அனுப்பப் பட்டேன்.

எனக்கு வாழ்க்கை சப்பென்று போய் விட்டது. எதிலெல்லாம் நிரந்தர இன்பத்தைக் காண கனவு கொண்டிருந்தேனே அவைகளையெல்லாம் இப்போது காணவே பிடிக்கவில்லை. கலாசாலையை விட்டு வெளியேறிய பிறகு ஒரு நாள் நான் சசிகலாவை சந்திக்க நேர்ந்தது. அப்போதாவது, அவளிடம், பரிமளாவின் வேண்டுகோளைப்பற்றிச் சொல்லி அவளை சமாதானப் படுத்தலாமென்று நினைத்தேன். ஆனல் அவள் முகத்

தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு என்னைப் பார்க்காதவள் போல் காரில் போய் விட்டாள்: எவ்வளவு அன்பு வைத்தென்ன? பொறாமையின் முன் அவைகள் எல்லாம் எம்மாத்திரம்! என் ஹிருதயத்தில் அவளுக்கு இன்னும் இடம் இருக்கத்தான் இருக்கிறது.

கலாசாலையிலிருந்து வந்த சில நாட்களுக்கெல்லாம் எனக்கு தபால்இலாக்காவில் உத்தியோகம் கிடைத்து விட்டது. மனதைத் தேற்றிக் கொண்டு பழைய ஏமாற்றங்களை மறக்கத்தொடங்கினேன். புது ஏமாற்றங்களுக்கு நான் ஆளாகத் தயாராகவில்லை. ஒரு வருஷத்திற்குப் பிறகு தினசரிப் பேப்பர்களிலிருந்து மிஸ் சசிகலா, மிஸஸ் சசிகலா கோபாலன் ஆக மாறிவிட்டாள் என்று தெரிந்து கொண்டேன். நான் கட்டியிருந்த மனக் கோட்டைகளை இந்த சமாசாரம் தகர்த்தெறிந்து விட்டது. என் ஏக்கம் தீராத ஏக்கமாக மாறிவிட்டது.

என் ஏமாற்றத்தைத்தான், பெயர்களை மாற்றி 'கலாதேவியில்' எழுதியிருந்தேன். அந்தப் பத்திரிகை ஓவியக்காரர் சசிகலாவை நேரில் பார்த்ததுபோல் படம் வரைந்திருந்தார். சசிகலாவின் போட்டோ மாதிரியே இருந்தது. அதுதான் என் சிந்தனையை சிதற அடித்து விட்டது. பிரமையில் ஆழ்த்தியது.

கடிகாரத்தில் மணி இரண்டு அடித்தது. பக்கத்திலிருந்த தந்தி இயந்திரம் கட்கட என்று என்னுடைய ஆபீசைக் கூப்பிட ஆரம்பித்தது. புஸ்தகத்தைஎடுத்துஎழுத ஆரம்பித்தேன். ''ஸ்ரீமான் ராஜகோபாலன்......ஹில்ஸ். சசிகலாவுடன் நாளைக்கு மறுநாள் வருகிறேன். ஒருமாதம் தங்குவோம் இப்படிக்கு கோபாலன்.'' என் உடம்பில் ரத்தம் உறைந்து விட்டது போலிருந்தது. என்ன அசாதாரணமான சம்பவங்கள், மான சதந்தி என்கிறார்களே அது தானே! என்னவோ! அவள் கதை, அவள் சித்திரம், அவள் நிஜவருகை, எல்லாம் ஓர் விசித்திரக் கனவாகத் தென்பட்டது. அவளை மறுபடியும் பார்க்க வேண்டும் என்றது ஆசை. பார்க்கக் கூடாது என்றது மனம். இந்த விவாதத்திற்கிடையில், நான் மறுபடியும் பிரமையில் ஆழ்ந்து விட்டேன்.

197241

மிகச்சிறந்த ஆயுர்வேத ஒளஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபிஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபிஸ்கள் :

எஸ்பிளனேட் — திருவல்லிக்கேணி
மயிலாப்பூர் — தியாகராயநகர்
புரசவாக்கம் — மவுண்டுரோடு
எக்மோர்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட ,, ,, 44,42,662
ரிஸர்வ் நிதி ,, 49,50,000
டிபாஸிட்டுகள் 31—12—45 முடிய ரூ. 13½ கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபிஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

★

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.